அல்லியரசாணிமாலை

1929

ஸ்ரீராமஜெயம்.

புதிதாய் வெளிவந்திருக்கிற

பூர்வ சரித்திர புஸ்தகங்கள்.

அன்பர்களே!

நமது தேசத்திற் பிறந்து தமது ஒழுக்கம், கற்பு முதலிய நல்லறங்களை நிலைநாட்டிய பெரியார் சரிதங்களை உள்ளது உள்ளவாறு படித்துணரவும், அவற்றை அரங்கமேடையில் "இது புண்ணியநாடு" என்பதை யாவரும் ஒப்புக்கொள்ளும் வண்ணம் உள்ளது உள்ளவாறு நடத்திக் காண்பிக்கவும் விரும்புகிறீர்களா?

பழந்தமிழ் நூல்களில் ஒன்றாகிய "சிலப் பதிகாரக்காதை" எனும் கோவலன் சரிதையை முற்றிலும் அவனது பெருந்தன்மைக்கு மாறுபட்ட வகையாக மாற்றப்பட்டு நீண்டகாலமாக நாடக மேடையில் நடத்திவருவது போல் அல்லாமல், அவர்களது பெருந்தன்மை கற்பொழுக்கம் முதலிய வற்றை உள்ளது உள்ளவாறு படித்துணரவும், படிப்பதற் கவகாசமற்ற தமிழ் மக்களும் அறியுமாறு அவற்றைத் தேனெனத்தித்திக்கும் திவ்ய பாடல்களாகவும், பாகெனத்தித்திக்கும் திவ்விய வசனங்களாகவும் நடத்திக் காண்பிக்கவும் கருதுகிறீர்களா?

நமது தேசப் பெரியார் சரித்திரங்களைப் படிப்பதிலிருந்தும் நடத்துவதி லிருந்தும் அவர்களது அரும்பெருஞ் செயல்களைப் படிப்போரும் நடத்து வோரும் நடத்தக்காண்போரும் நேரிற்கண்டபடி கண்டு மனது அவற்றோடு ஈடுபட்டுப் புராதனமான வழக்க ஒழுக்கங்கள், தேசபக்தி, தெய்வபக்தி முதலியனவற்றில் மேலும் முன்னுற நினைக்கிறீர்களா?

அப்படியானால் நமது மதுர வாக்காளர் மதுரைத் தமிழ் வித்வான், ஸ்ரீ நா. கிருஷ்ணசாமி நாயுடவர்கள் எழுதியிருக்கிற தெள்ளிய செந்தமிழ் நடையிலுள்ள அடியிற்கண்ட சரித்திரங்களை ஒருமுறை வாங்கிப் படித்தும் நடத்தியும் பயன் படுத்துங்கள்.

நல்ல தங்காள் சரித்திரம்	1 - 2	பாகங்கள்
ஞானசவுந்தரி சரித்திரம்	1 - 2	பாகங்கள்
நளன் சரித்திரம்	1 - 2	பாகங்கள்
சகுந்தலா சரித்திரம்	1 - 2	பாகங்கள்
சாவித்திரி சரித்திரம்	1 - 2	பாகங்கள்
பாரிஜாதபுஷ்பாபகரணம்	1 - 2	பாகங்கள்
சாரங்கதான் சரித்திரம்	1 - 2	பாகங்கள்
ஸ்ரீகிருஷ்ண லீலா	1 - 2	பாகங்கள்
ஸ்ரீகிருஷ்ணார்ஜுனர்சபதம்	1 - 2	பாகங்கள்

1 - 2 பாகங்கள் அடங்கிய இவற்றின் விலை அணா நாலுதான்,

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

அல்லியரசாணிமாலை.

விநாயகர் துதி. கலிவிருத்தம்.

அடாதழும்முலையாள் திருவாலவாய்த்
தடாதகைபிராட்டியரின் தன்னருள்
கொடாகின்றவல்லிக் கோதையர்சொல்லக்
கடகளிற்றினைக் கைதொழுதேத்துவாம்.

வெண்செந்துறை.

சித்திவிநாயகர்தம் செம்பொற்பதம்போற்றி
முத்தியளிக்கவல்ல முக்கணன்றருள்போற்றி
அஞ்ஞாயனைநீக்கிவிடும் அங்குசநின்றருள்போற்றி
சீராருமல்லிகதை செந்தமிழால்யான்பாட
ஏராருநாவினிலே இசைந்தருள்வாயைங்கரனே.

சுப்பிரமணியர் துதி.

சுத்தமெஞ்ஞானகந்தர் துய்யவடிபோற்றி
பக்தர்தமக்குவரம் பாலிப்போன்றருள்போற்றி
ஆதிபரசிவனுக் கருள்செய்வோன்போற்றி
தீதில்லாமாயனையுந் துணித்தபதம்போற்றி
சூரபத்மன்சிரந் துணித்தபதம்போற்றி
தீரகயமுகனைச் சேதித்ததாள்போற்றி
வன்முகன்றருகனை வாதித்ததாள்போற்றி
பின்முகம்றருகனை பாழ்செய்ததாள்போற்றி
கந்தாகடம்பா கதிர்வேலாயிக்கதைக்குச்
சிந்தாகுலந்தீரச் செய்திடுவாய்கர்த்தாவே.

சரஸ்வதி துதி.

தாராருங்கூந்தல்விழுந் தங்கள்பதம்போற்றி
சூதார்கலைவாணி துங்கப்பதம்போற்றி
துன்னுங்கலைமாதின் இணையடிகளைப்போற்றி
மன்னுசரஸ்வதிதா மரையடிகளேபோற்றி
அல்லிகதையுரைக்க அருள்புரிவாய்மாதாவே
வள்ளிக்கொடியனைய வண்காத்துக்கோதாவே
கஞ்சப்பூபன்மனதிற் கலந்தவளேநீயென்று
நெஞ்சந்தனிற்கலந்து நிகழ்த்துமம்மாயிக்கதையை

வீறுமுலகளந்த மெய்யன்பதம்போற்றி
பஞ்சவற்குத்தூதுசென்ற பங்கயத்தாள்போற்றி
எல்லோரும்வணங்கிடும் இணையடிகளேபோற்றி
இந்தக்கதைதனக்கு எம்பெருமாளேநீரும்

நாட்டுச்சிறப்பு.

தென்பெருஞ்சோலை தென்னவளநாடு
கனியுதிருஞ்சோலை கனமதுரைநன்னாடு
வடகாஞ்சிமுத்திறங்கும் வாணிபத்திற்சீர்த்திமிகும்
தென்காஞ்சிமுத்திறங்குந் தென்மதுரைப்பட்டணமாம்
வாழைவடக்கினும் வான்கமுகுமேற்கினும்
சோலைகிழக்கினுந் துய்யபலாமேற்கினும்
கரும்புயிளநீருங் கண்திறந்துமடைபாயும்
கட்டுக்கலங்காணும் கதிருழக்குநெல்காணும்
அரிதாளறுத்துவர மறுதாள் பயிராகும்
அரிதாளின்கீழாக ஐங்கலத்தேன்கூடுகட்டும்
யானைக்கட்டத்தாளும் வானமட்டும்போராகும்
மாடுகட்டிப்போரடித்தால் மாளாதுசெந்நெலென்று
யானைகட்டிப்பேரடுக்கும் அழகானதென்மதுரை
தாணுகத்தான்வளர்ந்து தழைத்தோங்குந்தென்மதுரை
சோலைமலருடைய சொக்கர்கிருபையினால்
அங்கயற்கண்மீனாட்சி அம்மையருளாலே
மாதமொன்றுமும்மாரி வருஷிக்குந்தென்மதுரை
மும்மாரிபெய்யும் முறைமையுள்ளதென்மதுரை
பஞ்சைபனாதி பரதேசிகிடையாது
பங்கங்கிடையாது பாண்டிவளநாட்டில்
கருப்புங்கிடையாது கனத்ததொருமதுரையிலே
கூலிகுறையாது குறமரக்காலளக்கார்கள்
அங்காடிகூடை யதிகவிலைகூறார்கள்
ஏழைபரதேசி யில்லறங்குடிவாழ்க்கை
தழைத்தோங்கிவாழ்வார்கள் சங்கரன்கிருபையினால்
எங்கெங்கினுமிருந்து ஏழைபரதேசிகளும்
அடுப்பார்பரிஜனங்கள் அந்தமதுரையிலே
மதுரையையடுத்தவர்கள் மகாசெல்வம்பெற்றிடுவார்

பாண்டியன் பெருமை.

நீதிமனுமுறைகள் நெறிதவறுமன்னவனும்
செங்கோல்பிடித்த சித்திராங்கதபாண்டியனும்
மகுடமுடிசூடும் மன்னவன்சிங்காதனத்தில்
தங்கமுடிசூட்டித் தரணிபதியாண்டிருந்தான்

சொக்கர்வலுமையுண்டு துரைராஜபாண்டியற்கு
மீனாட்சிவலுமையினால் மேன்மையுடனாண்டிருந்தான்
ஆறிலொருகடமை யரசனவன்வாங்குவது
சக்கரநெறிப்படையே தரணிதனையாண்டிருந்தான்
சொக்கர்திருவிழாவைச் சோராமற்செய்திடுவான்
ஐயன்திருவிழாவை ஆனந்தமாய்நடத்தி
உலகந்தழைத்தோங்க உத்தமனாண்டிருந்தான்
தாழ்வுகளில்லாமற் றழைத்தோங்கிவாழ்ந்திருந்தான்
அப்படியாகவாழ்ந்து அரசாளும்நாளையிலே

சோழராசன் வறுமை யடைந்தது.

சோழராசன்தன்னாட்டிற் சொர்னகிரிப்பட்டணத்தில்
மழைகள்கிடையாது மன்னனதுசீமையிலே
ஊறல்கிடையாது சோழனதுசீமையிலே
பயிர்கள்விளையாது பறவைகள்நாடாது
குடிக்கசலங்கிட்டாது குருவிகள்நாடாது
தீய்ந்தனபயிர்களெல்லாம் தேசங்களத்தனையும்
காய்ந்தனமரங்களெல்லாம் கனிகள்கிடையாது
ஏரிகுளங்கள்தனி லிறைக்கசலங்கிட்டாது
பூமிதனிற்புல்லு பூண்டுங்கிடையாது
சருகுபோலுலர்ந்தனவே தனிச்சோழன்பட்டணத்தில்
அன்னங்கிடையாது அரிதானபரிசனங்கள்
சோறுகிடையாது சோழனதுசீமையிலே
எல்லாரும்பரதேசி யேழைகளாய்ப்போனார்கள்
பெண்டுடனேபரதேசி புருஷசனங்களெல்லாம்
இனியிருந்தாலிவ்விடத்தி லிறந்துமடிவோமென்று
சொல்லாமலோடுகிறார் சோழராசன்சீமைவிட்டு
வலசைவாங்கிப்போனார்கள் மன்னர்பரிசனங்கள்
குடிவலசைவாங்கினார் குடித்தனக்காரரெல்லாம்
அண்டிப்பிழைக்கவென்று அல்லவருமோடிவிட்டார்
வந்துமிகச்சேர்ந்தார்கள் மதுரைவளநன்னாட்டில்
பாண்டியன்தேசமதிற் பரிசனங்கள்வந்தடுத்தார்
அப்போதுசோழன் அவனுடையபட்டணங்கள்
பாழடைந்துபோயிற்றே பரிசனங்கள்வந்தடுத்தார்
சோழனதுசீமையிலே அற்குறியடைந்தனவே
பன்னிரண்டுதன்வருஷம் பாரில்மழையில்லாமல்
மாடுகள்கிடையாது மணிதருங்கிடையாது
தங்கநிழல்கிடையாது தரித்திரமேபெரிதாச்சு
என்னசெய்வேனென்று எண்ணமிட்டான்சோழனவன்

வாடிமனந்தளர்ந்தான் வாடும்பயிரதுபோல்
செடியின்கீழ்ப்புல்லதுபோற் செழுத்ததிருமுகங்கள்
களர்நிலத்துப்புல்லதுபோற் கருகிநிறங்குலைந்தான்
எண்ணுதுமெண்ணி யேங்கிமனந்தளர்ந்து
யாரையடித்தோமோ அநியாயஞ்செய்தோமோ
கூலிகுறைத்தோமோ குறைமரக்காலிட்டோமோ
பஞ்சைபனுதிகளைப் பறக்கடித்தோட்டினேமோ
அந்தணர்வேதியற்கு அபசாரஞ்செய்தோமோ
தெய்வத்தின்செயலோ திருவுளத்தின்சோதனையோ
ஆரையடுப்போம் அண்டிப்பிழைத்திடுவோம்
எவரையடுப்போம் இக்குறையைத்தீர்த்திடுவோம்
தேசமும்பாழாச்சு ஜெனங்களெல்லாம்பறிபோச்சு
அல்லவரும்போயடுத்தா ரணிமதுரைப்பாண்டியனை
பாண்டியன்தேசம் பதவியடைந்ததுகாண்
சொக்கர்கிருபையினுற் சுகமாயிற்றுதென்மதுரை
தெய்வச்செயலாலே சீர்பெற்றுன்பாண்டியனும்
நாமுமவருடைய நாதரடிகள்பணிந்து
பாண்டியனனுமதியாற் பகவானைநாம்வணங்கி
பாண்டியனைக்கண்டு பகவானுக்கறிக்கையிட்டு
ஐயர்கிருபையினு லதிஷ்டம்பெறவேண்டும்
இதுதான்வயணமல்லால் இதைவிடவேறேயுண்டோ
மகாதேவர்கண்திறந்தால் மழைக்குக்குறைச்சலுண்டோ
தழைத்திருக்குஞ்சீமையென்று தரணிபதிஎழுந்திருந்தான்
மதுரைக்குப்போகவென்று மன்னனெழுந்துவந்தான்
சிநேகந்தான்செய்வோம் தென்மதுரைப்பாண்டியனை
என்றுபயணமிட்டா னிடறுதனைத்தான்தொலைக்க
கொஞ்சமுள்ளசேனைகளைக் கூடத்துணையாக்கி
பூவின்முடிதுலங்க பொன்னுபரணமின்ன
வாளுங்கடகமும் வயிரமணிடால்துலங்க
புரவியின்மேலேறிப் புறப்பட்டான்சோழனவன்

சோழராசன் பாண்டியனைக்காண்கிறது.

பாண்டியன்தேசத்திற் பக்குவமாய்வருகிறுனே
வெகுதூரமாய்நடந்து வேஷ்டைகள்தான்பட்டு
தொலைதூரமாய்நடந்து தென்மதுரைவந்தானே
மதுரைவளநாட்டில் வந்துவிட்டான்சோழனவன்
கோட்டைக்குள்ளேநுழைய கொற்றவனுஞ்சோழனவன்
தூதுவர்களோடிப்போய்ச் சொன்னுர்கள்பாண்டியற்கு
சந்தோஷங்கொண்டு தனிமதுரைப்பாண்டியனும்
வரச்சொல்லுமென்று மன்னன்கொலுவமர்ந்தான்

அதாதாவர்வந் தறிக்கையிட்டார்சோழனுக்கு
ஜெகத்தைத்தேடிக் கொற்றவனுந்தானடந்து
பயனைக்கண்டு பரிவுடனேதெண்டனிட்டான்
டெனிடசோழனுமே சித்திராங்கதராஜன்
திட்டெழுந்திருந்து சிங்காதனமேடைவிட்டு
கைகளையெடுத்துக் கும்பிட்டான்பாண்டியனும்
கட்டித்தழுவிக் களிகூர்ந்துறவாடி
கூட்டிவந்துகொலுமுகத்திற் கூடவுட்காரவைத்தான்
இட்டசிம்மாதனத்தி லிருந்தானேசோழராசன்
சோழன்முகம்பார்த்து சொல்லுகிறான்பாண்டியனும்
எங்கேவந்தீர்என்னசெய்தி என்னுயிர்க்குயிர்சோழா
அவசரமாய்வந்ததென்ன ஆட்கள்படையில்லாமல்
எந்தனுக்குத்தான்தெரிய இயம்பிடுங்காணென்றுரைக்க

சோழராசன் பாண்டியனிடத்திற்சொல்வது.

அவ்வார்த்தைதான்கேட்டு அப்போதுசோழனவன்
தனக்குள்ளவருத்தமதைச் சாங்கமாய்ச்சொல்லலுற்றார்
பன்னிரண்டுவருஷமாகப் பாரில்மழையில்லாமல்
தவிக்கிறதேயுலகந் தாங்கமுடியவில்லை
திருவகிக்கவொட்டாமல் ஜனக்காமலோடிவிட்டார்
கருகிறதேபூமியெல்லாம் கம்மிற்றேராச்சியங்கள்
தாளமுடியவில்லை தனிமதுரைப்பாண்டியரே
நானினைத்துப்போனால் நன்மையோவுந்தனுக்கு
உம்முடையராச்சியந்தா னொருகுறைவுமில்லாமல்
தாழ்வுகளில்லாமல் தானியங்கள்தான்தழைக்க
தேசஞ்செழிக்கச் சிறப்புடனேநீர்வாழ்க
எளியவன்போலேதான் இந்தச்சிறுமைபட
பார்க்கமனம்வந்ததோ பாராளும்பாண்டியரே
என்-தேசஞ்செழிக்கச் செனங்களுமீடேற
அவ்வளவுநீருதவி யனுக்ரகஞ்செய்தாலே
நன்றிமறப்பேனோ நானுள்ளநாள்வரைக்கும்
சகாயமறப்பேனோ சந்திராதித்தருள்ளளவும்
உதவிமறப்பேனோ ஊழியுள்ளநாள்வரைக்கும்
இந்தசகாயமதை எப்போதும்யான்மறவேன்
சஞ்சலந்தீரவைப்பாய் தனிமதுரைப்பாண்டியனே
அவ்வசனங்கேட்டு அழகுள்ளபாண்டியனும்
சோழன்முகம்நோக்கி சொல்லுவானோர்வசனம்
என்னாலேயாகுமோ இவ்வுலகந்தான்றழைக்க
நம்மாலேயாவதுண்டோ நாடுகள்தழைத்தோங்க
உன்னாலுமென்னாலு முலகந்தழைக்குமோதான்

தேவாதிதேவர் திருவருள்தானிருந்தால்
நாதரதுதயவு நமக்குத்தானிருந்ததென்றால்
சொக்கரதுதயவால் தொல்லுகந்தான்றழைக்கும்
அவருடையசெயலல்லா லரசனாலாவதுண்டோ
தெரியாதோவுந்தனுக்குத் தெளிவறிந்தசோழமன்னா
நாதராலென்னுடைய நாடுதழைத்ததென்றான்
அவ்வசனங்கேட்டு அருஞ்சோழனேதுரைப்பான்
உமதுதயவாலே உரிமைபடவெந்தனுக்கு
நாதருக்குசொல்லி நாடுதழைக்கவையும்
சொக்கருக்குசொல்லித் தேசஞ்செழிக்கவையும்
என்றுமிகவேண்டினான் இராஜனந்தபாண்டியனை
அப்படியேநல்லதென்று ஆனதொருபாண்டியனும்
வந்ததொருசோழனுக்கு வகையாய்விருந்துசெய்து

பாண்டியனும் சோழனும் சொக்கரைப்பணிதல்.

இருவருங்கூடியே ஈஸ்வரரதுஆலயத்தில்
சொக்கரதுகோயிலுக்குத் துரிதமுடன்வந்தார்கள்
ஈசரதுசந்நிதிக்கு இன்பமுடன்வந்தார்கள்
சுவாமியைக்கண்டு தொழுதடிகளைப்பணிந்தார்
இருவருமேயடிபணிந்து ஈசரைத்தோத்தரித்து
தும்பைமலர்சூடுகின்ற சொக்கரைத்தோத்தரித்து
ஆலவிடமுண்ட ஐயரைத்தோத்தரித்தார்
நஞ்சையமுதுண்ட நாதரைத்தோத்தரித்தார்
இடறுதனைநீக்கிவிடும் ஈசனேசரணமென்றார்
அப்போதுசொக்கலிங்கர் அந்தமொழிகேட்டு

சொக்கலிங்கர் சொல்வது.

குஞ்சிரிப்புகொண்டவருங் கொடிமுடிகைலாசம்
ஏதுவகையாக இருவருமாய்வந்தீர்கள்
வந்தவிவரமதை வகையாகச்சொல்லுமென்றார்
அவ்வசனங்கேட்டு அழகுள்ளபாண்டியனும்
சொக்கரைச்சேவித்துச் சொல்லுகிறான்ராசனவன்
மதுரையிலேவாழுகின்ற மகாதேவஆண்டவனே
சோழனுக்கு வந்ததொரு துன்பங்களைக்கேளும்
சொல்லத்தொலையாது துயாமிகத்தோன்றுதையா
மழைகள்கிடையாமல் வையகங்கள்பாழாகி
உலர்ந்துதேசருகுபோ லுலகங்களத்தனையும்
வாடித்தவிக்கிறார்கள் மனிதர்களெல்லோரும்
அன்னங்கிடையாது அரசனதுபட்டணத்தில்
சோறுகிடையாது சோழனதுசீமையிலே
மிகவும்வருத்தமுற்றான் வேந்தனிந்தச்சோழராசன்

தயவுபுரிந்தவர்க்கு தற்காக்கவேண்டுமையா
மனதுகனிந்து மழைபெய்யவையுமையா
நாடுசெழிப்பதற்கு நாதரேகண்பாரும்
கண்பார்க்கவேண்டுமென்று கர்த்தரேதெண்டனிட்டோம்

சொக்கநாதர் சொல்வது.

அவ்வசனங்கேட்டு ஆண்டவருமேதுரைப்பார்
அரசர்களேநீங்கள் அஞ்சவேவேண்டாங்காண்
எவனெவன்றன்றனக்கு எந்தவதிகாரமுண்டோ
அந்தவதிகாரம் அவனவனேசெய்கிறது
வருணபகவானு மனதுவைத்தாராமானால்
பெய்யாமழைபெய்து பெருகவைப்பார்பூமியெல்லாம்
வருணனுக்கதிகாரன் வானவர்கோனிந்திரன்காண்
மேகத்துக்கதிகாரன் மேலானஇந்திரன்காண்
தேவேந்திரனுக்குத் தெரிவித்தீராமாகில்
உங்கள்குறைகளை யுரையுங்களிந்திரற்கு
மனதிரங்கவேண்டி வணங்கினீராமாகில்
வருணனைத்தானழைத்து மழைபெய்யவைப்பான்காண்
மேகத்தைதானழைத்து விடைகொடுப்பானிந்திரனும்
இந்திரன் தயவாலே எங்குஞ்செழித்தோங்கும்
அவ்வசனங்கேட்டு அணிமதுரைப்பாண்டியனும்
சொக்கர்விடைகொடுக்கச் சோழனும்பாண்டியனும்
நல்லதென்றுசொல்லி நாதரடிபணிந்து
இருவருமாய்நடந்தார்கள் ஈசரதுகோயில்விட்டு
ஆலயத்தைவிட்டு அப்பால்நடந்தார்கள்

இந்திரலோகங்காண்கிறது.

தெய்வலோகம்போகவென்று சடுதியாய்த்தானடைந்தார்
சோழனும்பாண்டியனும் துருசாய்நடந்தார்கள்
இந்திரலோகத்திற்கு இசைந்துமேவந்தார்கள்
தேவேந்திரலோகத்திற்கு சடுதியில்தானடைந்தார்
அமராபதிதேடி அரசர்கள்தானடைந்தார்
வானுலகங்கிட்டி வருகிறவேளையிலே
ஆயிரங்கண்ணிந்திரனு மமர்ந்தார்கொலுமேடை
முப்பத்துமுக்கோடி முனிவர்களுந்தேவர்களும்
நாற்பத்தெண்ணாயிரம் நலமானரிஷிகளுடன்
கிம்புருடர்கின்னரர் கெருடகாந்தருவருடன்
கின்னரிவீணைகள் கீதங்கள்பாடிநிற்க
மேனகைரம்பையும் மெல்லிதிலோர்த்தமையும்
ஊர்வசிநாட்டியங்க ளுச்சிதமாய்ச்செய்துநிற்க
இந்திராணிதேவியுடன் இந்திரன்கொலுவிருந்தார்
அந்தச்சமயத்தில் அழகுள்ளபாண்டியனும்

சோழனும்பாண்டியனுந் துரிதமாய்வந்தார்கள்
இந்திரன்கொலுதேடி இருவரும்வருகையிலே
கண்டானேயிந்திரனும் காவலர்கள்வருகிறதை
பூலோகராஜாக்கள் பொன்னுலகம்வருகிறார்கள்
நரமனிதராஜாக்கள் நாடிவரக்காரணமேன்
இவர்களாய்வருவாரோ ஈச்சுரனால்வருகிறார்கள்
சொக்கரருள்பெற்றுச் சொர்க்கபதிவாரார்கள்
நல்லதென்றுசொல்லி நலமுடனேபார்த்திருந்தார்
பாண்டியனுஞ்சோழனும் பதிகொலுவில்வந்தார்கள்

இந்திரனைக் காண்பது.

சொர்க்கலோகயிந்திரனைச் சோழனவன்பார்த்து
மிகவும்பயந்து மேன்மையுள்ளயிந்திரற்கு
அஞ்சிப்பயந்து அடிதொழுது தெண்டனிட்டான்
சாஷ்டாங்கதெண்டனிட்டான் சசிதேவிநாயகர்க்கு
தெண்டனிட்டசோழனைத் தேவேந்திரன்வாழ்த்தி
வணங்கியசோழனை வாயாரத்தான்வாழ்த்தி
பொற்பீடம்போடுமென்றார் பூலோகச்சோழனுக்கு
எட்டுபடியின்கீழிட்டார்கள்பொற்பீடம்
வந்தமகாராஜன் மன்னன்மனமகிழ்ந்து
அந்தமுள்ளபீடத்தி லமர்ந்தானேசோழனவன்
எதிராகப்பாண்டியனும் இருமாப்புத்தானடைந்து
மதுரையாளும்பாண்டியனும் வணங்காமற்றானிருந்தார்
நம்மைப்போலிவனொருவன் ராஜனல்லோயிந்திரன்தான்
இந்திரனைநாமும் எப்படிவணங்குவது
பூலோகயிந்திரர்போற் பொன்மதுரையாளுகிறோம்
ஈஸ்வரன்கிருபையினா லிப்புவியையாளுகிறோம்
ஈசன்தயவிருக்க இவனைவணங்குவதேன்
சொக்கர்மகத்துவத்தால் தொழாமலேநின்றான்
எதிர்நின்றபாண்டியனை யிந்திரனுந்தான்பார்த்து
வந்திருக்கும்பாண்டியன்றான் வணங்காமலிருப்பதென்ன
நம்மைமதிக்கவில்லை நாடாளும்பாண்டியனும்
எதனால்மதியாம லிருக்கிறான்பாண்டியனும்
சொக்கர்வலுமையினாற் றொழாமற்போனானே
நாதராதயவாலே நம்மைமதிக்கவில்லை
பூலோகமன்னனுக்குப் பெருமைகள்தானுமுண்டோ
கெருவம்படைத்தோர்க்குக் கேடுவருந்தெரியாது
இவனுடையகெர்வத்தை இனியடக்கவேண்டுமென்று
நல்லதனத்தாலே நடுங்கவைக்கவேண்டுமென்று
உபாயத்தினாலே ஒடுங்கவைக்கவேண்டுமென்று
மர்மத்தைக்கொண்டாரும் வானவர்கோனிந்திரனும்

ஆடாதூதுவர்கள் அருகிருக்குங்காவலரோ
சரியொத்தபாண்டியற்குச் சரிபீடம்போடுமென்றார்
பதிராசப்போட்டதொரு பீடான ஆசனத்தில்
ருத்துமென்றார்பாண்டியனைக் கொலுமேடையாசனததில்
சரிபாகமுட்கார்ந்தான் தனிமதுரைப்பாண்டியனும்
ஆடாதூதுவரே அரசாளுமன்னனுக்கு
வந்ததொருமன்னனுக்கு மாலையொன்றுபோடுமென்று
கண்காட்டயிந்திரனுங் கனமுடனேமல்லருக்கு

இந்திரன் பாண்டியனுக்கு கெண்டி மாலை சூட்டினது.

பாண்டியராஜனுக்கு பதித்தமுத்துகெண்டியொன்று
ஆயிரம்பேர்சுமக்கும் ஆணிமுத்துகெண்டியொன்று
கொண்டுவந்துபோடுமென கொடிமதுரைபாண்டியற்கு
சூட்சமாயொருமாலை சோழனுக்குப்போடுமென்றார்
அப்படியேயோடினார்கள் அந்தப்புரந்தானுழைந்து
ஆயிரம்போமல்லரவருள்பிடித்துத்தோளூன்றி
நெக்கியெடுத்தார்கள் நேரானகழுத்துகெண்டி
இத்தோடேபாண்டியன்றான் யிரல்நடுங்கிடுவான்
தூக்கிக்கொண்டுவந்தார்கள் சூரரந்தமல்லர்களும்
இந்திரன்கண்காட்ட எதிர்வந்தார்மல்லர்களும்
பாண்டயற்குவெகுமதியாய்ப் பார்மன்னன்சூடுமென்றார்
போட்டார்கள்கழுத்திலேதான் போர்மல்லராயிரம்பேர்
அப்பெரியமாலையைத்தான் அழகுள்ளபாண்டியனும்
சாதுராதிருணையினால் நடுக்கங்களில்லாமல்
சொக்கரைத்துதிசெய்து தோளிலேதாங்கிக்கொண்டான்
மார்பைநெளித்துமே மாலையைத்தாங்கிக்கொண்டான்
கண்டார்களெல்லோருங் கனமானபாண்டியனை
தேவேந்திரன்கண்டான் சிறப்புள்ளபாண்டியனை
இவனாலேயொன்றுமில்லை யீசரதுதன்பலந்தான்
அறிவோமிவனுடைய ஆங்காரவலுமையென்று
பாண்டியன்மேலேயல்லோ பகைவைத்தானிந்திரனும்
சோழனும்நீருமாய்ச் சொர்க்கபதிவந்ததென்ன
வந்தவயணமதை வகைபிரித்துச்சொல்லுமென்றான்
அப்போதுபாண்டியனும் அருள்புரிந்தேதுசொல்வான்
வந்தனதுகாரியமா யிவ்விடத்தில்வந்ததில்லை
சோழனுக்காயிங்குவந்தேன் சொர்க்கபதியிந்திரனே
அவ்வரசனாலவல்கொண்டு அமரர்பதிவந்தேனென்றார்
தொந்தரைகள்படுகிறானே சோழனிந்தமன்னவனும்
மழைமாரியில்லாமல் வருத்தங்கள்மிகவாகி
சோழதேசத்தில் கருகுதேபூமியெல்லாம்

பரிசனங்களெல்லவரும் பரதேசியானார்கள்
பன்னிரண்டுதன் வருடம் பாரில்மழையிடையாது
அந்தவிசனத்தாலே அடுத்துவந்தாரெந்தனையும்
என்றாலேயாகாதென்று ஈசரண்டைபோயுரைத்தேன்
உம்மண்டைபோகவல்லோ வுத்தரவுசெய்தார்காண்
ஈசர்விடைபெற்றுமல்லோ யிவ்விடத்தில்வந்தோம்யாம்
உம்மாலேயானுமல்ல வுதவிபெறவேண்டுமென்றான்
அந்தமொழிகேட்டு ஆயிரங்கண்ணிந்திரரும்
சோழன்முகம்பார்த்துச் சொல்லுவாரிந்திரரும்
எதுக்குமஞ்சாதே யின்னமுள்ளமன்னவனே
ஈசர்தயவாலே இனியசவுக்கியமுண்டு
அப்படியேசெய்விப்பேன் அஞ்சாதேசோழமன்னா
நெறிமுறைதானறிந்த நீதியுள்ளமன்னவனே
நாதரதுவார்த்தைக்கு நாமென்றுபேசுவோமோ
அப்படியேயானடப்பேன் அரசனேநடவுமென்றார்
தேவேந்திரன்சொல்லத் திடுக்கிட்டெழுந்திருந்து
சாஷ்டாங்கதெண்டனிட்டுச் சரணமென்றடிபணிந்தார்
வாழ்த்திவிடைகொடுத்தார் வானவர்கோனிந்திரனும்
உத்தரவுபெற்றனே வுலகாளும்சோழமன்னன்
பாண்டியனுமப்போது பக்குவமாயெழுந்திருந்து
இந்திரரேவிடைதாரு மெங்களிருவருக்கும்
போய்வாருமென்றுசொல்லி போகவிடைகொடுத்தார்
ஆனந்தமாய்பூரித்து அரசர்களிருவருமாய்
தெய்வலோகம்விட்டுமல்லோ திரும்பினார்பூலோகம்
மதுரைவளநாட்டில் வந்தார்களிருவருமாய்
சோழனுக்குவெகுமதிகள் செய்தந்தபாண்டியனும்
அனுமதிகள்பெற்றுக் அனுப்பிவிடைகொடுத்து
பாண்டியன்விடைபெற்றுப் பார்மன்னன்சோழனவன்
சொக்கரைதரிசித்துச் சோழன்நடந்துவிட்டான்
தன்னுடையராச்சியத்திற் றனஞ்செயனும்போய்நடக்க
இப்படியாய்ச்சோழ னிருக்குமந்தவேளையிலே

இந்திரன் கோபித்துச் சோழன் பெருமைபடவும்
பாண்டியன் சிறுமைபடவுஞ் செய்வது.

ஆகாயவிந்திரனு மன்புடனே துசெய்தார்
பாண்டியன்வந்ததுவும் பார்சோழன்வந்ததுவும்
தன்னைவணங்காமற் றயிரியமாய்ப்போனதுவும்
நரனுணபாண்டியன்று னம்மைவணங்காததினால்
மதியாமற்போனவனை மட்டடக்கவேணுமென்று
கோபங்கள்கொண்டாரே கொழுந்தனல்போலிந்திரனும்
எறிபறக்குகண்களுடன் இந்திரனுரேதுசொல்வார்

மேகங்களைமழையும் மேன்மையுடன்வரவழைத்து
சப்தமேகமத்தனையும் சதிராய்வரவழைத்து
வருணபகவானை வரவழைத்திந்திரனும்
கேளுங்கள்மேகங்களே கீர்த்தியுடனென்வார்த்தை
இன்றுமுதலாக கடம்பவான்மதுரையிலே
கால்வைக்கக்கூடாது கருமேகம்நீங்களெல்லாம்
அன்னீதவான்மதுரையிலே அடிவைக்கலாகாது
தூரல்விழப்போகிறீர்கள் துன்மார்க்கன்மதுரையிலே
எடுத்தடிவையாமல் இழைந்துமழைபெய்யுங்கள்
அவளுடையபூமிதனி லடிவைக்கலாகாது
மதுரையிலேநீங்களும்போய் மழைபெய்தீராமானால்
கால்விலங்குங்கைவிலங்கும் கழட்டாப்பெருவிலங்கும்
தாள்விலங்குந்தோள்விலங்கும் தரிக்காப்பெருவிலங்கும்
விலங்குகள்போட்டுமல்லோ வெட்டியெறிந்திடுவேன்
என்வார்த்தைதனைத்தடுத்து வருஷிக்கப்போகிறீர்கள்
சோழனதுசீமையிலே சொர்ணமழைபெய்திடுங்கள்
மாதமும்மாரி வருஷியுங்கள்சோழனுக்கு
முப்போகந்தான்விளைய மும்மாரிபெய்திடுங்கள்
கருப்புத்தெளியவேதான் கருமேகம்பொழிந்திடுங்கள்
எக்காலுஞ்சோழனுக்கு இடையூறுவாராமல்
அரசனுடசீமையிலே அமர்ந்துமழைபெய்திடுங்கள்
என்றுவிடைகொடுத்தா ரிந்திரனாரப்போது
நல்லதென்றுசொல்லியல்லோ நலமாகமேகமெல்லாம்
மதுரையைநாடாமல் வருகிறதேமேகமெல்லாம்

சோழராசன்பெருமைபட்டது

சோழனதுசீமையிலே சொலிக்கிறதேபெருமழைகள்
கடலிரைச்சல்போலாக கம்மிறதேமேகமெல்லாம்
குமிறியிடித்துக்குடன்கொண்டுபொழிந்தது
இரைச்சலுடனேக ஏகவெள்ளம்பொழிகிறது
சோனைமழைகளது சொரிகிறதேபூமியெல்லாம்
நல்லமழைகளாலே காடுசெழித்ததுவே
பூமிகுளிர்ந்ததங்கே பொய்கைகள்நிரம்பியது
ஏரிகுளம்நிரம்பி புரளுதேயேகவெள்ளம்
மடுக்கள்குளம்நிரம்பி கால்வாய்கள்தானிரம்பி
ஆறுகள்நிரம்புவதா லடைபடுதுவெகுசனங்கள்
கழனிபள்ளம்நிரம்பிக் கால்வாய்கள் தானிரம்பி
ஊற்றுகள்தான்சுரந்து ஓடிற்றேசலவிசையால்
தடாகங்கள்தானிரம்பி தாமரைபூத்ததுபோல்
வயல்கள்நிரம்பியல்லோ வாய்க்காலுந்தானோடி
உலர்ந்தமரங்களெல்லாம் உயிருண்டாய்த்தளிர்த்ததுவே

அடியற்றமரங்களெல்லாம் அன்பாய்துளிர்த்ததுவே
காடுசெடிகளெல்லாம் கனமாகவே துளிர்க்கும்
செடிகள்மரங்களெல்லாம் செழிப்பாய்வளர்ந்திருக்கும்
பூவாமரங்களெல்லாம் பூத்துச்சொரிந்தனவே
செந்நெல்விளைந்தனவே செழிப்பாகபூமியெங்கும்
கிள்ளப்பழுத்ததுவே கிளிகள்வந்துசேர்ந்தனவே
அள்ளப்பழுத்ததுவே அணிகள்வந்து கோதுவன
சோலைகள்சாலைகளுஞ் சூழ்ந்ததடாகங்களும்
குருவியடுத்தனவே குயில்கள்வந்துபாடுவதும்
தாராவும்மயில்களும் தாவிவிளையாடுவதும்
குயில்களிரைச்சலிடுங் கோகிலங்கள் சத்தமிடும்
அன்னங்கள்பேடையது அனேகம்வந்துசேர்ந்ததங்கே
பண்டுபழங்கள்தின்று களித்தனபறவையெல்லாம்
ஏர்கட்டிஉழுவாரும் இளநாற்றுநடுவாரும்
பயிரிடுங்குடிகள் பலப்பட்டபூமியிலே
ஓடுங்குடிகளெல்லாம் ஊர்வந்துசேர்ந்தார்கள்
பரதேசியான பஞ்சைபனுதியெல்லாம்
சோழராஜன்பட்டணத்தில் சுகப்பட்டுவாழ்ந்தார்கள்
பிச்சைக்காரரெல்லோரும் பெருமையடைந்தார்கள்
சோழமண்டலமெல்லாம் சுகமாய்த்தழைத்தனவே
சோழமகாராஜன் தொலைந்தான்விசனமெல்லாம்
கீர்த்தியடைந்தானே கிருபைக்கடலானுன்
இந்திரனைமனந்தனிலே எந்நாளும்நினைந்திருப்பான்
மாதமும்மாரி வருஷிக்கும்நன்னாட்டில்
சோழமகாராசன் சிறப்பாகவாழ்ந்திருந்தான்
அப்படியாகவாழ்ந்தான் அழகானசோழமன்னன்

பாண்டியன் வறுமையடைந்தது.

பாண்டியநாட்டார் பரதேசம்போனார்கள்
மழைகள்கிடையாது மதுரைநகர்சீமையிலே
தூரல்கிடையாது தென்மதுரைப்பூமியிலே
தூரல்விழுவதில்லை சொக்கர்மதுரையிலே
எரிந்துபுகைகிறதே ஈரங்கிடையாமல்
குடிக்கநீரெட்டாது குளங்கள்மடுக்களெல்லாம்
காகங்குடிப்பதற்குக் கரண்டிஜலங்கிட்டாது
ஆறுகுளங்களெல்லாம் அடங்கலும்வறண்டனவே
ஏறிவறண்டனவே எங்குநீரில்லாமல்
பூமிக்குள்சூடெழும்ப பொங்கிற்றேதணலாக
விளைவுகள்கிடையாது வேந்தன்மதுரையிலே
களவுகள்மிகவாச்சு கனமதுரைப்பூமியிலே

பொன்மதுரைநாட்டிலே புழுதியடைந்தது
எருதுபோலுதிர்ந்தனவே தழைத்தமரங்களெல்லாம்
குருவிகளுதிர்ந்தது பூண்டுங்கிடையாமல்
பறவைகள்கிடையாது பாண்டியன்தேசத்தில்
குடிவலசைவாங்கினோர் கொடிமதுரையுள்ளவர்கள்
மக்கள்சமுத்திரமாய்ப் பரதேசம்போகிறார்கள்
அன்னங்கிடையாது அழகுள்ளமதுரையிலே
மதுரையைச்சுற்றி மகாவனங்கள்செடிகளெல்லாம்
காய்ந்துமிகத்தீய்ந்து கரும்புகைச்சல்கொண்டனவே
தண்ணிழல்கிடையாது தனிமதுரைப்பூமியிலே
ஊரிலேயுள்ளவர்கள் உறக்கமுங்கொண்டார்கள்
பாழடைந்தழுகபோனோர் பாண்டியநாட்டிலுள்ளோர்
அன்னவிசாரம் அதுவேபெரிதாச்சு
பன்னிரண்டுவருஷம் பாரக்கருப்பாயிற்று
சரீரப்பெருத்தவர்கள் சல்லடைக்கண்களானார்கள்
பெண்டுடனேபிள்ளை புருஷர்களொருதேசம்
திக்குகள்கெட்டுத் திசையாறிப்போனார்கள்
அப்படியமைந்தது அணிமதுரைப்பூமியெல்லாம்
இத்திறனிலே இடறுகள்நேர்ந்தனவே
அபாரத்துடனே அணிமதுரைப்பூமியெல்லாம்
மழையில்லாமல் வையகந்தானேயோ
என்றுநினைவாயிருக்குமந்தவேளையிலே
மேகம்பொழியுந் தனிச்சோழன்நாட்டினிலே
மேகங்குமுறி மேலாகப்போய்விடுமாம்
மதுரையைநாடாமல் வகையுடனேபோய்விடுமாம்
இப்படியாயேயெப்போது இதிலேயொருமேகம்
கூட்டிமேகமென்று குறுக்கிட்டுவோடும்போது
வருகிறவிசைதனிலே மதுரையென்றுதெரியாமல்
பொழிந்துகொண்டேயோடிற்று போகும்விசையாலே
அந்தமழைவெள்ளம் அணிமதுரைபெருகிற்று
வெள்ளம்பிரண்டது வேந்தன்மதுரையிலே
வைகைப்பெருக்கெடுத்து மாவெள்ளமோடுவதை
அதுகண்டுபாண்டியனும் அவசரமாயெழுந்திருந்தான்
துரிதமாயெழுந்திருந்தான் சுந்தரப்பாண்டியனும்

பாண்டியன் வைகைஆற்றில் அணைகட்டியது.

ஓடுகிறவெள்ளத்தை உள்ளடக்கவேண்டுமென்று
அப்புறம்போகாமல் அணைகட்டவேண்டுமென்று
ஆணைதானவனே அணிமதுரைப்பட்டணத்தில்
வீட்டுக்கொருவோராள் விடுபட்டுவரவேண்டும்
ஆளனுப்பாவிட்டால் ஆக்கினைசெய்வேனென்று

அணைகட்டவரச்சொல்லி அடிபடாதமுக்கென்றான்
அப்படியேதானடித்தான் ஆனதொருசம்புவனும்
அந்தத்தமுக்குக்கேட்ட அணிமதுரையுள்ளவர்கள்
வீட்டுக்கோராள்கள் விடுபட்டுவருகிறார்கள்
அவரவர்கள்தம்முறைக்கு ஆளொருவர்வாரார்கள்
மண்வெட்டிகொண்டு வருகிறார்களணைகட்ட
பங்குள்ளவிதமாகப் பாறைகொண்டோடிவந்தார்
அவரவர்க்குப்பங்குகளில் அளந்துகொடுத்தார்கள்
அளந்திட்டபங்குகளில் அதிலேகுறைவுபட்டால்
பங்குவிதக்காரனைப் பட்டாவுக்கிலாயிடுவேன்
என்றதிட்டஞ்செய்தான் இராசனந்தப்பாண்டியனும்
அவரவர்கள்பங்குவிதம் அணைவருங்கட்டும்போது
மதுரையிலேயொருத்தி வாணிச்சியென்பவளாம்
அவளுக்குயாதொரு ஆண்திக்குதானுமில்லை
அவளுக்கொருபங்கு அணைகட்டச்சொன்னார்கள்
பிட்டுசுட்டுவிற்று பிழைக்குமந்தவாணிச்சி
ஆளுங்கிடையாது ஆருமற்றபாவிநான்
எனக்கிட்டவொருபங்கும் எப்படிக்குச்செய்வேன்யான்
அணைகட்டளந்ததுக்கு ஆளுங்கிடையாது
ஆளில்லையென்றால் அரசனுங்கேட்பானோ
என்றுவிசனமுடனெண்ணியிருக்கையிலே

வாணிச்சிபிட்டுக்கு சொக்கர் மண்சுமந்தது.

அவளுடையவிசனத்தை பார்க்கவேவேண்டுமென்று
அட்டாளுஞ்சொக்கநாயாவரேதுசெய்வார்
ஆளுக்குஆளாகி அணைகட்டவேணுமென்று
ஒட்டனைப்போல உருவெடுத்துச்சொக்கலிங்கர்
தட்டுடனேமண்வெட்டித் தலைமேலேதானெடுத்து
வாணிச்சிபண்கடையிலே வந்துநின்றுவொட்டனாக
ஒட்டனைக்கண்டாளே உத்தமியாள்வாணிச்சி
ஆரடாவொட்டா நீ அணைகட்டவந்தாயோ
என்பங்குக்காளாகி எனக்கணைகட்டுவையா
கட்டுவேனென்றார் கனமதுரையொட்டனவர்
கேட்டதொருகூலி கிருபையுடன்தருவேனென்றாள்
அவ்வார்த்தைகேட்டு அந்தவொட்டனேதுசொல்வான்
கூலிக்குபிட்டுசுட்டு கொம்பனையேநீகொடுத்தால்
உதிர்ந்திடும்பிட்டதனை உத்தமியேநீகொடுத்தால்
பிட்டுக்குமண்சுமந்து போடுகிறேனணையாக
அப்படியேநல்லதென்று அவ்வாணிச்சிக்கிழவி
பிட்டுச்சுடும்போது பிட்டுமுதிர்ந்ததுகாண்

...தம்பிரம்பதனைக் கரகமென்றுதான்சுழற்றி
...முதுகின்மேல் வாங்கியடித்தானே
...அடிபட்டவே ஐயார்தச்சொக்கருக்கு
...த்தங்கள்கொண்டாரே மதுரைச்சொக்கநாதருந்தான்
...புத்தான் அனைவருக்கும்பட்டனவே
...வர்கள் தம்முதுகில் அடிதழும்புநேர்ந்தனவே
...திசைகளும் நிலாந்திரங்களெல்லாம்
அண்டங்கள் ஏழுகளும் ஆகாயமெவ்விடத்தும்
...லிவெச்சுக்கும் தழும்புமிசவுண்டாச்சு
...டியன்முதுகின்மேற் பாரத்தழும்பாயிற்று
...வரும்பயந்தா ரிந்தவடியாலே
...டியனப்போது பயந்துநடுநடுங்கி
...கையந்தப்பட்டனென்று எடுத்துப்பார்க்கையிலே
...யமாய்த்தான் மறைந்தார் வந்ததோரொட்டனவர்
...ன்றேதோ இன்மதுரைப்பாண்டியனும்
...தனிலே ககைத்தான்டி விழுந்தான்
...வொட்டனல்ல மாயாண்டிசொக்கரவர்
...டையாகவேவந்தும் ஆளடிமைசெய்யவந்தார்
தெரியாமற்போச்சுதென்று சிந்தைதளர்வாடி
...னைக்காணாதேமே தெய்வமென்றுபாராமல்
...கிளைக்காணாதேமே மகாதேவனென்றறியாமல்
இந்தவிதிப்பயனை எப்போதுலைத்திடுவோம
இந்தஅநியாயமக்குமல்லோ மதிமோசமென்றுசொல்லி
எந்தவிதத்திலேயும் விடப்போறதில்லை
தெரிந்ததுமக்கென்று தென்மதுரைப்பாண்டியனும்
தெத்துவிசனமாய் விடுதிக்குவந்துவிட்டான்
அழகியசொக்கர் ஆண்டவரைப்போது
ஒட்டனென்றவுருவை உத்தமனார்தான்மறைத்து
ஆலயத்தில்வந்தாரே அட்டாளுஞ்சொக்கலிங்கர்
...த்தத்துடனேயவர் வந்துநின்றாராலயத்தில்
அப்போதுமீனாட்சி யன்னையிலேழுவந்து
ஏதுகாண்கவாயிரே யிப்படிக்குவந்ததென்ன
ஆசிருக்கியவந்தீர் அத்துறையைச்சொல்லுமென்றாள்
கேளுமென்றுபகேப கிளிமொழியேமீனாட்சி
...ணிச்சிக்காகவல்லோ மண்சுமக்கப்போயிருந்தேன்
பிட்டுக்குமண்சுமந்துப் பிரம்படி பட்டுவந்தேன்
அடித்தான்பிரம்பாலென் னங்கந்தழும்பேபா
கொடுத்தான்முதுகின்மேற் கொடும்பாவிபாண்டியனும்
சகாயஞ்செய்யப்போனேன் அபாயம்வந்துசேர்ந்ததுகாண்
அபாயமென்னைச்செய்தவனை ஆதரிக்கப்போறதில்லை

என்றுரைக்கசொக்கரை யெடுத்துரைப்பாள்மீனாட்சி
அறியாமற்செய்தபிழை பெரியோர்மனம்பொறுப்பார்
மறுரூபங்கொண்டல்லவோ மண்சுமக்கப்போனதினால்
ஆளடிமையென்றுசொல்லி அடித்தான்பிரம்பாலே
ஐயனென்றுதானறிந்தா லடிபணிந்துதொழுதிடுவான்
தெரியாதவன்செய்தால் சித்தத்தில்வையாமல்
அதரிக்கவேண்டுமென்றாள் அங்கயற்கண்மீனாட்சி
அவ்வசனங்கேட்டு அழகுசொக்கரேதுசொல்வார்
என்னையடித்தது எல்லோர்க்கும்பட்டதுகாண்
உலகத்துக்கெல்லாம் உரைத்ததேபிரம்படிதான்
சித்தர்கள்முனிவர்கள் தேவருக்கும்பட்டதுவே
வானவர்ரிஷிகளும் தபோதனர்க்கும்பட்டதுவே
சகலஜீவஜெந்துக்கும் தருப்பயிர்க்குமேற்றதுவே
கன்னியர்கள்கெர்ப்பம் கருவுக்கும்பட்டதுவே
இந்தப்பாவங்களும் எப்படித்தொலையுமடி
இந்தப்பழிக்குபெண்ணே மைந்தன்வரம்கால்கொடுக்கேன்
கருவுதரிக்கவேதான் கன்னியரோர்சொல்லக்கேள்
அந்தப்பழிபாவம் அத்தோடேதொலையுமடி
என்றுமிகவுரைக்க எத்திசையும்பேசாமல்
மௌனமாய்த்தானிருந்தாள் மதுரைமீனாட்சியும்
இப்படிச்சிலகாலம் இருக்குமந்தவேளையிலே
பாண்டியநாடு பரிசனங்களெல்லோரும்
அரசனதுநாடு அருமைமழையில்லாமல்
தத்தளித்துப்போகிறதே தனிமதுரைபூமியெல்லாம்
அரசுரைத்தானைக்குத்த அக்காலபாதகனும்
கம்முதேசாட்டிற் செருகுதேபூமியெல்லாம்
மைந்தனுமில்லை போனமன்னவர்க்கு
அப்படியேதுன்பம் அரசனும்பட்டிருந்தான்
ஆறாயம்வணங்காத அக்குனித்திராங்கதனும்
சிறுத்தீதனைச்சொல்லி பெருத்தவனைப்போயடித்தான்
தெய்வசேவையென்று தேசத்தையாண்டிருந்தான்
சொக்கரேசவென்று தோத்திரஞ்செய்திருந்தான்
பன்னிரண்டுதன்னுடைய பாரில்மழையில்லாமல்
தன்மக்களுடனேயங்கே தவிக்கனமுப்பண்ணிவர

சொக்கரும் மீனாட்சியுங் காணவடைந்தது.

மதுரையிலேவாழும் மகாதேவர்சொக்கலிங்கம்
அங்கயற்கண்மீனாட்சி அம்மனும்சொக்கருமாய்
இருவருமப்போது ஏகாந்தசாலையிலே
தேவியைப்பார்த்து சுவாமியவரேதுசொல்வார்
பெண்ணேமீனாட்சி பொற்கொடியேயாலயத்தில்

அப்படிக்குச்சம்மதித்தாள் அரிவையிளமாது
ஆருமறியாமல் அங்கொருவர்காணாமல்
கூடியிணையவந்தான் கோலவிழிமாதரசை
ஆசைகளிர்த்தாளே ஐயன்கொடுத்தவரத்தினாலே
சுகத்துடனேசேர்ந்து துரிதமுடன்பாண்டியனும்
தேவியண்டைபாண்டியனுஞ் சீக்கிரமாய்நடந்திட்டார்
இப்படிச்சிலகாலம் இருக்குமந்தவேளையிலே
அப்போதுநீலகன்னி அரிவையிளம்பிறையும்
மாதமும்பத்தாச்சு வருந்திமிக்கத்தவித்து

நீலகன்னி நீன்முகனைப்பெற்றது.

பிள்ளையைப்பெற்றாள் பேருள்ளமதுரையிலே
மைந்தனைப்பெற்றாள் மாதந்நீலகன்னி
தாதியிற்றீர் சந்ததிபிறந்ததென்று
சந்தோஷங்கொண்டு சர்க்கரைவழங்குகிறார்
நீலகன்னிபெற்றெடுத்த நேரானபாலனுக்கு
நீன்முகனென்று நேர்த்தியாய்ப்பேருமிட்டார்
பிள்ளையில்லாமாளிகையிற் பிள்ளைபிறந்ததென்று
பாண்டியன்தேவி பட்சமாய்த்தான்வளர்த்தாள்
பிள்ளையும்வளர்ந்தது பேரானமாளிகையில்
தாதியின்பிள்ளையென்று சங்கைகொலுசுமிட்டு
காப்புக்கடகமிட்டுக் கனகபணிதான்பூட்டி
வயதுமைந்தாக வளர்ந்துவரும்நாளையிலே
ஐந்துவயதில் அமர்த்தினார்பள்ளியிலே
பண்ணுதமிழ்வித்தை படிக்கவைத்தார்பள்ளியிலே
அம்புபிடிக்கறிந்தார் ஆயுதம்பிடிக்கறிந்தார்
சகலமுங்கற்றுச் சாமர்த்தியமானபின்பு
அவனுக்குவேறே யாண்மனையமர்த்திவைத்தார்
வெள்ளாட்டிபெற்றெடுத்த வீரியநீன்முகனும்
அப்படியாயிருக்க ஆனதொருபாண்டியனும்
நமக்குப்பிள்ளையில்லையென்று ராஜனந்தபாண்டியனும்
சிங்காதனத்தில் செங்கோலுந்தான்பிடிக்க
பட்டணத்தையாள்வதற்கு பாலகனில்லையென்று
விசனத்தைக்கொண்டானும் வேத்தனந்தப்பாண்டியனும்
சித்திராங்கனுடனே சேர்ந்திருந்தபாண்டியர்கள்
ஆறாயிரம்பேர் அணிதிரளாப்பாண்டியர்கள்
அவரவர்களுடன்கூட ஆரார்கள்தான்மலடு
பாண்டிர்களெவரும் பட்டத்தானைதான்மலடு
கொட்டாய்நிறைந்ததொரு குதிரையெல்லாந்தான்மலடு
பட்டிநிறைந்ததொரு பாற்பசுக்கள்தான்மலடு

தொழுவம்நிறைந்ததொரு செல்வாடுதான்மலடு
வரப்பிலேயிருக்கின்ற எலியெல்லாந்தான்மலடு
தெருவிலேகூடுகட்டுஞ் சிறுகுளவிதான்மலடு
தெருவிலேதானிருக்குந் தென்னமரந்தான்மலடு
கொல்லையில்தானிருக்கும் புன்னைமரந்தான்மலடு
வாசலிலேதானிருக்கும் வாழைமரந்தான்மலடு
அழுக்கெடுக்கும்வண்ணானு மம்பட்டனுந்தான்மலடு
வளர்கின்றநாய்களுடன் வாழ்பூனைத்தான்மலடு
மைந்தனுமில்லாமல் மகாபாவியானோர்கள்
பிள்ளைகளில்லாமல் பெரும்பாவியானோர்கள்
மைந்தர்பெறவேண்டுமென்று வருந்தியேபாண்டியர்கள்
சாலைகள்போட்டுவைப்பார் சத்திரங்கள் கட்டிவைப்பார்
நடபாய்த்திருக்குளங்கள் நல்லதண்ணீர்நிறைப்பிப்பார்
தவித்துவருவோர்க்கு தண்ணீர்ப்பந்தல்போட்டுவைப்பார்
பசித்துவருவோர்க்கு பாலமிர்தஞ்செய்துவைப்பார்
ஆலயங்கடோறும் அணிமதில்கட்டிவைப்பார்
காணுதகோவில்கட்டு காணிக்கையனுப்பிவைப்பார்
செங்கல்லைக்கண்டவுடன் தெய்வமென்றுகைதொழுவார்
கருங்கல்லைக்கண்டவுடன் கர்த்தனென்றுகைதொழுவார்
என்னதவஞ்செய்தாலும் ஏதாலும்பிள்ளையில்லை
தவத்திற்குப்போகவென்று தங்கள்மனதிலெண்ணி

நீன்முகனுக்குப் பட்டங்கட்டிப் பாண்டியர்
தவஞ்செய்யப்போவது.

வெள்ளாட்டிபெற்றெடுத்த வேல்வேந்தன்நீன்முகனை
மதுரையயாள்வதற்கு மன்னனுக்குப்பட்டங்கட்டி
நீன்முகனைத்தானழைத்து நீதியுள்ளபட்டங்கட்டி
ஆதிசிவனைநோக்கி அருந்தபசுசெய்யவேண்டும்
மைந்தன்வரத்தைப்பெற்று வருகிறநாள்வரைக்கும்
எல்லியரசாளுமென்று இனியபட்டங்கட்டிவைத்தார்
ஆறுயிரம்பாண்டியர்களையமாரனைவோரும்
ஆண்பெண்ணடங்கலும் அரியதவஞ்செய்வோமென்று
போகிறார்கள்பாண்டியர்கள் பொன்மலையைத்தான்தேடி
வனமாய்வனங்கடந்து வருகிறார்பாண்டியர்கள்
காடுசெடிகடந்து கரியமலைதான்கடந்து
மகாமேருபருவதத்தை மன்னர்கள் சேர்ந்தார்கள்
ஆறுயிரம்பாண்டியரு மவருடையதேவியரும்
கண்ணிரண்டுமூடிக் கையிரண்டுமேந்திக்கொண்டார்
பரமசிவனைநோக்கிப் பாரதவம்பண்ணுகிறார்
மைந்தனைவேண்டியே மாளிகைமறந்தார்கள்
புத்திரனைவேண்டியே பூமிமறந்தார்கள்

பாண்டியர்களேறிவரும் பட்டத்துவெள்ளையானை
ஆறுபேரவருடன் ஆனைதவஞ்செய்கிறது
நாற்காலையெடுத்து நடுவேயோர் தும்பிக்கையில்
தும்பிக்கைநாட்டிச் செய்கிறதுபெருந்தவசு
இப்படியாகவேதா னகோரதவம்பண்ணுகிறார்
அப்போதுபரமசிவன் ஆதிகைலையிலே
ஆவணிமாதத்திற்றான் அன்பானநாளையிலே
பிட்டுத்திருநாளுக்குப் புறப்பட்டார்சொக்கலிங்கம்
தேவாதிதேவருடன் தெருச்சுற்றிவலம்வரச்சே
அரகராவென்றசத்தம் அலைகடல்போல்கோஷமிட
சிவசிவாவென்றசத்தம் தேவருக்குமகாதிடைக்கும்
அந்தச்சத்தங்கேட்டு அங்கையற்கண்ணேதுசொல்வாள்
என்சுவாமியென்குருவே என்னுடையகர்த்தாவே
அரகராவென்றசத்தம் அலைகடல்போல்கேட்கிறது
சிவசிவாவென்றசத்தம் செவியடைக்குதுபோகுதையா
இவ்வனத்தில்மெத்த இறைச்சலென்னஆண்டவனே
என்றுதான்கேட்டாளவி லீஸ்வரனாரேதுசொல்வார்
ஆறும்பாண்டியர்க ளரியதவம்பண்ணுகிறார்
மதுரைநாடாளும் மாபாண்டிநாட்டார்கள்
புத்திரனைவேண்டியே பெரியதவம்பண்ணுகிறார்
கோவிலுக்குப்போவோம் கொம்பனையேயென்றழைத்தார்
இவ்வார்த்தைதான்கேட்டு ஈஸ்வரியுமேதுசொல்வாள்
தவசுபண்ணும்விந்தை சுவாமிநானறியேன்
ஏதுதவம்பண்ணுவா ரீஸ்பரரேபார்ப்போம்
அம்மனுடனே அரனாரும்கூடிவந்தார்
ஆறுபேரவர்க ளருந்தபசுபார்த்தார்கள்
புற்றுமூடிப்போனதுவும் பெருங்கறையானரித்ததுவும்
புல்மூடிப்போனதுவும் புழுதியடைந்ததுவும்
யானைதவசிலே யருந்தவசுபண்ணுவதும்
உற்றுற்றுப்பார்த்தாளே உத்தமியாளீஸ்வரியும்
ஞானபரனாரே ஆறுபேரவர்க்கும்
புத்திரனளித்துவிடும் போராளபாண்டியற்கு
ஆறல்கேள்பெண்மயிலே அரசர்செய்தகொடுமையெல்லாம்
கூவிக்குறைத்தவர்கள் குறைமரக்காலிட்டவர்கள்
அங்காடிக்கடைதன்னை அதிகவிலையிட்டவர்கள்
பட்டைநெற்களிலே பதரைக்கலந்தவர்கள்
பசித்தார் முகம்பாரார் பாலாடைக்குப்பால்வாரார்
தவித்தார் முகம்பாரார் தாகங்கொடுத்தறியார்
ஆண்டிபரதேசியைப்போல் அங்கொருநாள்வடிவெடுத்து
பாண்டியராஜாக்கள் முற்றத்தனிக்கையிலே

சிவதருமமென்று சேர்ந்தவர்தமிச்சையென்றேன்
பதாரணழுத்தெடுத்துப் பாவியெனக்கிட்டார்கள்
சிப்பிழுத்துப்போட்டார்கள் தோஷியந்தப்பாண்டியர்கள்
பதரிட்டபாவிகட்குப் பாலன்பொறிப்பதில்லை
பிட்டுக்குமண்சுமந்தேன் பிரம்படிபட்டுவந்தேன்
என்ன தவம்பண்ணினாலும் எதாலும்பிள்ளையில்லை
எழுபிறப்பிலேயு மிப்பிறப்பும்பிள்ளையில்லை
என்றதுதான்கேட்டு ஈஸ்பரியாளேதுசொல்வாள்
எப்பாவஞ்செய்தாலு மீஸ்பரனேமனமிரங்கி
புத்திரனளிக்கவேண்டும் புகழானபாண்டியற்கு

பாண்டியற்கு ஈஸ்வரி புத்திரிவரங்கொடுத்தது.

உன்சித்தமிரங்காமற் போனாலுமீஸ்பரனே
ஒருபெண்ணாகிலுமளிப்பேன் புகழானபாண்டியற்கு
அங்கையற்கண்ணம்மையவ ளதிகமனமகிழ்ந்து
தோள்ச்சதைபக்கின்னியம்மை தூரவெடுத்துவிட்டாள்
அல்லியுங்கொடியு மடர்ந்தொருபொய்கையிலே
செந்தாமரைவெண்டாமரை சேர்ந்தொருபொய்கையிலே
வானவருமிந்திரரும் வந்திருக்கும்பொய்கையிலே
சந்திரரும்சூரியரும் சக்திபண்ணும்பொய்கையிலே
தாமரைப்பொய்கையிலே தண்ணீர்த்தடாகத்தில்
அல்லியிலையேலே வந்துவிழுந்ததுகாண்
கையாகிக்காலாகிக் கண்ணுமுகமுருவாகி
குவ்வாகுவ்வாவென்றுசொல்லிக் குழந்தையழுகிறது
சந்திரனைப்போலத் ததும்புதுகாண்பொய்கையிலே
சூரியனைப்போலத் துலங்குதே அக்குழந்தை
மேகத்துமின்னலைப்போல் மின்னுகிறதக்குழந்தை
குன்றுமேற்சந்திரனும் குதித்தெழுந்தபாவனைபோல்
இருண்டிருந்தசோலையிலே திரண்டெழுந்தசூரியன்போல்
இப்படியாகவேதா னிருக்கிறவேளையிலே
அங்கையற்கண்ணம்மையவ ளதிகமனமகிழ்ந்து
குழந்தைதனக்கேற்றபடி குலாவிவரங்கொடுத்தாள்
எழாம்பிராயந்தனில் இளவரசுபட்டமென்று
பன்னிரண்டாம்பிராயத்திற் பார்த்தனுக்குமாலையிட்டு
அல்லியரசாள இசைந்துவரங்கொடுத்தாள்
அம்மன்கழுத்தினி லணிந்தபதக்கமுடன்
சுவாமிகழுத்திற் றரித்தபதக்கமுடன்
வாங்கித்தரித்தனளே வரிசையுள்ள குழந்தைக்கு
அல்லியென்றுபேருமிட்டு அங்கையற்கண்ணம்மையும்
பாண்டியனைக்கனவழைத்துப் பார்வதியேதுசொல்வாள்

ஆறுபேரவரே அணிதிரளைப்பாண்டியரே
அல்லியிலைமேலே அழகுமைந்தனிருக்கிறது
பிள்ளையது பெண்ணுமது ஆறுயிரவருக்கும்
சித்துப்போய்வாருமென்று ஈஸ்வரியுந்தா னுரைத்தாள்
அப்போதுபாண்டியனும் அரனுரைத்தான்வணங்கி
சமைத்திலைகடந்து தானெழுந்தார்பாண்டியரும்
அல்லியின்மேலே அமைந்திருந்தகுழந்தையைத்தான்
தாய்தான்பெற்றதுபோலே தழுவியெடுத்தார்கள்
வாரியெடுத்தார்கள் மார்போடணைத்தார்கள்
மதுரைநகர்நோக்கி வருகிறார்பாண்டியர்கள்
முன்னோடேவிட்டார்கள் அறிக்கையிட்டார்பாண்டியர்கள்
மைந்தனைப்பெறுபெற்று வருகிறார்பாண்டியர்கள்
புத்திரனைப்பெறுபெற்று புண்ணியர்கள்வாரார்கள்
நீன்முகராஜனுக்கு நீதியுடன்சொல்லுமென்று
தூதனுடன்சொல்லியே சேதிவிட்டார்பாண்டியர்கள்
ஒற்றனொருவன்வந்தா னுத்தமற்கேசேதிசொன்னான்
கேட்டந்நீன்முகனும் கெர்வமதிகமாகி
ஆடாதாதுவரே அலங்காரமன்னர்களே
பாண்டியராசருடன் பாங்கானவார்த்தைசொல்லும்
நீன்முகராசனிவ னில்லைகொண்டராச்சியத்தை
நீங்கள் வரித்துவைத்த நிண்ணயப்பட்டமது
பட்டத்துறையனில்லை பாலகருமவருவதில்லை
மதுரைக்குவந்தாலே வல்லுயிரைவாங்கிடுவேன்

நீன்முகராசனுக்குப் பாண்டியர்கள் பகுதிகட்டத்
தீர்மானித்தது.

நீங்களிங்கேயிருந்தாலும் எங்களுக்குப்பகுதிகட்டி-
வருஷத்துக்கொருதரம் வரவேணும்பாற்குடங்கள்
ஆயிரம்பாற்குடங்க ளனுப்பவேணுமென்றனுக்கு
அனுப்பாமற்போனுக்கா லாக்கினைகள்செய்திடுவேன்
நீன்முகராஜன் நிச்சயமாய்ச்சொன்னானென்று
பாண்டியராசருக்குப் பாங்குடனேசொல்லுமென்றான்
ஒற்றனொருவனுமே ஓடினான்ராஜாண்டை
ஆறுபேர்பாண்டியர்களையருக்கேதெண்டனிட்டு
நீன்முகன்சொன்னதொரு மிச்சேதிசொல்லலுற்றான்
உங்களால்வந்தவினைக் காரென்னசெய்வார்கள்
அவ்வினையெல்லக்கலென்று லதிகமானபாவம்வரும்
மதுரைப்பட்டணத்தில் [illegible] தனமாய்
உழவருக்குக்தனமா புத்திரரார்வாசபாண்ணர்
வருஷத்துக்கொருதரந்தா னனுப்புவோர்பாற்குடங்கள்
இத்தவிதமாகவேதா னிருந்தார்கள்பாண்டியர்கள்

சொக்கரருளாலே சுந்தரியாளல்லியற்கு
மாணிக்கத்தொட்டிலிட்டு வளர்த்தார்கள்பாண்டியர்கள்
ஒருமாதமிருமாத மொன்றிரண்டுமூன்றுமாச்சு
சிற்றாடைகட்டுவாளாஞ் சிறுகம்பிகோலிடுவாள்
பாவாடைகட்டுவாளாம் பந்துவிளையாடுவாளாம்
அம்மானைபந்துகளும் அழகானபுள்ளடிப்பாள்
ஐந்தாம்வருஷத்தி லழகானபள்ளிவைத்தார்
ஏழுபிராயமட்டும் இளங்கொடியாள்தான்படித்தாள்
ஆறுசாஸ்திரம்நான்குவேதம் அறுபத்துநாலுகலைக்யானம்
அம்புவித்தைதவில்வித்தை ஆஸ்தானவித்தையெல்லாம்
காணலாவுபாந்தியங்கள் கற்றுக்கொண்டாளல்லியரும்
பள்ளியின்கணேறி பகல்பாடமொப்புவித்து
பாலமுதுண்ணுகைக்கு பத்தினியாள்வருகலுற்றாள்
அப்போதுமீன்முகன்று ஆறுயிரவரண்டை
ஆறுயிரந்தூதுவரை அனுப்பினான்மீன்முகனும்
ஆறுயிரங்குடத்தி லப்பட்டமானபாலாம்
வாங்கிவரச்சொல்லியே வரவிட்டான்தூதுவரை
மலைகளுடன்தலைகொடுக்கும் மல்லர்வெளிப்பட்டார்கள்
காற்றிலும்வேகமாகக் கடுந்தூதுவாரார்கள்
தங்கக்குடமெடுத்துத் தான்வந்தார்மல்லரெல்லாம்
பாண்டியராஜரண்டை பாங்குடனேவந்தார்கள்
பகுதிகளைக்கட்டுமென்று பாற்குடங்கள்முன்னேவைத்தார்
அரண்மனைக்குப்போகவேணு மனுப்புங்கள்பாற்குடத்தை
அவ்வார்த்தைதான்கேட்டு அஞ்சிப்பயந்தெழுந்து
காராவின்பசும்பாலை கறந்துமேபாண்டியர்கள்
ஆயிரங்குடத்தி லன்பாய்நிரப்பிவைத்து
மஞ்சள்துணிமேற்கட்டி மாலையளைச்சுற்றிவைத்தார்
பாற்குடங்கள்தன்னையவர் பார்த்தீர்த்துவைத்தார்கள்
வரிசைவரிசையாக வைத்தார்கள்பாற்குடத்தை
பதினாயிரந்தூதருக்கும் பாலமுதபோசனங்கள்
போசனஞ்சமைக்கலுற்றார் போரானபாண்டியர்கள்
அரிப்பதுவும்பொரிப்பதுவும் அடிசில்சமைப்பதும்
இவ்விதமாக யிருக்கின்றவேளையிலே
அந்தசமயத்தி லல்லியம்மாள்வந்துவிட்டாள்
பதினாயிரந்தூதுவரைப் பாற்குடத்துடன்பார்த்தாள்
அரிப்பதுவும்பொரிப்பதுவும் அடிசில்சமைப்பதுவும்
இந்தமகிழ்ச்சிகொண்டு யேதுசொன்னாளல்லியம்மாள்
ஒருநாளுங்கண்டதில்லை உச்சிதசம்பிரமங்கள்
என்று அதிசயமா யெந்தனுக்குத்தோற்றுது
இந்தவுறன்முறையா ரெங்கிருந்துவந்தவர்கள்

இருகாளுங்கண்டதில்லை உச்சிதமானவரை
அவ்வார்த்தைதான்கேட்டு ஏதுசொல்வார்பாண்டியர்கள்
அவ்வார்த்தையுந்தனுக்கே னமுதுண்ணப்போடியம்மா
பாலமுதுண்டுநீயும் பள்ளிக்குப்போமென்றார்
இதுசொல்லாமற்போவீரானுல் சீரானபாண்டியரே
நான்-அல்லியிராணியைக் கல்லோடேமோதிடுவேன்
செத்துமடிந்திடுவேன் செலவெழிந்துபோய்விடுவேன்
மாண்டுமடிந்திடுவேன் வைகுந்தஞ்சேர்ந்திடுவேன்
அவ்வார்த்தைதான்கேட்டு ஆறாயிரவர்சொல்வார்
ஆறுயிரவருமே ஆண்மலடுபெண்மலடாய்
மைந்தனைவேண்டியல்லோ மகாதபம்பண்ணேமம்மா
அன்னதவம்பண்ணினுலு மேதானும்பிள்ளையில்லை
மகாமுனிவர் தபசுபண்ணும் மாமலையைத்தான்தேடி
நாங்கள் தவத்திற்கு நகர்விட்டுப்போவதற்கு
வெள்ளாட்டிபெற்றதொரு வீரனந்தநீன்முகனை
பட்டந்தரித்துவைத்துப் பாரத்தபசுபண்ணேம்
சொக்கருளாலே ஆரணங்கைபெற்றெடுத்தேன்
அல்லியிலேமேலே ஆரணங்கைபெற்றெடுத்தோம்
வயிற்றிற்பிறந்ததில்லை வன்கொடுமைசெய்ததில்லை
குடலிற்பிறந்ததில்லை குலக்கொடுமைசெய்ததில்லை
ஓடுகிறதண்ணீரிலே புல்லேமணற்சேருமுண்டு
அடிக்கிறகாற்றதனில் சுல்காற்றுருப்புமுண்டு
காலகாலகண்டருக்கும் கண்டத்தில்கறுப்புமுண்டு
குண்டுமணிக்காளுலும் கொஞ்சங்கறுப்புமுண்டு
சந்திரர்க்குமாசுமுண்டு சற்றேகறுப்புமுண்டு
உனக்கு-மயிரேகனுப்பொழிய மற்றெருகறுப்புமில்லை
அல்லியிலேமேலே ஆரணங்கேநீபிறந்தாய்
வரத்தினாற்பேறுபெற்று வந்தாயம்மாதென்மதுரை
வெள்ளாட்டிபெற்றெடுத்த வீரனைனீன்முகனும்
ஊரில்வராவொட்டாமலோட்டிவிட்டானப்புறத்தே
ஆறுயிரப்பாண்டியரும் ஆறுயிரப்பார்க்குடமும்
வருஷத்திற்கொருதரந்தான் வாங்குகிருன்பகுதியவன்
உன்னைப்பெறவேண்டி ஊரிழந்தோம்பதியிழந்தோம்
சேமையிழந்தோமம்மா துரைத்தனமுந்தானிழந்தோம்
ஏழுவருஷமம்மா இப்படியனுப்புகிறோம்
அந்தவருஷமே இங்குவந்தார்மல்லரவர்
பார்த்துடன் திறப்பிவைப்போம் பலமிர்தஞ்செய்கிறார்கள்

அல்லியரசாணிமல்லர்களை அவமானஞ்செய்தனுப்பியது.

அவ்வார்த்தைதான்கேட்டு அல்லிமிகக்கோபமதாய்
சீறியெழுந்தாளே சிங்கத்தின்குட்டியைப்போல்

எட்டிப்பழம்போலே இருகண்சிவந்தாளே
கோவைப்பழம்போலே கூரியகண்சிவந்து
வெள்ளாட்டியையனுக்கு வீரியங்களுண்டாமோ
எருதுபசுவாமோ இளைத்தபசுவுமுண்டோ
உயரப்பறந்தாலும் ஊர்க்குருவிபருந்தாமோ
கொசுவும்பெருந்தாமோ கூடப்பறக்குமோதான்
வெள்ளாட்டியையனைத்தான் வெட்டித்தலைதள்ளாமல்
பாண்டியராசர்களே பாராளவைத்தீர்களே
உங்களைப்போல்ராசாக்கள் உலகத்தில்காணறியேன்
என்றுமிகக்கோபமுடனெழுந்தாளேயல்லியம்மாள்
எழுந்திருந்துயல்லியம்மாள் இயலானபாற்குடத்தை
இடதுகால்தன்னாலே எட்டியுதைத்தாளே
ஆறாயிரம்பாற்குடத்தை அகங்கொண்டிடறிவிட்டாள்
ஆடாமல்லர்களை அழையும்பிடாரனைத்தான்
ஓடியழைத்துமே ஒருநொடியில்வாருங்கள்
அங்கிருந்தமல்லர்கள் அதிதுரிதமாயோடி
பாம்புப்பிடாரர்களைப் பறந்தோடியழைத்துவந்தார்
வாழ்வரசியல்லியர்க்கு வந்துதெண்டம்பண்ணினார்கள்
எம்மையழைத்ததற்கு ஏதுகருமமென்றார்
காட்டுக்குப்போய்நீங்கள் கன்னிபுக்கில்மருந்தைவைத்து
கருநாகஞ்செங்நாகம் காலர்கோட்டிவிஷர்களுடன்
மண்ணுளிதாசிரியு மலைபெரியவிரியனுந்தான்
ஊதுசுருட்டுப்பாம்பு மூயர்வானைநாகங்களும்
நீக்கத்துகுட்டிகளும் நீதியுள்ளபாம்புகளும்
வண்ணவண்ணப்பாம்புகளும் வகையாகத்தான்பிடித்து
ஓட்டம்நடையுமாக ஒருநொடியில்வாருமென்றாள்
அவ்வார்த்தைதான்கேட்டு அந்தப்பிடாரரெல்லாம்
ஓட்டம்நடையுமாக ஓடினார்கானகத்தில்
காட்டுக்குப்போனார்கள் கன்னிபுக்குமருந்துவைத்தார்
வண்ணவண்ணப்பாம்புகளை வரிசையுடன்பிடித்தார்
பெட்டிகள்நிரம்பவே பிடித்தார்கள்பிடாரரெல்லாம்
காடுசெடிதாண்டிக் கடுகியேஓடிவந்தார்
அல்லியரசாணி ஆரணங்குமுன்புவந்தார்
பெட்டியிற்பாம்பையெல்லாம் பொற்கொடியாள்முன்னேவைத்து
அல்லிப்பெருமாளும் ஆரணங்கேதுரைப்பாள்.
பாற்குடந்தன்னிலேதான் பாம்பையடையுமென்றாள்
பஞ்சவர்ணச்சீலையினாற் பானைவாய்கட்டுமென்றாள்
ஆராயிரங்குடத்திலடையுமென்றாள் பாம்பையெல்லாம்
பஞ்சவர்ணச்சீலைகட்டி பார்த்திருந்தார்முன்னேவைத்தார்
அல்லிப்பெருமாளு மாரணங்கேதுரைப்பாள்

அம்பட்டனைத்தேடி அழையுமென்றாளல்லியரும்
ஓடியழைத்தல்லோ ஓட்டங்கடையாகவந்தார்
ஆராயிரந்தூதுவரை அழகுமொட்டைசெய்யுமென்றாள்
தாடி சிரைத்தவரைத் தலைபோடிபண்ணுமென்றாள்
மீசைசிரையுமென்றாள் மீண்போடிபண்ணுமென்றாள்
கரும்புள்ளிசெம்புள்ளியுங் கலந்துமூசாய்க்குத்துமென்றாள்
அல்லியின்சொற்படிக்கே அழகுமொட்டையிட்டார்கள்
மீசைதாடிசிரைத்து முகமனைத்துப்பொட்டுமிட்டார்
ஆடா தூதுவரே அன்பானவார்த்தைகேளும்
நீன்முகராசனுக்குப் பட்சமுள்ள அல்லியம்மாள்
இந்தவரிசைகளை யனுப்பினளென்றுசொல்லும்
தொண்டைக்குத்தாண்டி முள்ளு தொப்புளுக்குவீராணி
அவன்மண்டைக்குக்கோடாலி மார்புக்குசெப்புலக்கை
சுழுத்தடியிற்கத்தியவள் காமாட்சியம்மையென்று
வெட்டிபறக்கவந்த வுண்மைபராஞ்சோதி
தலைமாட்டிற்பாம்பலவோ தாயாரந்தஅல்லியென்று
சொல்லுங்கள் தூதுவரே துரைராசன்நீன்முகற்கு
வெள்ளாட்டிபையலுக்கு வித்தையைசொல்லுமென
ஆயிரந்தூதுவர்க ளக்குடமெடுத்துக்கொண்டார்
வருகிறார்மதுரையது வடமதுரைதான்விட்டு
தெனமதுரையது தென்மதுரைவருகிறார்கள்
தெத்துத்தெருகடந்து தேரோடும்வீதிவிட்டு
மகாராசன்கொலுதனிலே வந்தார்கள் தூதுவர்கள்
அப்போதுநீன்முகனும் அப்பிங்கனமாடுகைக்கு
சனியென்னைமண்டபத்தில் தானமர்ந்தான்வாழ்மார்பன்
எண்ணையிட்டுக்கொண்டே யிருக்கிறவேளை தன்னில்
பாற்குடத்தைமுன்னேலே பார்மீதிறக்கிவைத்தார்
வரிசைவரிசையாக வைத்தார்கள்பாற்குடத்தை
வந்திருந்தோரெல்லாம் வரிசையாய்நின்றார்கள்
கண்ணைத்திறந்தலவோ கட்டழகன்பார்த்தானே
இதுவென்னவதிசயங்கள் ஆர்செய்தவண்மையிது
என்றுசாட்டிப்பழம்போலே இருகண்விழிசிவந்தான்
கோவைப்பழம்போலே கூர்விழிகண்சிவந்தான்
உருக்கியசெம்பொனது வுதிரம்போல்கண்சிவந்து
இப்படிச்செய்தவரை யெனக்கறியச்சொல்லுமென்றான்
பால்வார்த்தனுப்பாமல் பாம்பையடைத்ததென்ன
ஆடா தூதுவரே அறியவுரையுமென்றான்

நீன்முகராசனுக்குத்தூதர்கள் சேதிசொல்லுதல்.

அவ்வார்த்தைகேட்டவர்க ளஞ்சியுரைக்கலுற்றார்
ஐயாவேநீர்கேளும் அடியேனொருவார்த்தை

ஆருயிர்ப்பாண்டியற்கே அரியவொருமகளாம்
அல்லியிவளையேலே ஆணைக்குப்பெண்பிறந்தாள்
எழுபிராயமுண்டு இளங்கொடியாள்கன்னிகைக்கு
பாண்டியராசனாரும் பருதிபோய்ச்சேர்ந்தவுடன்
எங்களுக்குராப்பாடு இன்பமுடனேசமைத்தார்
அவ்வளவிலல்லியர்சல்லா னாணக்குவாழ்மாரி
பள்ளிக்கூடத்துப் பாகமுதன்னைவைத்தாள்
எங்களைக்கண்டவுடன் றுபிரண்டுநாள்கேட்க
பாற்குடத்தானேதுக்கையா பாண்டியனேசொல்லுமென
அவ்வளவிற்பாண்டியர்கள் அஞ்சிப்பயந்துரைப்பார்
உடைக்குப்பட்டுடுத்தப் பாதவம்போனதுவும்
அல்லியரைப்பெற்றதொரு அதிசயத்தைச்சொன்னார்கள்
அதுகேட்டுஅல்லியவள் அதிகமானகோபமதாய்
வெள்ளாட்டையவனுக்கு விரியக்கூறுண்டாக்கே
ஆருயிர்க்குடத்தை அணைகொடியிடித்துவிட்டாள்
பாம்பைப்பிடித்துவைத்து பாற்குடத்திலேயடைத்தாள்
யாருமென்றுஎம்பட்டவரை மாதுக்குமொட்டையடியென்றுள்
தக்கோபாடிபண்ணினார்கள் தனிப்பொட்டுமிட்டார்கள்
கைபலிட்டுவந்தார்கள் தக்கோபாடிபண்ணார்கள்
கரும்புள்ளிசெம்புள்ளி கலந்தழகாய்ப்பொட்டுமிட்டு
தொண்டைக்குத்தாண்டிமுள்ளு தொப்புளுக்குவிராலி
மண்டைக்குக்கோடாலி மார்புக்குச்செப்புலக்கை
கழுத்தடிபிற்கத்தியென்றுள் காலாட்டியப்பமென்றுள்
வட்டுபரக்கவர்த வண்ணப்பரன்சேர்ந்திவென்றுள்
உக்கலுக்குச்சொல்லுமென்று உத்தரம்பலப்பிலவைத்தாள்
தருமதுரை மகாராசி தப்பவிட்டாவென்கிளந்தாள்
பிழைத்துவந்தசெய்கள் பெரிபோர்செய்தபல்லவியந்தான்
என்றசொல்லைக்கேட்டு எழுந்தானேநின்றுகனும்

நீன்முகாசன் அல்லியின்மேற் படையெடுத்தல்.

ஆடாதுதுவரே அழைப்பக்கமந்திரியை
இத்தட்சணமே கூடாரப்போடுமென்றுன்
இன்றைவெளிக்கூடாரம் இயலுடனேபோடுமென்றுன்
பாளையக்களுள்ளதெல்லாம் பயணமிட்டுவாருமென
சண்டைக்கொடிபோட்டுச் சண்டைமுரசறையுமென்றுன்
தேசைபலக்கரித்துச் சித்திரமாய்வாருமென்றுன்
ஆருயிர்மந்திரி யனைவரும்பயணமென்றுன்
காலாள்பரிசேனை யானைப்பயணமென்றுன்
ஆருயிர்ப்பாண்டியனை அதட்டிக்கேட்டுவிட்டு
அல்லியுடன்பொருதே அவனொருவிற்பிடித்துவந்து
தக்கோபாடிபண்ணியே தப்பவைத்தாரைப்போன்

உன்னைவிட்டான் நகைக்கே இயல்பாயரைப்பிடுவேன்
இப்போதுன்மைத்துனமா பாடுவேனபிஷேகம்
என்றுரைத்தானே இயல்புள்ளநீன்முகனும்
கட்டுவதுநல்லாயல்லை கைநுனிவேலில்லுமல்ல
[illegible] முன்கட்டுகிறீலையல்ல
[illegible]தையல்லை தரித்ததுவுடையல்ல
என்றவனும்பார்வைத்தட்டி எழுந்தானே நீன்முகனும்
முத்திரைதாலே முகமழகாய்த்தான் கழட்டி
அம்புவில்லுந்தானெடுத்து அம்புறாத்தூணிமுதுகணிந்து
கருங்கச்சைதானணிந்தான் கத்திவாள்தோளிலிட்டான்
தேவதைக்கு நித்தியமஸ்கரித்துத் தேரின்மேலேறினனே
ஏறினார் தேர்மேலே எடுத்தார்நெடுங்குடைகள்
மாகல்தனக்கெடுத்தார் கறுப்புநல்லகூடாரம்
வெள்ளையுக்கெடுத்தார் வெள்ளைநல்லகூடாரம்
கறுப்புநிசான்செகப்புநிசான் கலந்துபறக்குது
இடிபடுதாரைமுரசு அனைவரும்கிடுகிடென்ன
கோடைகாலத்திலிடிபோலே குமுறுதே பரிகைகள்
வெண்சாமரம்பேரிகைகள் விருதுமுழக்கமுடன்
அமரரும் சமரரும் அலங்காரமாய்வருகிறார்கள்
கலிங்கர்தெலுங்கருடன் கன்னடர்வருகிறார்கள்
துலுக்கர்தெலுங்கருடன் சோனகரும்வருகிறார்கள்
வன்னியருஞ்சாணியரும் மராட்டியரும்வருகிறார்கள்
வருகின்றசனங்களாலே மட்டுமிதங்களில்லை
கொக்குவெளுத்ததுபோற் குடைமல்லிபூத்ததுபோல்
நீன்முகன்சேனையெல்லாம் நெருங்கிவருகிறதுபோல்
செந்தூளெழும்புகுது சிவலோகங்கப்புகுது
கருந்தூளெழும்புகுது கதிரோனைக்கப்பிற்று
கோட்டைகடந்து சொப்பனமேவருகிறார்கள்
அப்போதுபாண்டியர்கள் அறிந்தார்கள்சேனைதன்னை
நீன்முகன்வருந்தசேதி விபிஷத்திற்றுணிந்தார்
தேயோமகனேயென்று அலறுகிறார்பாண்டியர்கள்
தவம்பண்ணிப்பெற்றோமே தவக்குலையாளாச்சே
பாரதவம்காரங்கள்செய்து பாலகனைப்பெற்றோமே
நீன்முகன்கையாலே நீமடியகாலமாச்சே
வருகிறான்நீன்முகனும் மட்டில்லாச்சேனையுடன்
என்னசெய்வோம்மகனேயென்று இடிவிழுந்துதானழுவார்
அல்லிப்பெருமாளும் ஆரணங்குதான்கேட்டு
அஞ்சாதேதையமாரே அவனைப்பலிகொண்டிடுவேன்
மாண்டிடுவேனென்று மனதில்நினைக்கவேண்டாம்
செத்துமடிவேனென்று சிந்தையில்வைக்கவேண்டாம்

அரைநாழிக்குள்ளேயவன் அக்காரங்கானாழிவேன்
என்சமர்த்தைப்பாருமென்று எழுந்தாளேயல்லியரும்

அல்லியம்மாள் சொக்கரைத்தொழுது வரம்பெற்றது.

அல்லிக்குளமூழ்கி அலர்தாமரைப்பூவெடுத்து
சொக்கநாதவாலயத்தில் சுந்தரியும்போய்ப்புகுந்து
கோயில்வலம்வந்து கும்பிட்டுத்தெண்டனிட்டு
கொண்டுவந்தபூமலரால் கொப்பனையும்பூசைசெய்து
ஒருவர்வயிற்றிற்பிறவாமல் வன்கொடுமைசெய்யாமல்
குடலிற்பிறவாமல் குலக்கொடுமைசெய்யாமல்
அல்லியிலேயேயென்னை ஆச்சியமாய்ப்பிறப்பித்தாய்
பொற்றாமரையிலே பிறப்பித்தசிற்பரியே
நீன்முகனைக்கொல்லவேனும் நிலைபட்டங்கட்டவேனும்
மாற்றானைக்கொல்லவேனும் வையகத்தையாளவேனும்
வாழ்த்தியேவிடைகொடம்மா மந்திரவாள்கைகொடம்மா
என்றுவணங்கியே இரங்கிநமஸ்கரித்தாள்
மாலிக்கஞ்சொக்கலிங்கம் மனதுமிகக்களித்து
அகிலாண்டநாயகியாள் அங்கயற்கண்ணம்மைமகிழ்ந்து
மதுரைமீனாட்சியுந்தான் மனதுமிகமகிழ்ந்து
மச்சாதங்கொடுத்தாள் மந்திரவாள்கைகொடுத்தாள்
வாழ்த்தியேகைகொடுத்து வெற்றிநிரைவிட்டாள்
வர்ணலட்சந்தார்களை மகாதேவர்தந்துவிட்டார்
அல்லியர்க்குத்துணையாக அனேகம்பேர்வந்துவிட்டார்

அல்லியரசாணி நீன்முகனைச் சங்கரித்தது.

வாளாளுஞ்சேனைகளும் கடுகியேபயணமாக்க
தேரைச்சுற்றித்தெண்டனிட்டுத் தேரின்மீதேறினாளே
அம்புவில்லைப்பிடித்து அச்சாதந்திருப்பிவிட்டாள்
தேவதுந்துபிமுழக்கத் தேன்மொழியாள்வருகிறாளே
சித்திரத்தேருஞ் செருக்களத்தேவருகிறதே
வந்துவளைத்தாளே வல்லிடிபோலல்லியரும்
வில்வளைத்துநாரிபூட்டி வில்லைக்குணத்தொனித்தாள்
மாரிசரம்பொழிந்தாள் மகாசேனையுள்ளவர்போல்
தொட்டாளேவில்லதனை சொரிந்துவிட்டாள்பாணமதை
விட்டாள்சரபாணம் மேனியெல்லாந்தான்மறைய
யானைசேனைபரிவாரம் அடங்கலுஞ்சொல்லுமுற்றுள்
யானைதலைகளெல்லாம் ஓலமிட்டுக்கீழ்விழவே
குதிரைத்தலைகளெல்லாம் சொக்கரித்துக்கீழ்விழவே
யானைமேலிருந்தவர்கள் அபயமிட்டுக்கீழ்விழவே
ஒட்டகத்தின்மேலிருந்தவர்கள் ஓலமிட்டுக்கீழ்விழவே
குதிரைமேலிருந்தவர்கள் சொக்கரித்துமண்ணைக்கவ்வ

தென்னங்காய்போலாகத் சேனைத்தலையுருளவிட்டாள்
பனங்காயைப்போலாகப் பார்தனிலுருளவிட்டாள்
செண்டுசெண்டாவேணதலை சேனைத்தலையுருளவிட்டாள்
அறுந்தலைகளெல்லாம் அப்பாறையாடுகுது
ஆலையாடுங்கரும்புபோல் அரைத்துரசம்பிழிந்தாள்
கரும்புகரணைபோலக் கண்டித்தாள்வேணதலை
மதப்பட்டயானைகள்தான் மடுவைக்கலக்கினாற்போல்
குட்டிமதயானை குளங்கலக்கிவிட்டதுபோல்
வெண்ணெயில்சந்தனத்தை கூட்டிவழிந்ததுபோல்
நீன்முகன்சேனையெல்லாம் நிர்த்தூளிபண்ணலுற்றாள்
பிடாரியார்கோயிலுக்குப் பலிகொடுக்கும்பாவனைபோல்
அம்மையார்கோயிலுக்கு ஆடுவெட்டும்பாவனைபோல்
அரைநாழிக்குள்ளே அதம்பண்ணினாள்பாளயத்தை
சண்டைபண்ணமாட்டாமற் றளர்ந்தோடிப்போனார்கள்
பண்டாரமென்பாரும் பரதேசியென்பாரும்
நாமத்தைக்காண்பித்து நான்தாதனென்பாரும்
நூலைக்காண்பித்து பிராமணனென்பாரும்
சண்டைக்குவல்லையென்று சலாஞ்செய்துஓடுவாரும்
தண்ணீர்தண்ணீரென்று தவித்ததுபாளையங்கள்
வடுகரெல்லாம்நீளென்பார் வன்றமிழர் தண்ணீரென்றார்
துலுக்கரெல்லாம்பாணியென்று சொல்லிப்புலம்புகிறார்
இவ்விதமாய்ப்பாளயத்தை இறக்கடித்தாளல்லியரும்
நீன்முகராஜனண்டை நேரிழையும்வந்தெதிர்த்தாள்
ஆடாநீன்முகனே அறிவுகெட்டபாதகனே
வெள்ளாட்டிப்பயலே நீ வீரியமுனக்குண்டோ
அப்பலட்டிலேவந்தும் காறிபெற்றமகனே
மதுராம்பாளியாமா வைகாசிதையாமா
சருதுபசுவாமா வெதிர்த்துவந்தாயாண்பிள்ளையாய்
உன்னைக்கெடுப்பேனே உனக்கொருசேவகயா
கொசுவுபருந்தாமோ கூப்பறக்குமோடா
உயரப்பறந்தாலும் ஊர்க்குருவிபருந்தாமோ
அணிப்பிள்ளையசக்கினால் மான்குட்டிவிழுமோடா
ஒதியெருத்தால்தூணாமோ ஒட்டாங்கச்சிமுலையாமோ
உன்னை அதம்பண்ணும்படியாக அல்லியிலேநான்பிறந்தேன்
பொற்றாமரையிலே பிறப்பித்தாளீஸ்வரியாள்
உன்றொண்டைக்குத்தூண்டிமுள்ளு தொப்புளுக்குவிராணி
உன்மார்புக்குசெப்புலக்கை மண்டைக்குகோடாலி
உன்கழுத்தையறுக்கவந்த காமாட்சியம்மனடா
உன்னலட்டியறுக்கவந்த வுமைபராஞ்சோதியடா
உன்குலத்துத்தெய்வமடா ஓங்காரயல்லியம்மாள்

அறியாமற்போனையடா அறிவுகெட்டநாய்த்தலையா
அரைநாழிக்கொள்ளையிலே யமபுரஞ்சேர்க்கிறேன்பார்
கால்நாழிக்கொள்ளையிலே கைலாசஞ்சேர்க்கிறேன்பார்
ஒருநாழிக்கொள்ளையிலே உயிர்வதைசெய்கிறேன்பார்
தின்றவுப்புமாண்டதே தெருவிபாழாச்சுதே
காலனையரவந்து கைகாட்டியழைத்தானே
யமனுருபரவந்து இங்கேவாவென்றனரோ
ஆசையினாலேயடா அமருக்குவந்துவிட்டாய்
என்சமர்த்துஞ்சேவகமு மிப்போதெரிவாய்பார்
தேரைத்துரத்திவிட்டாள் செங்கையில்வில்லெடுத்தாள்
கேட்டந்தநீன்முகனும் கொலமதிகமாய்
நெற்றிக்கண்ணீஸ்வரனார் நிமிர்ந்துவிழிபார்த்தாற்போல்
வலதுபக்கமீசையது வல்லியமைப்போலேதுடிக்க
இடதுபக்கமீசையது ஈட்டிபோலத்துடிக்க
மீசைதுடிக்கிறது மூக்கோபமாகிறது
சானுண்டுபெண்ணேநீ சமர்த்தாகப்பேசுகிறாய்
உன்சவுரியந்தானிழப்பேன் தப்பலங்கடேந்தவைப்பேன்
என்வல்லமையைப்பாரென்று வளைத்தானேவில்லதனை
இவ்விருவர்தேருமிருநிலத்திற்றான்சுழல
மாணிக்கச்சொக்கரையும் மனதில்நினைத்தாளே
அங்கயற்கண்ணாயகியை ஆதிபரமேஸ்வரியை
மனதில்நினைத்தல்லோ வாங்கிவிட்டாள்பாணமது
பாவியந்தநீன்முகனும் பதறிச்சரம்பொழிந்தான்
விட்டான்சரபாண மெல்லிநல்லாள்மேனியிலே
கோடானகோடிபாணங் குறித்தானேநீன்முகனும்
அல்லிப்பெருமாளுக் கதிகமானகோபமுடன்
ஒன்றுக்குபத்துகணை ஒருநூறுக்காயிரமாம்
சரமேற்சரம்பொழிந்தாள் சாமர்த்தியமுள்ளகன்னி
வாயுவினதுஅஸ்திரங்கள் வருணனதுஅஸ்திரங்கள்
திவ்யநல்லஅஸ்திரங்கள் தீர்க்கமுள்ளஅஸ்திரங்கள்
சண்முகனஸ்திரமாஞ் சலந்திகனஸ்திரமாம்
மகாதேவனஸ்திரமாம் பார்வதியஸ்திரமாம்
வச்சிரஅஸ்திரமா மகுடநல்லஅஸ்திரமாம்
இடியினதுஅஸ்திரமாம் நவசந்திரஅஸ்திரமாம்
இராமசந்திர அஸ்திரமாம் நவசந்திரஅஸ்திரமாம்
சூரியஅஸ்திரமாம் சுப்பிரமணியர்அஸ்திரமாம்
கார்த்திகைமாதத்திற் கனத்தமழைபெய்ததுபோல்
ஐப்பசிமாதந்தன்னி லடர்ந்தமழைபெய்ததுபோல்
சோனைமழைகளுஞ் சொரிந்தார்போற்றூவிவிட்டார்
விட்டதொருபாணமது மட்டுமிதங்களில்லை

காலாளுகள் பட்டு நல்லசண்டை பண்ணுகிறார்
முற்பிடித்தலைகளாது யெத்தசிவப்பேறிற்று
அம்புபிடித்தலைகளாது அல்லிப்பூவருணமாச்சு
செல்லிப்பழம்போலே நெருங்கிறதுகொப்பளங்கள்
ஒத்தவிதமாக இருவர்சண்டைபண்ணினார்கள்
அப்போது அல்லியம்மா ளம்மனைத்தோத்தரித்து
இடபாண்டிரம்பெடுத்து இந்திராபங்கூறுவிட்டு
பாரபுரளவாங்கிப்பல்லை தோள்புரளத்தானடித்தாள்
காகளுதும்நெருப்பெரிய வந்துவிழுந்ததுவே
தேருமுடைந்ததுவே செப்புவிசைத்தனவே
பட்டைகாகான்கார்ச்சிரமாய் தலிப்பொடியானதுவே
[illegible] போல் சிறங்கள்தொடையாடி
பதாதியாய்நின்றானே பாராக்கிரமநீன்முகனும்
எடுத்தான்வயிர தடியை ஏற்றினான்கேடயத்தை
கண்டாளே அல்லியம்மாள் கனத்தநல்லகோபமுடன்
கேடகமும்வாளெடுத்துக் கெர்ச்சித்துக்கீழ்க்குதித்து
எலிகண்டபூனையைப்போ லெழும்பினாளல்லியம்மாள்
பசுகண்டபுலியைப்போல் பாய்ந்தானேநீன்முகனும்
யானைகண்டசிங்கம்போ லல்லியெழும்பினாளே
கொக்குகண்டராஜாளிபோற் குதித்தானேநீன்முகனும்
மானைக்கண்டசிங்கிபோலே வாறாளேயல்லியம்மாள்
உன்னைவிடுவேனென்று உன்மனதிலெண்ணாதே
நீன்முகா உன்தலையை நிமிஷத்தில்வாங்குவேன்பார்
இடசாரிவலசாரியா யிருவருஞ்சுழலுகின்றார்
சக்கரம்சுழல்வதுபோற் சமர்த்தர்சுழலுகின்றார்
வண்டுதும்பிபோலாக வட்டமிட்டகருடனைப்போல்
முன்கந்துபாய்ந்தல்லவோ முதுகின்மேல்வெட்டுவாளாம்
தட்டியுதறிநிற்பான் தாக்குவானல்லியனை
ஏமனும்யமனைப்போல் விந்திரனுமிந்திரனும்
மலையுமலைபோல வந்தெதிர்த்தபாவனைபோல்
நான்குநாழிகைமட்டும் நல்லசண்டைபண்ணினார்கள்
பொற்றாமரைதனிலே பிறந்தொருயல்லியரும்
ஆலவாய்சொக்கரென்று மாண்டவனைத்தானினைத்து
முன்கந்துபின்கந்து முப்பத்திரண்டுகந்து
பக்கவளைவாகலந்து பாச்சலுடனெழும்பி
வீசினாள்வாளாலே வேறிரண்டுதுண்டாச்சு
கரும்புக்கரணையைப்போற் கண்டிக்கத்தான்விழுந்தான்
ஏறினார்தேர்மேலே எடுத்தார்நெடுங்குடைகள்
நீன்முகனுவிழுந்தானென்று நீலிசங்குதான்தொனித்தாள்
தேரைத்திருப்பிவந்தாள் தென்மொழியாளல்லியம்மாள்

நீன்முகன்மார்மீதில் நீலிரதமோட்டினாளே
செயங்கள்செயங்களென்று செயபேரியடித்துவந்தாள்

அல்லியம்மாள் மதுரைக்குவந்து பட்டங்கட்டிக் கொண்டது.

எழுபதுசேனாதிபதி எல்லவருமோடிவந்து
தப்பிப்பிழைத்தவர்கள் சகலஜனங்களெல்லாம்
அல்லிப்பெருமாட்கு அடிபணிந்துதெண்டனிட்டார்
அடைக்கலமாச்சியென்று அடிபணிந்துதெண்டனிட்டார்
தேவதுந்திமிமுழங்க தேவர்பூமாரிபெய்ய
ஆறாயிரவரொன்னு மையன்மார்தானறிந்தார்
சந்தோஷப்பட்டார்கள் தார்வேந்தரோடிவந்தார்
மகள்தனைப்பார்த்தல்லவோ மகிழ்ந்தார்கள்பாண்டியர்கள்
மதுரைத்தெருவனைத்தும் மகுடதோரணங்கட்டுமென்றார்
அரைநாழிகைக்குள்ளே அலங்கரித்தார்பட்டணத்தை
எங்குமலங்கரித்து எத்திசையுநீர்தெளித்து
வாழைமரங்கமுகுமரம் வாசலெல்லாம்நட்டார்கள்
சேனைகள்சூழ்ந்துவர செயபேரியடித்துவர
மேளங்களார்ப்பரிக்க மெல்லிவருகிறாளே
மதுரைத்தெருவைச்சுற்றி மாளிகையில்வந்தார்கள்
சிங்காதனத்தின்மீ தேறினாள்தென்மொழியாள்
ஆறாயிரம்பாண்டியர் ஐயன்மாரானவர்கள்
பட்டந்தரித்தார்கள் பத்தினியாளல்லியற்கு
செங்கோலுபட்டமுடன் துரைத்தனமுதந்தார்கள்
பொம்மைவிருதுகட்டிப் பூதத்தலைகட்டிவைத்தார்
அல்லிக்கொடிகட்டி அரசுநிலையாளுகிறார்
மதுரையம்பத்தாறுகாதம் மாதுமங்கைநல்லாளுகிறாள்
ஆண்பட்டங்கட்டியே அரசுநிலையாளுகிறாள்
பெண்பட்டங்கட்டியே பூமியரசாளுகிறாள்
இவ்விதமாக எல்லையரசாண்டிருந்தாள்
இப்படியாகவேதான் இருந்தரசாளுகையில்
அப்போ தருச்சுனனும் ஆனாலழகுமன்னன்
இந்திரபுரிபட்டணத்தில் அனந்தந்திருடரவர்
பசுத்திருடிப்போனசேதி பார்த்திபன்தானறிந்து
அம்பையெடுக்கவென்று அரண்மனையிற்போய்ப்புகுந்தான்
ஏழாம்நிலையின்மே லின்பமாயேறினானும்
தருமருந்துரோபதையுஞ் சருவிவிளையாடையிலே
குங்குமப்பூமெடையிலே கூடியுறவாடினார்கள்
கலந்திருந்தவர்களை கண்ணாலேகண்டுவிட்டான்
முன்னிட்டகாலையவன் பின்னாகவாங்கினானே
மந்தாரக்குந்தியரை மாதாவைத்தேடிவந்தான்

ஆரியர்கள்பாதம் அடிவணங்கித்தெண்டனிட்டான்
வாழ்த்திவிடைகொடுத்து வருணித்துக்குந்தியம்மாள்
ஆச்சியரேஎன்தாயே அடியேனொருவார்த்தை
அண்ணாருக்கேதவியரு மன்பாதகமெத்தையின்மேல்
எனக்குவிளையாடுவதைக் கண்ணாலேகண்டேனம்மா
கருவிளையலாகையிலே நடுதியில்நான்கண்டேன்
பார்த்தபடியினாலே பாவம்வந்துநேர்ந்ததம்மா
ஆகாதபாவத்துக்கு ஆளானேனாச்சியரே
பொல்லாதபாவம்வந்து போதப்பலித்ததம்மா
இப்பாவம்தீர்வதற்கு எத்தலங்களும்பார்த்து
கங்கைபத்திரிகோதாவரி யமுனைசரஸ்வதியாம்
சுசிஸ்நானஞ்செய்யவேண்டும் கனபாவம்தீர்க்கவேண்டும்
பாரின்தலங்களெல்லாம் பார்த்துவருகிறேன்யான்
சிவஸ்தலம்விஷ்ணுஸ்தலம் தெரிசனமேசெய்வேன்யான்
காலகண்டதூரமெல்லாங் கடுகத்திரிந்துவாரேன்
போகவிடைதாருமென்று பொன்னடியைத்தெண்டனிட்டான்
அவ்வார்த்தைதான்கேட்டு அழுதுபுலம்பலுற்றாள்
உன்னையநான்பாராமல் ஒருநிமிஷம்நிற்கமாட்டேன்
பாராதிருப்பதற்கும் பாவிமனம்வருமோ
செத்துமடிவேனான் செலவழிந்துபோவேனென்றாள்
அழுதுபுலம்பலுற்றாள் ஆரணங்குகுந்தியம்மாள்
அழுதகுரல்கேட்டு அந்தருமராசர்வந்தார்
சந்தனவடிவழகர் தருமராசர்வந்துவிட்டார்
ஏதுக்கழுவதுதா னென்தாயேசொல்லுமென்றார்
அர்ச்சுனன்சொன்னதெல்லா மாச்சியருந்தாமுரைத்தார்
அவ்வார்த்தைகேட்டு அருண்மைந்தர்நொந்துமனம்
சொற்பேச்சுகேளானே சுந்தரப்பூமுடியான்
என்வார்த்தைகேட்கானே இளவிசயராசனவன்
ஆரைநினைத்தாரென்றால் அளவற்றசிந்தையிலே
எவரைநினைத்தாரென்றால் இன்பமுள்ளசிந்தையிலே
அடியளந்தமாயவரே ஆதிமூலம்வாருமென்றார்
இவ்வேளையிச்சமய மிங்கேவாசுவாமியென்றார்
தருமர்நினைத்ததைச் சுவாமியறிந்து
பட்டமிடுங்கருடனேறி வந்துவிட்டாரெம்பெருமாள்
சிவந்தகருடனேறி ஸ்ரீரமர்வந்துவிட்டார்
காடுசெடிதாண்டிக் கரியமலைதான்தாண்டி
ஆறுசுனைதாண்டி அதிகவனந்தான்தாண்டி
சந்தனவடிவழகர் தருமரண்டைவந்துவிட்டார்
வாகனம்விட்டிறங்கி வந்துசரணமிட்டார்
என்னையழைத்ததுதா னேதுதருமமென்றார்

சிம்மாசனத்தின்மீது ஸ்ரீராமர்வீற்றிருந்தார்
சந்தனவடிவழகர் தருமராயரெனுமப்பார்
அறுலழகுமன்னன் அருச்சுனராசனவன்
தீர்த்தயாத்திரைபோகச் சிந்தையில்நினைத்துக்கொண்டு
காரியாத்திரைபோகக் கருத்தில்நினைத்தாரே
ஆர்சொல்லுங்கேளேனென்று அருச்சுனன்போகலுற்றான்
தனியேயனுப்புதற்குச் சற்றுமனந்தோணவில்லை
அர்ச்சுனர்க்குத்துணையாக அரிராமர்போய்வாரும்
கூடத்துணைபோகச் சொல்லப்பெருமாளே
கும்பிடும்தெய்வமும்நீர் குழைத்திரிராமருமநீர்
உன்னையேநம்பினு லுயிர்கொண்டுவாழ்கிறேன்
ஆரைச்சதமென்பேன் அன்னியர்தன்னைச்சதமென்பேன்
கலைச்சதமென்பேன் இனியாரைத்தஞ்சமென்பேன்
உம்மையல்லாக்கோ அதுவே புண்டரீகம்பொனிலத்தில்
அருச்சுனன்பின்சென்று அழைத்தமேவருமைய
போய்வாரும்சுவாமியென்றார் புகழ்வேந்தர்தருமரிங்கல்
மாதாவுங்குந்தியம்மாள் வாழ்த்திச்செலுத்தினாள்
மாயவருமருச்சுனனும் வணங்கியெழுந்திருந்து

மாயவனும் அருச்சுனனும் தீர்த்தயாத்திரைபோகிறது.

காஷாயந்தானுடுத்திக் கபிசவேஷங்கொண்டார்கள்
சந்நியாசிவேஷங்கொண்டு தவமுனிபோல்வேடம்பூண்டு
தருமபுரம்விமாபுரம் தாண்டிப்புறந்தாண்டி
இந்திரவனங்கடந்து இனியவனம்போகலுற்றார்
காடுசெடிதாண்டி கரியமலைதான்தாண்டி
காசிநதிபோய்முழுகி கனதீர்த்தமாடினார்கள்
விசுவநாதசுவாமியைத்தான் வேண்டி தரிசித்தார்கள்
துங்கபத்திரிகோதாவரி தொலைதீர்த்தமாடினார்கள்
யமுனைசரஸ்வதியு மின்பமுடன்ஸ்நானஞ்செய்தார்
மல்லிகார்ச்சுனம்வந்து மகேஸ்வரனைப்பூசைபண்ணுர்
திருப்பதியேவந்தார்கள் தெரிசனமேசெய்தார்கள்
வேடனதுளசிமாலைத்தான் விரும்பியுண்டவித்தகனுர்
கண்ணப்பனுக்குகாட்சிதந்த காளாஸ்திரிவந்தார்கள்
காளத்திநாதனையுங் கண்டுதரிசித்தார்கள்
திருப்பாலைவனத்தனிலே சிறப்புடனேவந்தார்கள்
கபாலீசநாதனைப் பணிந்துதண்டஞ்செய்தார்கள்
வால்மீகர்பூசைசெய்த மருந்தனைத்தரிசித்தார்கள்
திருவொற்றியூரில்வந்து தியாகனைப்பூசைசெய்தார்
கழுக்கள்வலம்வந்து கடைநயினர்புசித்தார்
திருக்கழுக்குன்றபதி தேடிவந்தார்கள்
வேதகிரிலிங்கத்தை வேண்டித்தொழுதார்கள்

மன்றாப்பெண்ணுக்காய் மணம்போனுனென்றுசொல்லி
அன்றுமல்லியாளை யாணமுகர்தேடிவந்தார்
அருணகிரிநாதரைத்தா னடிபணிந்துதெண்டனிட்டார்
மறுபடிக்கொண்டதொரு பொன்திருவாரூர்போனர்
தியாகரைத்தரிசிக்கத் திரும்பினாரிருவருமாய்
சிறப்பரந்தன்னிலேதான் சபாபதியைத்தரிசித்தார்
மாயவரத்துப்பசோணம் வந்துதரிசித்தாரன்
புரவைப்பந்தலேவா லிங்கரைப்பூசைசெய்தார்
தம்புசெல்வரத்திலேதான் இலங்கடைத்தரிசித்தாராம்
இராமேஸ்வரத்திற்கு யிருவருமாய்வந்தாராம்
சேதுவில்ஸ்நானஞ்செய்து இராமலிங்கர்பூசைசெய்து
நீடுமேக்குமண்ணாந்த பித்தனைக்காணவென்று
மதுரைநகர்தேடி வருகிறாரிருவருமாய்
வருகிறவழிதனிலே வாணியனொருவனவன்
அல்லியரசாணி ஆரணக்குமாதனுக்கு
சித்தமைன்முந்தனக்கும் சிறியுள்ள வாணியன்றுன்
அன்றாக்குழந்தில் குளவுகுறைந்ததென்று
பழுத்துக்குறைந்ததென்று பதறிப்புலம்புகிறான்
வாய்விட்டுக்கொண்டு மண்ணிற்புலம்புகிறான்
அழுதகுரல்கேட்டு அங்குவந்தாரிருவருமாய்
ஆடாதம்பியரே யழுதுபுலம்புவதேன்
உன்னையந்தப்பண்ணினவ ரார்காணும்வர்த்தகனே
அழுதுபுலம்புவதே னவ்வகையைச்சொல்லுமென்றார்
அப்போதுவாணியனும் அங்ஙனமேபேசுதுசொல்வானன்
நீர்-வனத்திரியும்சந்நியாசி யென்வார்த்தையுங்களுக்கேன்
இராத்திவார்த்தையது இனியுரைக்கக்கூடாது
சொன்னேனேயாமாகில் சுகமாகப்போவீரோ
உங்களாலாவதென்ன ஊர்வழியேபோங்களென்றான்
அவ்வார்த்தைதான்கேட்டு அருச்சுனனுமேதுரைப்பான்
சொன்னால்குறைவுமுண்டோ சுகம்பெறுவீர்வாணியரே
பெரியோர்களுக்குச்சொன்னால் பிழையுண்டோவர்த்தகனுக்கு
உன்மனக்குறையகற்றி வகைமாணஞ்செய்திடுவோம்
அழுதவண்ணமதை அறியவுரையுமென்றார்
ஆனக்கேள்சந்நியாசி அவ்வண்ணஞ்சொல்லுகிறேன்
ஐயாபெரியவரே ஆண்டவரேகேளுமையா
மாருமதுரையது வடமதுரைப்பட்டணத்தில்
தென்மதுரைவாழுகின்ற தேன்மொழியாளல்லியரும்
ஆறுபிரம்பாண்டியர்க் கரியதுரைமகளாம்
வரிதந்திற்பிறந்ததில்லை வல்லகொடுமைசெய்ததில்லை
குடித்திற்பிறந்ததில்லை குலக்கொடுமைசெய்ததில்லை

ஓடுகிறதண்ணீரி லுள்ளேமணற்சேருமுண்டு
அடிக்கிறகாற்றதனி லலைகாற்றுரும்புமுண்டு
குன்றின்மணிக்காணுனும் கொஞ்சங்கருப்புமுண்டு
புருவங்கருப்பொழியப் பின்னை கருப்புமில்லை
மயிரேகருப்பொழிய மற்றக்கருப்புமில்லை
ஆருயிரகருந்தான் னரியமைக்கனில்லாமல்
மாறுவோமென்றுசொல்லி மலைமேல்தவமிருந்தார்
மாளாதேயென்றுசொல்லி மலைமேலவதரித்தாள்
பொற்றாமரைதனிலே பிறந்தாளே மாதுகன்னி
அல்லியிலைமேலே அருமையாய்த்தவமிருந்து
அல்லியென்றுபேருமிட்டு ஆரணங்குபெண்வளர்ந்தாள்
ஏழுபிராயமதி லெதிர்த்தவைதீன்றுமன்னை
நீன்றுமன்னைவென்றவளு நீலிபட்டங்கொண்டாளே
பொம்மைவிருதுகட்டி பூமியரசாளுகிறாள்
அவ்வார்த்தைதகேட்டு அர்ச்சுனனுமேதுரைப்பான்
அழகில்மிகுந்தபெண்ணோ ஆணழகைச்சொல்லுமென்றான்
அவளழகும்பாவனையு மையாவேசொல்லுமென்றான்
எல்லார்தலைமயிரு மிருமுழமொருமுழமாம்
ஆரணங்குகூந்தலது அறுபத்துமூன்றுமுழம்
வண்டுமுதுகோடதுபோல் மயிர்நிறமாயிருக்கிறது
தேய்பிறச்சாயலைப்போல் திருநெற்றிக்கண்ணழகும்
வேப்பிலைச்சாயலைப்போல் மேல்புருவத்தழகும்
கூரியமூக்கழகும் குளிர்ந்தமுகத்தழகும்
முத்துப்போற்பல்வரிசை முருக்கிலைபோல்செவ்விதழும்
நீர்முட்டைபோற்கண்ணழகும் நெரிந்தபுருவமுடன்
சங்குகழுத்தழகும் சாதிலிங்கமேனிகளும்
காமன்கடைந்ததுபோல் கலசத்திளமுலையும்
கற்பகச்சாயலைப்போல் கைத்தலமிரண்டழகும்
ஆலிலைபோலவே யமர்ந்ததிருவயிறும்
சிங்கத்திடைபோற் சேர்ந்தயிடையழகும்
இளவாழைத்தண்டதுபோல் இரண்டுதொடையழகும்
முத்துச்சிப்பிபோலே முழங்காலிரண்டழகும்
சுவரிலெழுதலாகும் சித்திரம்போல்பார்க்கலாகும்
புத்தகஞ்சேர்ந்ததுபோல் புறங்காலிரண்டழகும்
வேரிற்பவளங்கள் மின்னுகிறகாந்தியவள்
கொம்பனையாள்வார்த்தைசொல்லு குயில்கன்குரலோசை
காய்க்கும்பிராயமையா கன்னிபட்டங்காலமையா
பூக்கும்பிராயமையா பிஞ்சுவிடுங்காலமையா
அவளைப்போலழகுடையா ளாருமில்லைவையகத்தில்
கட்டழகிமாதினுக்குக் கலியாணமாச்சுதேடா

மாலைப்பசுங்கிளியை மணமுகூர்த்தம்செய்தனரோ
ஆனால்கேள்சந்நியாசி அவ்வார்த்தைசொல்லுகிறேன்
கொள்ளவருமாப்பிள்ளைக்கு கொடாமற்கொடுப்பேனென்றாள்
ஆளவரும்சம்பந்தியை யடிப்பேன்சேருபந்தால்
முன்வாசற்படிதனிலே முச்சிகொட்டாகட்டிவைத்தாள்
கல்யாணமென்பாரைக் கண்ணைப்பிடுங்கிடுவாள்
பாலைக்கறந்துதான் பட்டணத்தில்வைத்தாக்கால்
பறக்கின்றகாகமது பாராதுதலையெடுத்து
ஆண்காற்றடியாது அல்லியம்மாள்கோட்டைதனில்
ஏறுவதும்பெண்குதிரை யிருப்பதும்பெண்சேனை
பன்னிரண்டுவயதாச்சுப் பாலப்பிராயமையா
நான்-சித்தங்கலங்கித் தளப்பேன் நீதியுள்ளமாதினுக்கு
ஆகையினாலேதா னழுதுபுலம்புகிறேன்.
அன்றுடமுத்தி லளவுகுறைந்ததையா
வெட்டியெறிந்திடுவாள் வீரமணியவளாலே
கொல்லக்கினைப்பாளே குடிகேடுவந்துவிடும்
ஆகையினாலேதா னழுதுபுலம்புகிறேன்
அவனுக்காதரவுசொல்லி யப்புறமேபோகையிலே

அருச்சுனன் அல்லியின்மேலாசைகொண்டது.

அருச்சுனராசனவன் அதிகமோகங்கொண்டானே
அப்புறம்நடக்கறியான் அர்ச்சுனராசனவன்
அல்லியின்மேலாசையது அதிகமோகங்கொண்டானே
காமவிகாரத்தால் கனை தாங்கிப்போனானே
மன்மதனெய்தானை மார்பைப்பிளக்கிறதே
மோகித்துத்தானுமவன் மூர்ச்சைபட்டுப்போனானே
பாணங்களைந்தும் பட்டுநெஞ்சுருகியதே
மாரன்விடும்பாணமது மார்புருகிப்போகிறதே
ஆயன்பெருமானே அடியேனொருவார்த்தை
கட்டிணவிருதுகளைக் கடுகவெடுக்கவேண்டும்
எந்தவிதமானாலும் மணமாலைசூட்டவேண்டும்
மாலையிட்டாலல்லாது மாயனேவருவதில்லை
செத்துமடிவேனையா செலவழிந்துபோவேனையா
அவ்வார்த்தைதான்கேட்டு அபிராமரேதுசொல்வார்
கட்டெடன்னகாவலென்ன காவலதிகாரமென்ன
ஆறுயிரவர்களா மையன்மார்சேனையென்ன
சேவகமிருந்ததென்றால் தேன்மொழியாளல்லியரை
கலியாணம்பண்ணுதற்குக் காண்டீபா ஆகுமோதான்
கொல்லநினைப்பாளே குடிகேடுவந்துவிடும்
செத்துமடிந்திடுவாய் செலவழிந்துபோய்விடுவாய்
தேசத்துப்பெண்களோடே சேனபோரிட்டாரோ

சாதியிலொருபெண்ணை தாலிகட்டவைப்பேனடா
குலத்திலொருபெண்ணைக் கோலிப்பண்ணிவைப்பேனடா
மாதுடையவார்த்தைதனைப் போட்டுமறந்துவிடு
அல்லியரைமாலையிட லாகாதுஉன்றனாலே
செத்துமடிவாயே செலைழிந்துபோவாயடா
கச்சைக்கென்றென்றுதே சாய்போவோம் நாமாலே
நீர்த்தயாத்திரைவந்த சேனைனோர்ச்சுடா
தருமருந்தம்பியரும் தனித்துப்புலம்புவாரே
ஆரணியவாசம்வந்து அதேசாரமாச்சுதடா
என்றதுதான்கேட்டு டேதுசொன்னான்வாள்விஜயன்
நான் செத்துமடிந்தாலும் செலைழிந்துபோனாலும்
மாண்டுமடிந்தாலும் வலதுந்தஞ்சேர்ந்தாலும்
செத்தவிடத்திலே செந்தாமரைப்பூப்பேன்
பஞ்சணைமெத்தையிலே படுக்கையலாவேன்
கொண்டைக்குப்பூவாவேன் கொசவனத்தீப்பையாவேன்
நெற்றிக்குப்பொட்டாவேன் சேர்விழிக்குமையாவேன்
மூக்குத்தானித்தொங்கலிலே முன்னாணிமொட்டுவேன்காண்
காதுக்குமின்னாவேன் கைவளையல்நானாவேன்
மாலையிட்டாலல்லாது மாயமோ வருவதில்லை
கலியாணஞ்செய்தவையுங் கரிமாலப்பெருமான்
உன் புண்ணியத்தினாலேயான் பிழைக்கவழியாருமையா
பாதம்பணிந்தானே பார்த்திபனப்போது
ஆயர்பெருமாளு மருளானசேதுசொல்வார்
புத்திகெட்டார்ச்சுனனேன் பின்னாலேவந்தேனடா
பெண்களைப்பார்த்துநீ பேதைப்போலபுலம்புகிறாய்
காயக்கனைபட்டுக் கல்வாயகத்தீழ்ந்திருந்தான்
ஆயன்பெருமாளு மாவேசமாவண்ணத்தார்
மாதுகன்னியல்லியை மாலைக்கவேணுமென்று
மாயமிருக்கச்சே மாயவருருண்டு பண்ணூர்
காட்டானைசிங்கத்துடு காடுபுலிபாம்புகளும்
மானுமயக்களுடன் மட்டற்றபன்றிகளும்
மயிலுங்குயிலன்னம் வண்ணவண்ணப்பட்சிகளும்
அநேகமிருக்கச்சே அதிராமருண்டுபண்ணூர்
மதுரைக்குப்படைகள் மகாசெனங்கள்தனையும்
காட்டிலவாத்தான்பயந்து கல்விக்கள்ளார்முன்னேயந்தார்
அல்லியர்க்குத்தெண்டனிட்டு அதுபணிந்தேதுரைப்பார்
இந்தவனாசாமைத்தோ மிதேசமில்லையென்றிருந்தோம்
என்னகுறைசெய்தோ மென்னவொன்றுமிருக்கக்காண்
காட்டுக்குப்போவோமென்றுற் கொடுத்தமிருகமம்மா
பொல்லாதமிருகங்கள் புலிகள்அரத்துதம்மா

எதாற்பிழைப்போ மென்றெல்லாரு மழுதுநின்ருர்
அல்லிப்பெருமாளு மாரணங்கே துரைப்பாள்

அல்லியரசாணி வேட்டைக்கு வருகிறது

மருதத்தாரப்படி வரென்று மிகவுபயம்வேண்டாம்
வேட்டைக்குநான்போய் வேணமிருகமெல்லாம்
அரைநாழிக்குள்ளே யதம்பண்ணிவருவேனென்றாள்
அரசரெல்லவரு மாரண்மனைக்குப்போங்களென்ருள்
அதுதன்னைப்பெண்களெல்லா மாரண்மனைக்குப்போனபின்பு
ஆரபடுதாதிகளே அலங்காரச்செங்கமலம்
வேட்டையாடும்பெண்களை நீ விரைந்தோடியழைப்புமென
குறவர்பெண்கள் மறவர்பெண்கள் கூட்டிவாதாதியரே
வில்லியர்பெண்களை நீ விரைந்தோடியழையுமென்ருள்
குதிரைமேல்விளிகட்டுங் கொப்பெனவேதாதியென்ருள்
அவ்வார்த்தைதான்கேட் டாரணங்குதாதியவள்
இலாயத்திற்கட்டிவைத்து இருக்கின்றபுரவிகளில்
பாராசாரிப்புரவிதன்னைப் பாங்குடனே தானவிழ்த்து
குதிரைகுளிப்பாட்டி கொப்பணவேகடிவாளமிட்டு
காலுகாற்வெண்டயமாம் கழுத்திற்கொலுசுகளாங்
பக்கத்திலங்குபடி படியவைத்தாரப்போது
கன்னாடிசல்லிகட்டி கவரியான்சுங்குவிட்டு
முத்துத்தாரகைக்கத்தரு முன்னூலேதான்சொருகி
இமாம்பட்டிநிறகுலே ஒயிலாகத்தான்சொருகி
குதிரையலங்கரித்து கொண்டுவந்துமுன்புவிட்டார்
அல்லிப்பெருமாளு மப்போதுதானெழுந்து
அம்புவில்லுங்கைபிடித்து அம்பறாத்தூணிமுதுகணிந்து
பதினாயிரந்தோழியார் பக்கம்புடைசூழ
ஆரம்பாரனை குதிரை யல்லியுடன்பயணமாச்சு
வெள்ளித்தழுக்கடித்து வெங்கலக்கொம்பூதினார்கள்
பொன்னின்தழுக்கடித்துப் புறப்பட்டார்பெண்களெல்லாம்
வேட்டைநாய்சங்கிலியும் விருதுகட்டிவருகிருர்கள்
மான்வலையுங்கல்லெறியும் வளைதடியுஞ்சக்கரமும்
இரட்டைக்குழாய்த்துப்பாக்கி இருதோளிலிட்டார்கள்
காற்செருப்புக்கோற்சட்டையுங் கையில்சில்லாக்கோலும்
அனைத்தழகுபெண்களெல்லாம் அல்லியரைச்சூழ்ந்துவர
அப்போதுஅல்லியரும் ஆரணங்குதானெழுந்து
பரிவியருகில்வந்தாள் பொற்கொடியாள்மாதுகன்னி
புரவிதன்னைச்சுற்றி போதவேசரணஞ்செய்தாள்
கழுத்துமயிர்ப்பிடித்து கடிவாளங்கைபிடித்தாள்
தட்டினாள்புரவிதன்னைச் சந்திரிற்றனே திருனாள்
அடிவயிற்றில்காலதட்ட அபாரியாயோடிற்று

ஆயிரம்புரவிகளும் அல்லியுடன்கூடவிட்டாள்
ஆயிரம்குதிரைகளில் அல்லியம்மாள்குதிரையது
காற்றாய்ப்பறந்தது கடுகவேவருகிறது
பட்டணத்தைத்தான்கடந்து பாரவனந்தான்வந்து
காட்டைவளைத்தார்கள் கானாயைச்சூழவிட்டார்
செடியைவளைத்தார்கள் செந்நாயைச்சூழவிட்டார்
கோணக்கொம்பூதுவார்கள் கொப்பனவேதமுக்கடிப்பார்
ஆயன்பெருமாளும் அருச்சுனரைத்தானெழுப்பி
வருகிறாள்காணல்லியரும் வனந்தனிலேவேட்டையாட

அல்லிக்கு அருச்சுனனம்புபொறுக்கித்தருவது.

அவள்-எய்கிறபாணமெல்லா மெழில்விசையனேபொறுக்கி
அம்புகள்தான்பொறுக்கி யல்லியர்க்குக்கொடுத்து
வல்லமையாய்வந்தானே மாலையிட்டுவைப்பேனென்றார்
அவ்வார்த்தைதான்கேட்டு அருச்சுனனுந்தானெழுந்தான்
மாயமிருகமது வந்ததேயல்லிமுன்பு
புள்ளிமான்றன்னையே பொற்கொடியாள்கண்டுவிட்டாள்
மானைத்துரத்தியவள் வருகிறாளேயல்லியரும்
காற்றாய்ப்பறந்ததுவே கானகத்தில்மானதுதான்
குதிரைசவாரிவிட்டுக் கொம்பனவேதுரத்தலுற்றாள்
கூடத்தொடர்ந்தானே கோபாலன்மைத்துனனும்
அல்லியராசாணியவள் அம்புகளெய்ததெல்லாம்
பொறுக்கித்தருவானே போர்விஜயனருச்சுனனும்
காடெல்லாம்வேட்டையாடிக் களைத்தாளேயல்லியரும்
விடுவிடுநேரமது வெயிலானவேளையிலே
ஆலமரத்தடியில் அங்கேயிறங்கிவிட்டாள்
ஆரடிதாதியரே யாசனம்போடுமென்றாள்
அரைத்துணியைத்தானவிழ்த்து அருச்சுனனுங்கீழ்போட்டான்
குதிரையைக்கட்டுமென்று கொப்பனவேதான்படுத்தாள்
அகில்மரந்தன்னுடனே யணைத்துவைத்தார்குதிரைதன்னை
பாங்கியரேஎன்னுடைய பாதம்பிடியுமென்றாள்
அருச்சுனராசதுரை அல்லியருக்கெதிரேவந்து
அல்லியம்மாள்தன்பாத மருச்சுனனும்பிடிக்கலுற்றான்
கைகால்பிடிக்கையிலே கணையாழிமூற்றிக்கொண்டான்
ஆரடிதாதியரே யலங்காரத்தோழியரே
நீங்கள்கற்றகதைதனிலே கதையொன்றுசொல்லுமென்றார்

அருச்சுனன் அல்லிக்குக்கதைசொல்லுதல்

ஆறலழகுமன்ன னல்லியர்க்குக்கதையுரைப்பான்
அல்லியராசாணி யம்மாதுரைசாணி
துருவாசர்மந்திரத்தால் துலங்குவசந்தகலாமணிகள்
சந்திரகுலம்விளங்கவந்த தர்மராவைந்துபேர்கள்

பாண்டுராசன்பெற்றெடுத்த பஞ்சவர்களைவருண்டு
தருமருக்குநேரிளையான் தாக்குடையவீமராசன்
வீமருக்குநேரிளையான் வில்லாங்குமருச்சுனன்றான்
தொருப்பிற்பிறந்தபெண்ணும் நேரிளையாள் திரௌபதியை
மட்டாதனில்வளைத்து இளங்கொடியைமாலையிட்டான்
மீசைமுறுக்கழகன் விழியிற்கருப்பழகன்
நாவுதனிற்சட்டசேத்திரம நயனவிழிப்பார்வையுள்ளான்
தோளில்துளசிமாலை தொப்பளிலயிர்தகலசம்
பல்லிற்பரசவிதை பாதத்திற்செந்தாமரை
நூதுகிமேட்டசேனை முழங்காலிற்முத்துமாணிக்கம்
சந்திரிலீலைமன்மதன்றான் சிறுபெண்கள்மணவாளன்
முன்னிலும்பின்னழகன் மோகசன்னியமணவாளன்
பின்னிலும்முன்னழகன் பெண்களுக்குமணவாளன்
அருச்சுனனைப்போல அழகுடையான்யாருமில்லை
திக்குப்பாலகரையுஞ் செயம்பண்ணுஞ்சேவகன்றான்
இனிப்பிறக்கும்பெண்களுக்கு மேற்றமணவாளன்
என்றுசொல்லக்கேட்டு இளங்கொடியாலல்லியம்மாள்
மன்னகதைசொன்னதென்று பேறழுகப்பார்த்தாள்காண்
மீசைகட்டும்பாவனையும் விழியழகுங்கண்டுவிட்டாள்

அருச்சுனன்பேரில் அல்லியரசாணிகோபித்தது.

நீ-ஆரடா ஆண்பிள்ளையென் றாயுதந்தானெடுத்தாள்
காற்றாய்ப்பறந்தானே கட்டழகனருச்சுனனும்
கத்தியெடுக்கையிலே காதவழியோடிவந்தான்
நிற்கத்தரியாமல் நீலவர்ணர்பக்கம்வந்தான்
அங்கேநடந்தசேதி யாண்டவர்க்குத்தானுரைத்தான்
கதைகளுஞ்சொன்னேன்யான் காலும்பிடித்தேனே
காலும்பிடித்தேனே கலைகள்தெளியவில்லை
கணையாழிமோதிரத்தைக் கழற்றிவந்தேன்மாயவனே
மாலைப்பசுங்கிளியை மாலையிட்டுவையுமையா
ஆவியுருகிறதே ஆனசீவன்போகிறதே
ஐந்துபாணங்கைத்தலைவா அடியேனெஞ்சுறுகிறதே
ஆறுருகுபாணமதா அடியேன்மார்புருகிறதே
பஞ்சிலிட்டதீப்போல பதைத்துருகுதென்மனது
அவளைப்போலழகுடையா ளவனியிலேயானறியேன்
பார்த்துமறியேனையா படத்திலேயுங்கண்டதில்லை
சழுத்துசச்சனைவ னெழுதிவாவிட்டாரோ
தெருட்டுத்தச்சனவன் மெய்யாய்ச்சிருட்டித்தாரோ
ஏதாய்ச்சிருட்டித்தாரோ ஐயன்பிரமதேவன்
அல்லியென்பாண்மெல்லியென்பா ளனந்தனிலேபெண்ணேயென்பா
காமக்கணையாலே களைத்தாங்கிப்போய்விட்டான்

மூர்ச்சைபட்டுவிழுந்தானே மூடமன்னனர்ச்சனனும்
அப்போதுநாரதியா ரத்தினபேர்தோழிகளும்
பாங்கிமார்தோழியாம் பத்தினியாளுமில்லைந்தார்
ஆரடாநீயடோ அருமையாய்வந்ததெல்லாம்
ஆரோவொருவனவன் அலுப்பிறந்தவன்டி
காலும்பிடித்தானே கைகளுமெடுத்தானே
தேடிப்பிடித்துவாரும் தண்டித்துப்போடுவேன்.
அங்காரப்பட்டவளை அத்திரமஞ்செய்யவேணும்
ஆயிரந்தோழிகளை அங்கெனவேதேடவிட்டார்
எங்கெங்குந்தேடியே யினியவிடமாராய்ந்து
கள்ளன்திருடனைத்தான் காணுமென்றலைந்தார்
பேயோபிசாசோதான் பின்தொடர்ந்ததுவாமோ
ஆறுதலாய்த்தோன்றியே ஆர்ச்சுனரையுந்தேடினறு
அதனைப்பழுதென்று அக்கினிசெய்யுந்திறத்தன்
மற்றுமுளமாளிகையிலேனையராணிருக்குமவளை
பாங்கியருந்தோழியரும் பக்கம்புடைசூழ
மாளிகைவாசலெல்லாம் மண்டபம்போய்ச்சேர்ந்தான்

ஸ்ரீகிருஷ்ணபகவான் படமெழுதிக்கட்டியதும்
அருச்சுனன் தேடிவதும்.

அப்போதுகரியமா லாலோசனைசெய்து
அல்லியரைப்போலாக அழகுபடமெழுதி
படங்களெழுதியே பாராளந்தமாயவரும்
குளத்தாங்கரைபுறத்தே கொம்புமரத்தன்னிலே
உயர்ந்தமரத்தனிலே உடனேதான்கட்டிவைத்தார்
தண்ணீரில்நிழல்தெரியச் சுவாமியங்கேகட்டிவைத்தார்
அருச்சுனனைத்தட்டியே பரிவாய்த்தானெழுப்பி
காண்டீபவர்ச்சுனனே தாகமெனக்குவருகிறது
தண்ணீருங்கொண்டுவந்து தந்தாயேயாமாகில்
மாலைப்பசுங்கிளியை மாலையிட்டுவைப்பேனடா
என்றுசொல்லக்கேட்டு மகிழ்ந்தானருச்சுனனும்
கமண்டலத்தைத்தானெடுத்து கடுகவேநடந்தான்
வனத்திற்குளத்தைத்தேடி வந்தருகேயருச்சுனனும்
தண்ணீரிலெடுக்கப்போனா னதைபலசோதியுமென்
தண்ணீரிற்போயிருக்கத் தையலசோதியபோல்
ஏனிதுபழகுனடை யக்கேயிடைப்பாகளாள்
கட்டழகுண்டுமெத்தையுண்டு மாப்பிடிக்கத்தாமுண்டு
ஆடவென்றலுஞ்சனுண்டு அப்பந்திருக்கமெத்தையுண்டு
பந்தாடிக்கொண்டாடி பன்னாக்குழலாடி
அம்மானையாடியே தானமர்ந்துவீற்றிருப்பாய்
தேனேபசுங்கிளியே செங்கோதனைவீற்றிருப்பாய்

உன்சொல்லுகேளாம லத்தரியேநானிருப்பேன்
[illegible]கொண்டுகான் உழன்றதிரிகிறனே
[illegible]மருந்தாலே தாயைமறந்தேனே
[illegible]த்தம்பிமார வணைவரையுநான்மறந்தேன்
[illegible]மணையாலே கனைதாங்கிப்போறேனடி.
[illegible]வெள்ளாமுன்மேலே அலையுதடிஎன்சிவன்
[illegible]வைத்திறவாயோ மறுவார்த்தைச்சொல்லாயோ
[illegible]த்திறவாயோ தனிவார்த்தைச்சொல்லாயோ
[illegible]த்திறந்தாயானால் வச்சிரமுதிருமடி
[illegible]முதிர்ந்தாலே வாரியெடுக்குறேண்டி
[illegible]த்திறந்தாலே தங்கமுதிருமடி
[illegible]திர்ந்தாலே தடவியெடுக்கிறேண்டி
[illegible]த்திறவாய்திறந்து செப்பாயோஒருவார்த்தை
[illegible]டோர்பணைந்தால் மகாவிடாய்திருமடி
[illegible]ணைந்தால் [illegible]தெரியுமடி
[illegible] இதென்சொல்லுவென்யான்
[illegible]
[illegible]மாலைப்[illegible]யே
[illegible]தழுவிப்பிடிப்பேண்டி
[illegible]குதித்தானே இளவிசையராசனவன்
[illegible]முழுகி[illegible]
[illegible] தண்ணீரிற்றடவிறனே
[illegible] தடவிவலித்தெடுத்தான்
அலித்துசலித்தவனு மர்ச்சுனனும்வெளியில்வந்தான்
[illegible]மேல்வந்தவனும் [illegible]
[illegible] றென்றறியேன்
போனவிடமறியேன் போய்பதுங்குந்தாவறியேன்
தங்குமிடமறிதேன் சஞ்சரிக்குந்தாவறியேன்
[illegible] இருங்கியவள்பார்க்கையிலே
தண்ணீர்தெளிந்தபின்பு [illegible]பார்த்துவிட்டான்
இப்போதடவினோனை யெங்கிருந்தாயேக்கிழையே
என்னவித்தைகற்றிருக்க விளங்கொடியேகற்றவள்காண்
மாயமுற்றவளோ மந்திரங்கள்கற்றவளோ
[illegible]வித்தைதான் மந்திரத்தைக்கற்றாயோ
[illegible]யுனைப்பிடிக்க என்கையாலாகாதோ
மறுபடியுங்குதித்தாரே மன்னன்துரைராசாவும்
அல்லவளிக்குமவளோ அந்தவேளைபோய்வந்து
படர்ந்தவமிழ்த்தவரும் பாரளந்தார்போய்மறைந்தார்
[illegible] நல்விசயராசதுரை
[illegible] குளங்கலக்கிவிட்டதுபோல்

7

மூழ்கித்தடவினனே முடிமன்னராசனவன்
அல்லியரைக்காணுமலலைந்துவிசாரமிட்டான்
வந்துவெகுநேரமாச்சு மாயவரென்சொல்வாரோ
கனைத்துவிசாரமிட்டு கமண்டலத்தில்நீர்முகந்து
மாயவனார்தன்னருகில் வந்தானேஅர்ச்சுனனும்
என்காணுமர்ச்சுனரே இன்னேரமேதுசெய்தாய்
சாமநெடுநேரமாச்சு தண்ணீர்கொண்டுவரப்போய்
என்னவதிசயமா இருந்தீர்தானர்ச்சுனரே
ஐயாபெருமானே அடியேனொருவார்த்தை
தண்ணீர்மொள்ளப்போனபோது தையலரைக்கண்டேனையா
தண்ணீர்ப்போர் தரிசித்துதெந்தனுக்கு
குதித்துத்தடவினேன்பார் கொப்பினையைக்காணல்

ஸ்ரீகிருஷ்ணபகவான் நித்திரைசெய்யவே அர்ச்சுனராஜன்
அல்லியரைத் தேடப்போனது.

அவ்வார்த்தைதான்கேட்டு ஸ்ரீராமரேதுசொல்வார்
அல்லியர்மேல்மிகுந்தமது அயர்வில்லையர்ச்சுனரே
களைப்பாய்வருகிறது காண்டீபாவெந்தனுக்கு
நித்திரைசெய்தபின்பு சேயிழையைப்பார்த்து
மாலைப்பசுங்கிளியை மாலையிட்டுவைப்பேனடா
என்று-வாழ்விசையன்தொடைமேலே மாயவனார்தான்படுத்தார்
கள்ளக்குறட்டைவிட்டு அரியமால்தூங்கினர்
அப்போதுவாள்விசைய னருச்சுனனுமேதுசெய்வான்
சிரசைநழுவவிட்டுத் தேர்விசையன்தானெழுந்தான்
பாராங்கல்லைத்தூக்கிக்கொண்டு பார்த்திவன்வருகிறனே
தலைமேலேகல்போட்டுத் தார்விசையன்தானினைத்தான்
என்றுகலங்கி என்னையிட்டுத்தானிருந்தார்
கல்லைப்பிடித்துவந்து காண்டீபனர்ச்சுனனும்
தலைக்குயரம்வைத்து சுவாமியைப்படுக்கவைத்தான்
அல்லிமேற்சிந்தைகொண்டு அர்ச்சுனனும்போகலுற்றான்
மதுரைக்குப்போகவென்று மாதுதனைக்காணவென்று
காடுசெடி தாண்டி கடுகவருகையிலே
அருச்சுனன்போனசேதி யறிந்துமேமாயவரும்
அருச்சுனராஜனுக் கனத்தாய்வந்துநேர்ந்ததென்று

ஸ்ரீகிருஷ்ணபகவான் குறத்திரூபங்கொண்டது.

மாயன்பெருமான் வடிவெடுத்தாரந்நேரம்
செக்கச்சிவலைப்பாய்ச் செம்பெண்குறத்தியானார்
அக்குமணி சொக்குமணி அழகானபாசிமணி
பச்சைமணிபவளமணி பாங்காயலங்கரித்து
குறத்தியைப்போலாகக் கொற்றவனார்வடிவெடுத்தார்
தண்டானேகுறத்தியரைக் கட்டழகனருச்சுனனும்

ஆச்சிக்குறத்தியரே யடியேன்யான்தெண்டனம்மா
கைபார்த்துக்குறியுரைக்க கட்டழகிவல்லவியா
மனதிலெண்ணித்தகுறி சொல்வாயோமாதாவே
எந்தவூருங்களூரு எனக்கரியச்சொல்லுமென்றான்
தினதெந்தினா தினதெந்தினா தினதெந்தினா தினனா
தென்னாதினா தினனா தினதெந்தினா தினனா
எங்களூருதிருநாடு கேட்கிலையோ தம்பி
சக்கரமுன்னவிந்திரனு ராஜாவுமெங்கள்நாடு
சந்திரர்கள்சூரியர்கள் தவம்புரியுநாடு
தவமுனிவர்ரிஷிகளெல்லாம் வாழுமெங்கள்நாடு
கொச்சிமலைகுடகுமலை யெங்களதுநாடு
குபேரர்வாழுவது மெங்களதுநாடு
பச்சைமலைபவளமலை யெங்களதுநாடு
பரமசிவன்வாழுவது மெங்களதுநாடு
வங்காளஞ்சிங்காள மராட்டியமெங்கள்நாடு
வளம்பாடிக்குறியுரைக்க வந்தேனடா தம்பி
பங்காளரோடேல பழங்கூறிவருவோம்
பரமசிவனுமையவட்கும் கைபார்க்குங்குறத்தி
நுக்கான்லட்சுமக்காள் பொம்மக்காளென்பார்
கலைமதிக்குக்குறியுரைப்போம் கட்டணையாய்கரங்கள்
உண்மையாய்க்குறியுரைப்போம் தண்மையில்லைதம்பி
என்றுரையென்றுரை யென்றவளுஞ்சிரித்தாள்

வேறு.

ஆறுதல்கேள் கட்டுவச்சி யடியேனொருவார்த்தை
தெய்வக்குறத்தியென்றால் சொல்லுங்குறையெந்தனுக்கு
உண்மைக்குறியுரைத்தால் உச்சிதங்கள் தருவேனடி
சாதிலிங்குண்டலமும் சரிகைப்பவுத்திரமும்
சேலை-உடுத்துமுன்னைமானை முந்தனுக்குத்தருவேனடி
கைபார்த்துக்குறியுரையும் கட்டழகியெந்தனுக்கு
நாமக்குறத்தியவள் நலமாகவேதுசொல்வாள்
வண்மைக்குறத்தியவள் வாய்திறந்தேதுசொல்வாள்

குறத்தி அருச்சுனராசனுக்குக் குறிசொன்னதுகுறம்.

தினதெந்தினா தினதெந்தினா தினதெந்தினா தினனா
தென்னாதினா தினனா தினதெந்தினா தினனா.

திங்கள்மதிபிறைசூடுஞ் சிவனுடையமகனே
திருத்தணிகைவாழ்முருகர் சேவையருளவேண்டும்
மல்லையாளத்தச்சியம்மை வாக்கருளவேண்டும்
அலைமேலுமங்கையரே மலர்மேலுஞ்சிந்தை
அன்னைவேறும்வந்துகுறி யன்புதரவேண்டும்
ஆகாயவாணிதுர்க்கை ஐயனார்பிடாரி

ஆட்டையைக்கிள்ளியுமையை ஒருமிளியதுறிசொல்லும்
பொய்க்கதின்றும் பொற்கொடியேதெய்வம்
பூசாடைசாரியமைமை புகழ்ந்துறிசொல்லும்
தெய்வங்களினித்தாலே சிலிர்த்துக்கொண்டுடம்பு
திரேகமெல்லா மயிர்க்கூச்சி பிடிக்கிறதேதம்பி
வாகடமனைவிசுதடா ஐவர்க்காப்போக
பயக்குகிறதென்னுடம்பை சன்னதம்கொண் டேபோல்
கூடைகொண்டாடிடா சொற்றவனேயெனக்கு
கோலவிழி துடிக்கிறது குறிகள்சொல்லக்கேளு
சக்கிரதுவசாக்கள் தருமனேயர்கேள்
தணிமுருகாறுகின்ற தருமர்தம்பிதான்
வில்நகலான் வடிவழகன் வேர்வெயர்த்தான்
தீர்த்தயாத்திரைபோகவென்று தோழனுடன்வந்தாய்
வடிவழகில்நதலா மெய்ம்மதுரையாளும்
மாதரந்தஅல்லியின்மேல் மையல்கொண்டாய்நீயும்
ஆருயிரம்பாண்டியற்கு அரியதுரைமகளாம்
அல்லியின்மேலாசைகொண் டிலகுறுய்நீயும்
பொய்யோடவென்குறிகள் மெய்யோடாபுலவாய்
புண்ணியனேதர்மர்தம்பி பொறுமையுடன்சொல்வாய்
என்றவனைத்தான்பார்த் தினைவிழியாளபிராட்டி
இளகுறத்திதனைப்போலே யிடைநகைத்தாள்

வேறு

மெய்தான்காணுசெயரே விளம்பினையெந்தனுக்கு
கண்டதுகண்டாப்போல கட்டுரைத்துசொல்லிவிட்டாய்
தெய்வக்குறத்தி தெளிவானகட்டுரைச்சி
உள்ளக்குறியெனக்கு உத்தமியேநீயுரைத்தாய்
அல்லியரைமாலையிட்டு அழகுமணஞ்சூட்டுவேனோ
என்மனதுக்கேற்றபடி வருவாளோ அல்லியம்மாள்
என்மீதிலிச்சைகொண்டு இசைந்துவருவாளம்மா
பாதம்பணிந்தேனே பார்த்திபனர்ச்சுனனும்
ஆறுலக்கள் தம்பியரே அல்லிவருவதற்கு
மூன்றுவிரக்குறிகையது முடிமணிநோக்கவென
அம்மருந்தைந்வாங்கி யல்லிபுறம்போய்ச்சோர்ந்து
தென்மொழியாள்பட்டணத்தில் திருக்குளத்திற்போய்ச்சேர்ந்து
நால்-ந்தமாக்கெடுத்து தண்ணீரில்நீயுனைந்தால
மருந்துகளையுமப்போ தவள்மனதுகளையுமோடா
குளிகைகளையுமப்போதவள் குணமுமதிருமபுமோடா
அல்லிமனமுவந்து அழகுமணஞ்செய்திடுவாள்
பொம்மக்காள்பேரைச்சொன்னால் தெய்வமக்காள்நேருந்துவிடும்
ராமாக்கள்பேரைச்சொன்னால் லட்சுமக்காள்நேர்ந்துவிடும்

பொய்யல்லவென மருந்து புண்ணியனேயான் தருவேன்
கர்த்தனுடையானை முடித்தபணத்தாருமென்றாள்
[illegible] விழுந்தண்டமுடி கையில்பவுத்திரமும்
கச்சைகருத்தட்டிகளும் கழட்டிக்கொடுத்தானே
இந்தமருந்துதான் பலியாமற்போனக்கால்
[illegible] கேட்டுவே [illegible] ஆச்சியரேசொல்லுமென்றான்
[illegible] தம்பியரே யற்பமாய்போச்சுதானால்
[illegible] வெள்ளைதான்
[illegible] எதிர்பூசைசெய்தனது
[illegible] பொய்மக்கள் லட்சக்கணென்றழைத்தான்
[illegible] நடுவே [illegible] மனையஞ்சாதே
அர்ச்சுனன் தரித்திருந்த ஆபரணமுள்ளதெல்லாம்
[illegible] குல்லா தட்டிகச்சை பலவிதவுடமையெல்லாம்
[illegible] கொடுத்தான் கட்டழகனர்ச்சுனனும்
[illegible] கிடந்தானே பன்றிகுறத்திதனைப்போலே
ஆனைமுகாசுரனை அர்ச்சுனன்வழிநடந்தான்
உன்னை மனமகிழ்ந்து உத்தமனும் போகலுற்றான்
காடுசெடிதாண்டி கடுகிவந்தான் தென்மதுரை

அருச்சுனன் அல்லிபிறந்த திருக்குளத்தில் மருந்துரைத்தது.

பனங்கட்டுபொய்கைதனில் படியிலிறங்கியபின்
வண்ணமருந்தெடுத்து தண்ணீரிலுரைக்கலுற்றான்
அல்லியென்பாள் மெல்லியென்பாள் தனிலே பெண்ணேயென்பாள்
வருவாளோ அல்லியென்று வாய்திறந்து பெண்ணேயென்பான்
மருந்துகரையும்போதவள் மனதுங்கரையாதோ
துளிகைகரையயிலே [illegible] பாதோ
[illegible] தேடிவருவாளோ
அப்போமனை [illegible] என்னருகில்வாராயோ
காமன்கணையாலே [illegible] தாங்கிப்போறேனே
மன்மதபாணமடி [illegible] க்குதடி
சித்தசன்தொட்டகணை [illegible] மார்புருகுதடி
உன்னைக்கொண்டுதான் வுழன்றுதிரிகிறேனே
அல்லியென்பாள் மெல்லியென்பாள் தனிலே பெண்ணேயென்பான்
வருவாளோ அல்லியென்பாள் வாய்திறந்து பெண்ணேயென்பான்
வண்ணமருந்தெடுத்து தண்ணீரிலுரைக்கலுற்றான்
அல்லியரசுமாளவருடையதாதியர்கள்
ஆயிரந்தாதிமார்கள் [illegible] குதாமெழுந்து
தங்கக்குடமெடுத்துத் தண்ணீர்க்கு [illegible] லுற்றார்
பனங்கட்டுதிருக்குளத்தில் படியோரமவந்தார்கள்
மருந்துரைக்குமவனுடைய வார்த்தைகள்சொல்கிறதும்
அல்லியரசைவிசாரிப்பதும் அவ்வார்த்தைகேட்டார்கள்

இடிவிழுவான்சொன்னதெல்லா மெல்லவருங்கேட்டார்கள்
அல்லிப்பெருமாளை யரசாளுநாயகியை
வம்புதும்புஞ்சொல்வார்கள் மண்டலத்திலாருமில்லை
அல்லியென்றுபேர்சொன்னால் எழுதபிள்ளைவாய்மூடும்
ஆகடியவார்த்தையெல்லா மாச்சியர்க்குச்சொல்லவென்று
ஓட்டம்நடையுமாக ஓடிவந்தார் தாதியர்கள்
அல்லியம்மாள்முன்னாலே அடிபணிந்துதெண்டனிட்டார்
ஆர்பணிதாதியரே அறியவுரையுமென்றாள்
ஆர்பணியுமல்லவேநா னடியேன் திருப்பணிதான்
தங்கக்குடமெடுத்து தண்ணீர்க்குப்போனோமம்மா
பவளக்கட்டுக்குளந்தனிலே படியிலொருவனம்மா
வண்ணமருந்துகளைத் தண்ணீரிலரைக்கலுற்றான்
ஆகடியப்சொல்லுகிறான் அழும்புகளுப்பேசுகிறான்
வம்புதும்பும்பேசுகிறான் வாய்பழுதுஞ்சொல்லுகிறான்
காதாரக்கேட்டோமம்மா கணக்குலைந்துவந்தோமம்மா
அவ்வார்த்தைதான்கேட்டு அல்லிக்குக்கோபமதாய்
எட்டிப்பழம்போலே இருகண்ணுந்தான்சிவந்து
செந்தலைநாகம்போற் சீறியவள்கோபமதாய்
எழுபிராயந்தனி லெதிர்த்துவந்தநீண்முகனை
நீண்முகனைக்கொன்று நீலிபட்டமாளுகிறேன்
அடிபெண்ணையல்லியென்பார் ஆருமொருவரில்லை
பொம்மைவிருதுகட்டிப் பூமியரசாளுகிறேன்
பாலைக்கறந்துதான் பட்டணத்தில்வைத்தாலும்
பறக்கின்றகாகமது பாராதுதலையெடுத்து
ஐம்பத்தாறுநாதமுமென் னாக்கினைகள்மெத்தவுண்டு
அஞ்சாமல்வந்திங்கே யழும்புசொன்னாரடிதான்
என்னவிதமாயவனை யாக்கினைகள்செய்திடுவோம்
என்றுமவள்கேட்க வேதுசொல்வாள்பவளசேனை
கட்டுமவிறுதறுத்துக் கலியாணஞ்செய்வதற்கு
மண்டலத்துராசாவோ வானவனோதேவனோதான்
மணஞ்சூட்டவந்தவன்போல் மாதாவேகாண்கிறது
என்னதையோசனை யெண்ணியவள்மனதில்
அல்லிப்பெருமாள்தனக் காலோசனையேதுசொல்வாள்
விடிவிடிநேரத்திலே வெயிலானவேளையிலே
வெம்பாமணலிலே போட்டுப்புரட்டுமென்றாள்
ஆகொடும்பாவிதனை ஆற்றில்புரட்டிடாலே
செவ்வழுகியவன் செத்துமடிந்திடுவான்
ஆடிதோழியரே ஆயிரம்பேர்வாருங்கள்
ஆற்றுமணல்தனிலே அவனைப்புரட்டுங்கள்
வெம்பாமணல்தனிலே யிழுத்துப்புரட்டுங்கள்

கட்டிப்புரட்டுங்கள் கள்ளன் திருடனைத்தான்
செத்தாமடிந்தபின்பு சேதிவந்துசொல்லுமென்றாள்
அவ்வார்த்தைதான் டாயிரந்தோழிமார்கள்

அருச்சுனருக்கு அல்லியரசாணி முதல்தெண்டனையிட்டது.

ஓட்டம்நடையுமாக ஓடிவந்தார்தாதியர்கள்
ஆயிரந்தோழிமார்க ளருச்சுனரைத்தானெடுத்தார்
ஆற்றுமணல்தனிலே அர்ச்சுனரைப்போட்டுவைத்தார்
காண்டீபனர்ச்சுனற்கு கனமோசம்வருகுதென்று
ஆயன்பெருமானும் யாரைநினைக்கலுற்றார்
சூரியபகவானைத் திருமாலுந்தானினைத்தார்
தானலைக்கவேண்டாங் காண்டீபனர்ச்சுனற்கு
அர்ச்சுனரைக்காருமென்று ஆயருந்தோத்தரித்தார்
அப்போதுதோழியர்க ளாற்றோரம்வந்துநின்று
ஆற்றின்மணலிற்போட் டருச்சுனரைப்புரட்டுறார்கள்
சொற்றவனாருச்சுனற்குக் குளிர்ந்தஜலம்போலிருக்கும்
ஆயிரந்தோழியர்க்கு அனல்கொண்டுவீசுதங்கே
செல்விப்பழம்போலே நெருங்கிற்றேகொப்பளங்கள்
அத்தண்டதோழிகளும் அலைகுலைந்துஓடுகிறார்
அப்போதருச்சுனனும் ஆனைமுகனேதுசொல்வான்
அல்லியரும்காணுமா யமர்ந்துவிளையாட
மருவிவிளையாடுதற்கு மண்டபந்தானில்லையோ
ஆற்றிலேவந்துநீ யமர்ந்துவிளையாடிருப்பாய்
எப்போதுதான்வருவா யென்குறைதீர்வதற்கு
மனைதுவருவதெப்போ மருவியணைவதெப்போ
இத்தமிழங்காதோ சற்றேமணம்வருமோ
என்றுபுலம்புகிறா னியலானவர்ச்சுனனும்
அப்போதுதாதிமா ரரணங்குமேதுரைப்பாள்
அல்லியர்க்குத்தண்டனிட்டு ஆரணங்குமேதுரைப்பாள்
வெம்பாமணல்தனிலே வேகவேபுரட்டுறோமம்
ஆற்றுமணலிற்போட்டு அர்ச்சுனரைப்புரட்டும்போது
எங்கள்சரீரமெல்லாஞ் சங்கம்பழம்போலாச்சு
செல்விப்பழம்போல் நெருங்கிற்றேகொப்பளங்கள்
அவனுக்கு-வாட்டமில்லை வருத்தமில்லை மாபாவியானவற்கு
அல்லியல்லியென் றுசொல்லி யலைகிறான்மாபாவி
உன்மேலேயிச்சையாய் உருகிப்புலம்புகிறான்
அல்லியெம்பெருமாளும் ஆரணங்குமேதுசொல்வாள்
வானத்துசாமுலமேதான் மருந்துண்டபாவிகையில்
என்னமருந்தறிவான் இடிவிழுவான்பாவியவன்
பாக்கிகளில்நல்லவளாம் பவளசேனையேதுசொல்வாள்
இக்குமரத்திலேபோட்டுத் தூக்கிவிடச்சொல்லுமென்றாள்

செங்கமலத்தாதியரே தோழியரைத்தானழைத்து
ஊருக்குமேற்பாரிசு ஒருசாரவழிதனிலே
தூக்குமரஞ்செப்பனிட்டுத் தோழியரேபோமென்றாள்

அருச்சுனருக்கு அல்லிபிரண்டாவது தண்டனையிட்டது.

அவ்வார்த்தைதான்கேட்டு மறுகினாள்செங்கமலம்
இடுக்கென்றெழுந்திருந்து தோழியர்தானுமாய்
தச்சன்மாளானைத் தையலார்தானுமாக
தூக்குமரஞ்செப்பனிட்டு நேராய்த்தாக்கினார்கள்
கொண்டுவந்தார் தூணாக் கொப்பனைவைத்தார்கள்
ஏணியுஞ்சார்த்தி இனியகயிற்போட்டார்கள்
அர்ச்சுனராசனை அங்கேயழைத்துவந்தார்
சுற்றிவளைத்தார்கள் சூழ்ந்தார்கள் தாதியர்கள்
ஏணிமேலேறுமென்றார் இயலானமன்னவனை
அப்போதருச்சுனனு மானமுகனேசொல்வான்
பார்த்துமறியேனடி பாருலகில்கண்டதில்லை
கண்டுமறியேனடி காதாரக்கேட்டதில்லை
போட்டுமறியேன்காண் புதிதாகத்தோனுது
எனக்குத்தெரியும்வகை இன்பமாய்க்காண்பியுங்கள்
ஏணிமேலேறி எடுத்துகயிர்பூட்டிக்கொள்
இந்தவிதமென்றுசொல்லி எனக்குக்காண்பியுங்கள்
அறியாதவெனக்கு அறியப்படுத்துங்கள்
இவ்வார்த்தைதான்கேட்டு டெழுந்தாளேசெங்கமலம்
காணவொட்டாதவனே தெரியாதோவுன்னுடைத்தை
இதோபாருமென்றுசொல்லி ஏணிமேலேறினளே

ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி பெருச்சாளிரூபங்கொண்டு
ஏணியைத் தள்ளிவிட்டது.

அந்தசமயம்பார்த்தாரே அரிராமசெம்பெருமான்
பெருச்சாளிபோலேவந்து புரட்டிவிட்டாரேணிதன்னை
சுருக்குவலித்துக்கொண்டு தொங்கினாள்தோழியவள்
கால்புதறிக்கொண்டு கண்விழித்துக்கொண்டாள்
நாவைபிதுக்கிக்கொண்டு நல்லுயிர்தான்போக்கதங்கே
செத்துமடிந்தாளே செங்கமலத்தோழியவள்
கண்டவனருச்சுனரும் கட்டழகேறதுசொல்வார்
நாக்கைபிதுக்கிக்கொண்டு நல்லவுஞ்சலாடினதும்
இவ்வளவோகுஸ்திரமா னெனக்குத்தெரியவரும்
இனிமேல்தெரியவரும் இறக்கிவாதோழியரே
ஐயையோதெய்வமென்று அழுகிறார்தோழியரும்
ஓட்டம்நடையமாக வோடிவந்தாரரசியண்டை
மருட்டத்துரைச்சியரே மாதாவேநீகேளும்
தூக்குமரந்தனிலே தோழியவள்போடப்போன

செங்கமலத்தோழியவள் தூக்கில்மடிந்தாளே
அவ்வார்த்தைதான்கேட்டு அல்லிமனதுநொந்து
பாங்கியிலும்நீகேளும் பவளசேனைநீகேளும்
என்னவிதமாக இவனைநாம்கொன்றிடலாம்
ஆரடிமந்திரியே ஆலோசனைசொல்லுகிறாள்
அப்போதுபவளசேனை யாலோசனைசொல்லுகிறாள்

அருச்சுனனை மூன்றுந்தரங் காளிக்குப் பலியிடச்செய்தது.

வடவாசல்செல்லியம்மான் மாகாளியம்மனுக்கு
பொங்கலையிட்டுநீங்கள் பலிபோட்டுவாருங்கள்
அவ்வார்த்தைதான்கேட்டு அரிவைத்தோழிமார்கள்
சிக்காயுமண்ணையுடன் தேங்காயுமிளநீரும்
புதுப்பானையரிசிகளும் பட்டபுஞ்சசர்க்கரையும்
கருப்பூரஞ்சாம்பிராணி காளிக்குக்கொண்டுவந்தார்
ஆடிதாதிகளே அழைத்துவரச்சொன்னை
இவ்வளவில்தாதிமார்க ளிவர்குறிபேசுகிறார்
ஆயன்பெருமாளும் அவ்வார்த்தைதானறிந்தார்
கார்மேகவர்ணரும் காளியண்டைபோயிருந்தார்
வாருமம்மா தங்கையரே வார்த்தையொன்று கேளும்
அல்லிப்பெருமானை அழகுமணந்துகட்டவென்று
காளையந்தஅர்ச்சுனனும் கள்ளவேஷங்கொண்டுவந்தார்
அர்ச்சுனராசனென் றறியாமலல்லியரும்
காளியம்மாவுந்தனுக்குக் காவுகொடுக்கச்செலவுதந்தார்
ஒச்சப்பெண்போலாக வுத்தமியேவாருமம்மா
பூசையானபிற்பாடு பொங்கலிட்டுத்திர்ந்தபின்பு
என்மேலேசன்னதம்மா யிந்தப்பலிவேண்டாமென்பேன்
என்வார்த்தைவேண்டாமென் றன்வார்த்தைகேட்பார்கள்
நானுரைத்தபாவனைபோல் நாயகமேநீயுரையும்
அர்ச்சுனராசனுக் கழிவுவந்ததாலக்கால்
வெற்றிமதயானை வீமனுனைப்பிழைக்கவொட்டான்
வச்சிரக்கோபக்கதையால் மண்டைபோட்டுத்தலையுடைப்பான்
தண்டாயுதமெடுத்துத் தாக்குடையவீமராசன்
காளியென்றும்பாராமல் கனத்தவுயிர்வாங்கிடுவான்
காளியற்குத்தானுரைத்துக் கரியமால்தானடந்தார்
ஒச்சப்பெண்போலாக வுலகளந்தார்வடிவெடுத்தார்
ஒச்சுத்திவாசலிலே வுட்கார்ந்திருந்தார்காண்
ஒட்டம்நடையாக வோடிவந்தார்தாதியர்கள்
கோவிலுக்குப்போகவேணும் குச்செடுத்துவாருமென்றார்
திறவுகோல்தானெடுத்துத் தேன்மொழியாள்போகலுற்றார்
கடுகிமுடுகியே காளிகோயில்வந்தார்
கோயில்கதவுதன்னைக் குச்சிட்டுத்தான்திறந்தாள்

குளத்தில்முழுகிவந்து கொம்பனையைப்பூசைசெய்து
அபிஷேகஞ்செய்துவைத்தா ளாங்காரக்காளியற்கு
சென்னலரிசிகொண்டு தேவியற்குப்பொங்கலிட்டார்
கோவில்திருவிளக்கைக் குறைவில்லாமலேற்றினார்கள்
தேங்காயுடைத்தார்கள் தீபதூபந்தான்கொடுத்தார்
அர்ச்சுனரைக்கூட்டிவந்து அம்மனுக்கெதிரேவைத்தார்
யுண்பிறக்குமுன்பிறந்த வழக்காடுங்கெக்கிசொல்லி
ககம்பிறக்குமுன்பிறந்த வுத்தண்டபத்திரகாளி
மாய்ந்தமழுவேந்துங் கர்த்தனிடதேவியரே
எரிந்தமழுவேந்து ஈஸ்வரனார்தேவியரே
வடவாசல்செல்லியம்மாள் மனிதர்பெலியேர்வைகொண்டும்
வசனிக்குப்போதையிலே வந்துவிடும்சத்துருங்கள்
ஓச்சப்பெண்மேலே யுதயமதெய்வமது
ஆண்காற்றடியாத அல்லிமலர்நாயகிக்கு
அவளுடையாள்லோகர்க்கு மாங்காரக்காளியல்லோ
மதுரையைக்காத்திருக்கும் மன்றுபிடாரியல்லோ
அல்லியருக்காகாதது எந்தனுக்குமாகாது
இப்படியால்வேண்டே னேர்வையில்லையெந்தனுக்கு
வெண்பலியிந்தாலே யனர்த்தம்பண்ணிபோட்டிடுவேன்
மதுரைக்குடிபடைய மாளபலிபோட்டிடுவேன்
இவ்வார்த்தைதான்கேட்டே துசொல்வார்தாதியர்கள்
நீசொன்னவாக்கியங்கள் நிச்சியமுமாகாது
காளியம்மன்வாயாலே கடுகிவுரைத்தாலே
ஈஸ்வரியாள்வாக்குரைத்தால் எல்லோருக்குநிச்சயந்தான்
என்றுபணிந்தார்கள் இயலானதாதியர்கள்
அஞ்சிப்பயந்தார்க ளல்லியிடமோடிவந்து
மகுடத்துரைச்சியவள் வந்துதெண்டம்பண்ணினார்கள்
காளியம்குப்பூசைபண்ணிக் கனத்தப்பொங்கலிட்டோமம்மா
ஆண்பலிவேண்டுமென் றாடினாள் சக்கதமாய்
அவளையும்கப்பாமல் அம்மன்சொல்வேண்டுமென்றோம்
அப்படியேகாளியம்மன் ஆண்பலிகொள்ளேனென்றாள்
அல்லிபெருமாட்டி காண்காற்றுமாகாது
எந்தனுக்குமாகாது என்றுளைக்காளியம்மன்
ஆண்பலிதந்தாலே யனர்த்தம்பண்ணிவிடுவேனென்றாள்
மதுரைக்குடிபடையை மாளபலிகொள்வேனென்றாள்
இவ்வார்த்தைகேட்டவுடனே துசொல்வாளல்லியம்மாள்
வானஞ்சுழல்வதற்கு மருந்துவித்தை கற்றவளே
பூமிசுழல்வதற்குப் பொடிகளறிந்தவளே
என்னமருந்தறிவா ளிடிவிழுவாளென்றறியேன்
எந்தவிதத்தாலே பேய்த்திறமையைச்சொல்வோமடி

பாக்கியிலும்நல்ல பவளசேனையே துரைப்பாள்
பூதக்கிடங்கிலே போட்டடையும்பாதகனை

அர்ச்சுனனுக்கு நான்காவது தெண்டனையிட்டது.

ஆரடாதிகளே யலங்காரத்தோழிகளே
பூதக்கிடங்குதனிற் போட்டடையுமென்றுசொன்னாள்
எம்பெருமாள்பேசவர்ணார் இவ்வயணந்தாமறிந்தார்
பூதங்கள் தன்னருகே பெருமாளுமோடிவந்தார்
பாவனைக்கண்டவுடன் மயங்கிறேபூதமெல்லாம்
ஆடாபூதங்களே யலங்காரராட்சதரே
அர்ச்சுனனைக்கொண்டுவந்து அடைக்கவருவார்கள்
பார்த்திபனர்ச்சுனர்க்குப் பணிவிடைசெய்திடுங்கள்
சங்கீதங்களுடனே சந்தோஷமாவைத்திடுங்கள்
அர்ச்சுனராசனுக்கு அழிவுவந்ததானக்கால்
வெற்றிமதயானை வீமராசன்தானறிந்தால்
வச்சிரகோபகெதையினாலே தண்டியிட்டுத்தலையுடைப்பான்
தண்டாயுதமெடுத்துத் தாக்குடையவீமராசன்
பூதத்துக்குச்சொல்லியபின் பெருமாளும்போய்நடந்தார்
அப்போதுதாதிமார் அர்ச்சுனரைக்கூட்டிவந்தார்
பூதக்கிடங்குதனிற் போட்டடைத்தானர்ச்சுனரை
ஆர்காணும்பூதங்களே அல்லியம்மாளுத்தாரம்
பொல்லாதபாதகனைப் பலியதுகொண்டிடுங்கள்
இவனைப்பலிகொண்டு எடுத்துப்புசித்திடுங்கள்
தள்ளிக்கதவடைத்துச் சங்கிலியைப்பூட்டினார்கள்
முதுகிலேமடசரேனை கண்டதேபூதமெல்லாம்
பஞ்சனைமெத்தைபோட்டு பார்த்திபனைக்குந்தவைத்து
அத்தண்டபூதமெல்லாம் அர்ச்சுனர்க்குப்பணிகள்செய்யும்
கைபிடிக்கும்சிலபூதம் கால்பிடிக்குஞ்சிலகணங்கள்
பாதம்பிடிப்பதும் பாட்டுக்களைப்பாடுவதும்
கூத்துக்களாடுவதும் கொண்டாணடிப்பதுவும்
தேர்விசையனர்ச்சுனற்குச் சங்கீதம்பாடுவதும்
ஆடாதகேளிக்கையும் அரும்பவனிநாடகமும்
சங்கீதம்பார்த்துமே தார்விசையன்தானிருக்க
கண்டார்கள்தாதியர்கள் கணமானபேய்க்கூத்தை
அல்லிப்பெருமாளின் அருகாகவோடிவந்து
சாஷ்டாங்கமாகச் சரணமுடனேதுசொல்வான்
பூதக்கிடங்குகளில் போட்டடைத்தோம்பாதகனை
பூதப்பிசாசனைத்தும் போதப்பணிசெய்கிறதும்
பாதம்பிடிக்கிறதும் பணிவிடைகள்செய்கிறதும்
கூத்துகளாடிக் கொண்டாணடிக்கிறதும்
பார்த்துவந்தோமாச்சியென்று பாதம்பணிந்தார்கள்

அல்லிப்பெருமாளு மாரணங்குமேதுசொல்வாள்
என்னமருந்தறிவா ளிடிவிழுவாளென்றுபேன்
வாணஞ்சுழல்வதற்கு மருந்தறிவாள் கண்டாளன்
பூமிசுழல்வதற்குப் பொடியறிவாள் கண்டாளன்
என்றுவிசாரமா யிருந்தாளே அல்லியம்மாள்
மாயன்பெருமாளு மலைராமரேதுசொல்வார்
அர்ச்சுனராசனை அழைத்துவாவேணுமென்று
என்னவடிவெடுத்தார் செப்பெருமாள்மேகவர்ணர்

ஸ்ரீகிருஷ்ணபகவான் ஸ்திரீ ரூபங்கொண்டு
அர்ச்சுனனை யழைத்துப்போனது.

தெய்வப்பெண்போலே ஸ்ரீராமர்வடிவெடுத்தார்
செக்கச்செவலைபோலே திருக்கனிபோலே
மின்னுகிறநார்த்தியைப்போல் வேர்ப்பலாம்போல்
காய்ச்சம்பிராயப்போற் கன்னிகட்டும்பிராயமவள்
பூக்கும்பிராயமவள் பிஞ்சுவிடுங்காலமவள்
கொஞ்சும்வயதுகாண் கொழுந்தெல்லாம்பிஞ்சுவிடும்
பாதிப்பிராயமவள் பக்கமெல்லாம்பிஞ்சுவிடும்
இருண்டெழுந்தசோலையிலே செவந்தெழுந்தசூரியர்போல்
குன்றுமேற்சந்திரன் குதித்தெழுந்தபாவனைபோல்
ஈழத்துத்தச்சனவன் எழுதிவாவிட்டாளோ
மேல்நாட்டுத்தச்சனவன் வினைக்குவாவிட்டதுபோல்
அட்டாபரணமெல்லாம் அலங்காரஞ்செய்தவளும்
பட்டுபளபளென்ன பட்டாக்காச்சோதிமின்ன
தெய்வப்பெண்போலே ஸ்ரீராமர்வருகின்றாரே
அழகுதுலங்கவும் ஆனந்தங்கொஞ்சவேதான்
உடல்துலங்கமாயவரு மோடிவருகிறாரே
காடுசெடிதாண்டி கடுகியேவந்துவிட்டார்
மதுரைத்தெருவிலே வந்தாரேயப்பெருமாள்
அக்காமாரோதங்கைமாரே ஆயடிதாய்தாய்மாரோ
செக்கச்செவலையம்மா சிறுவயதென் கணவன்
வெறிபிடித்தமன்னவன்தான் வீதிதிரிவாண்டி
அல்லியென்பான்மெல்லியென்பானனந்தனிலேபெண்ணேயென்பான்
தண்ணீர்கண்டவிடத்தில் தன்கைமருந்துரைப்பான்
எட்டுநாளாச்சுதம்மா என்கணவன்வீதிவிட்டு
ஆரோதெரியாது அடக்கிவைத்துக்கொண்டார்கள்
என்கணவனைக்காணாமல் கதறித்திரிகிறேனே
புருஷனைக்காணாமல் புலம்பித்திரிகிறேனடி
அறிந்தாலுரையுங்கள் அக்காமாரேயென்றழுதாள்
மாதுபலம்புவதை மதுரையுள்ளோர்தான்கேட்டு
தாதியர்கள்தோழியர்கள் தானதிர்ந்தோடிவந்தார்

அல்லிப்பெருமாட்டி யிக்கைவிட்டார் தாதியர்கள்
பூதக்கிடங்குதன்னில் போட்டடைத்த பாதகனை
அவனை மாலையிட்ட தேவியாய் வந்தவொருத்தியிங்கே
வாராத நாய்வையம்பாள் மயிலனையாள் தோற்றுகிறாள்
காணவந்தாகோறேனென் றுகதறிப்புலம்புகிறாள்
சொல்லியழுகிறது தாக்கம்பெருகுதம்மா
அவ்வார்த்தைதான்கேட்டு ஆரணங்கேதுசொல்வாள்
ஆரணங்குமாதவரை யழைத்தோடி வாருமென்றாள்
ஓட்டங்கடையாக ஓடிவந்தார் தாதியர்கள்
ஆரடிகன்னியரே யழுதுபுலம்புவதேன்
அன்னமே அல்லிமுன்னை யழைத்தாரெ சொன்னார்கள்
அல்லிப்பெருமாள் அழைக்கிறாள் வாருமென்றாள்
எழுந்தழுதழுது மின்கொடியாள் மாதுதன்னை
கன்றுநடந்தாளே பெரும்பெருமாள் மாளிகைக்கு
வாசலாம்வாசலது படியேழுந்தான்கடந்து
அல்லியருகேவந்து ஆரணங்குதெண்டனிட்டாள்
தெண்டனிட்ட கன்னியரைத் தேன்மொழியாளேதுசொல்வாள்
எந்தவூருங்களூர் எங்கிருந்திங்குவந்தாய்
ஏதுக்கழுகிறாய் பெண்ணே காரியஞ்சொல்லுமென்றாள்
என்னுடைய ஆச்சியரே என்பாவங்கேளுமம்மா
தூரவடக்கேயம்மா துவாரகாபுரிதேசம்
திருமலைநாயக்கன்பெற்ற சீராணபெண்ணிருவர்
என்பேருமெல்லியம்மை யென்தங்கைபேரல்லியர்காண்
என்னைமணஞ்செய்து என்தங்கைபேரிச்சைகொண்டான்
பெண்டுபெண்டுபெண்கேளா கொடியப்பாவோ பூமியிலே
அல்லியர்மேலாசையாய் ஆணழகன்வழியெடுத்து
பித்துப்பிடித்தவர்போல் திரிகிறானே
தண்ணீரைக்கண்டாலே தன்னைமறந்துரைப்பான்
அல்லியென்பான் மெல்லியென்பான் அலைந்துதிரிகிறானே
விலைவாசல்தங்காமல் வெளிப்பட்டுப்போய்விடுவான்
தேடித்திரிகிறேனே சிராசமன்மதனை
கண்டுபிடித்தவரைக் கூட்டிமனைகொண்டுபோவேன்
எட்டுநாளொருவாரமிருப்பான் மனம்பிடித்து
மாதுமெல்லியைவெறுத்து மாளிகையில்நிற்கிறியான்
பக்ராபட்டணத்தில் பாவியொருபெண்பிறந்தேன்
செல்வத்திலேயே செப்போடெழுதினதும்
விதியைத்தொலைப்பேண்டி சாவேனிந்நதிநதியே
விதியைத்தொலைப்பதற்கு விதனமற்றாள் வேண்டி
வடிவழகாயிருந்தார் மன்னன்துரையென்றவன்
ஆரோதெரியாது அடக்கிவசங்கொண்டார்கள்

என்புருடன் றன்னையம்மா யினிக்காணப்போறேனோ
என்றதுதான்கேட் டேதுசொல்வாள் அல்லியம்மாள்
என்பெண்ணைச்சொல்லியவ னெடுத்துமருந்துரைத்தான்
ஆகடியஞ்சொன்னதினு லடைத்தேன்கிடங்கினிலே
பயித்தியக்காரனென்றாற் பழுதில்லைபெண்தனக்கு
ஆனாலழைத்துப்போ மறுப்பிவிடச்சொல்லுகிறேன்
ஆடிநாதியரே யலங்காரத்தோழிகளே
கிடங்கைத்திறந்தவனைக் கொப்பெனவேபோகவிடும்
அவ்வார்த்தைதான்கேட் டலங்காரத்தோழியர்கள்
ஓட்டம்நடையாக ஓடிவந்தார்கிடங்கிலே
கிடங்கைத்திறந்தார்கள் கொப்பெனவேவிட்டுவிட்டார்
அப்போதுதெய்வகன்னி ஆனன்முகம்பார்த்து
வாடாகுடுப்பாகி மதியழிவாயென் றுரைத்தாள்
அல்லியென்பான்மெல்லியென்பா னுணமுகன்தான்வருவான்
எப்போவருவானோ என்னுசைதீருமென்றான்
மன்மதபாணம் மார்புருகிப்போகுதென்பான்
சித்தசன்தொட்டகணை சிறுமார்புருகுதென்பான்
ஆருதுகுபாணமது மார்புருகிப்போகுதென்பான்
அஞ்சுகுருகுபாணமது நெஞ்சுருகிப்போகுதென்பான்
அருச்சுனனைக்கூட்டியே அரிராமர்போகலுற்றார்
மதுரையைத்தாண்டியே வந்தாரேகானகத்தில்
மாயன்பெருமாளும் மாய்கையாய்ப்போகலுற்றார்
ஆலமரத்தடியி லரிராமர்பள்ளிகொண்டார்
கள்ளக்கொருக்கைவிட்டுக் கரியமால்தூங்குகிறார்
ஆயனருகாக அர்ச்சுனனார்வந்துநின்றார்
பாரளந்தார்பாதத்தைப் பார்த்தீபன்பிடிக்கலுற்றான்
அலண்டுபுரண்டதுபோ லரிராமர்கண்விழித்தார்
ஆனுலழகுமன்னு அருச்சுனனேகேட்டீரோ
காணுதசொர்ப்பனத்தைக் கண்டேன்காணர்ச்சுனனே
எந்தனைத்தனியேவிட்டு எங்கேயோபோனதுவாய்
கானகக்குறத்தி கைபார்த்துச்சொன்னதுவாய்
வண்ணமருந்தெடுத்து மலைக்குறத்திதந்ததுவாய்
நிதரித்தபூஷணத்தை நேரிழைக்குத்தந்ததுவாய்
அந்தமருந்தைநீவாங்கி யல்லியிடப்போனதுவாய்
வண்ணமருந்தெடுத்துத் தண்ணீரி லரைத்ததுவாய்
அல்லியிடதாதிமா ராயிரம்பேரோடிவந்து
அர்ச்சுனரேயுனையெடுத்து ஆற்றிலேபோட்டதுவாய்
தாக்குமரத்தனிலே தேர்விஜயர்போடக்கண்டேன்
காளியம்மன்கோவிலிலே சர்வுகொடுக்கக்கண்டேன்
புதக்கிடங்கிலேதான் போட்டடைக்கக்கண்டேனப்பா

ஆரோரொருதெய்வகன்னி யழைத்துவரக்கண்டேனப்பா
என்வருகேயிருந்திருக்கக்கண்டேன்கனவாக
என்னகாண்மைத்துனனே யிப்படிக்கனவுகண்டேன்
வாள்விசையன்கோமானும் மாயனுக்கேதுரைப்பான்
மெத்தமயக்கத்திறைந் போதக்கனுக்கண்மேர்
அல்லியர்மேல்இச்சையதா ஆசைமறக்கவில்லை
மாலையிட்டு அல்லியை மருவியிலவெதப்போ
கோபாலனைத்துனரே கட்டிவைப்பதுன்பாரம்
அப்போதுமாயவரு மருச்சுனன்முகம்பார்த்து
மறுமுகம்பார்த் தெய்வெபருமானேதுசொல்வார்
பட்டெல்லொருண்டையும் பவுத்திரமோதிரமும்
பட்டுநீட்டிகெட்டியானம் பசும்பொன்னற்சபுதாடு
தாமரைப்பூச்சல்லடையுஞ் சந்திரகாந்திகட்டி சுரும்
உத்தராசமவல்லவாட்டு வுத்தமனேயெங்கேயென்றார்
அருகிப்பமக்தவன் அர்ச்சுனனுமேதுசொல்வான்
ஆயர்பெருமானேநீர் அனந்தசித்திரைபோகையிலே
மாநிலமதுபட்டணத்தை மதுரையைப்பார்ப்போமென்று
மாதுமேல்தன்வினைவாய் வந்தகுறிசொன்னேனையா
வண்ணமருந்துதந்து தன்னரிதுரையுமென்றாள்
மருந்துகளைப்போதவள் மனதுகளையுமென்றாள்
குளிகைகளையும்போது குணமும்திரும்புமென்றாள்
மருந்துபலியாமல் மாயவேபோச்சுதையா
காதுமலைக்குள் சுல்லிவள் சூதுகேளயென்றாள்
இராமக்காள்பொம்மக்காள் லட்சுமக்காவள்போராம்
அங்குவந்துகேட்டாக்கா லபாணக்தருவேனென்று
மருந்தைக்கொடுத்துவிட்டு வாங்கிவிட்டாநடமையெல்லாம்
அவள்-கொடுத்தபடிபோதான் றுணைமாப்போவர்ச்சுனரே
சொன்னபடியாகச் சோர்ந்தானோ அல்லிநல்லாள்
ஒருவரங்கண்டேப்பேன் புழன்றநான்வந்தேனையா
பொம்மக்காள்பேரைச்சொல்லித் திம்மக்காள்சேர்ந்ததையா
உடைமைபறிகொடுத்து புழுன்றநான்வந்தேனையா
அவ்வார்த்தைதான்கேட் டரிமாயரேதுசொல்வார்
குறத்திருப்பிடத்தைக் கொற்றவனேதேடப்போய்
உன்னுடைமையுள்ளதெல்லாம் உத்தமனேவாங்கிவாரும்
சுடுகேவாங்கிவாரும் சட்டுதுகாவென்றுரைத்தார்
(அர்ச்சுனன்குறத்தியிடம்சென்று தான்கொடுத்ததை வாங்கினது.)
ஆயரதுசொற்கேட்டு அர்ச்சுனனுந்தானடந்தார்
குறத்தியைத்தேடிக் கொப்பெனவேவருகிறாரே
காதுமலைநடுவே கல்லிசையன்தேடிவந்தார்
இராமக்காள்பொம்மக்காள் லட்சுமக்காவென்றழைத்தார்

மாயன்பெருமாளு மக்குறத்திபோலேவைத்தார்
ஆரடாதம்பியரே யழைக்கக்கருமமென்ன
அப்போதருச்சுனனு மனமுருகவேதுசொல்வார்
நீகொடுத்தமருந்துதன்னிற் சற்றுமேபலனில்லையே
பொம்மக்காள்போனைச்சொல்லத் திம்மியைக்கேட்கத்தம்பா
உன்பேச்சைக்கேட்டோ மனைகப்பட்டேவர்நேரடி
நான்-கொடுத்தவுடைமையெல்லாம் கொள்ளைபோனதேதாருமென்றான்
என்வார்த்தைநீர்கேளீர் பிரியமானதம்பியரே
காசுக்கடைதனிலே கண்டதுதல்லியாரிசேலை
கண்ணாடிட்டுவைத்தேனென்று சட்டுபடிதருவாள்
அடியும்பட்டேனுதைதும்பட்டேன் னல்லிக்கைகளுப்பட்டுவைத்தேன்
உடைமையறிகொடுப்பே னினியவுடைமையது
அவ்வார்த்தைதான்கேட்டருச்சுனனுமேதுசொல்வான்
உடைமைக்கொடுக்காம லுன்னைவிடேன்கட்டிவைத்தி
எங்கிருந்தாநான்கொடுப்பே னினியவுடைமையது
மடியைப்பிடித்திழுத்தான் மாகுறத்தியை
துப்போமுறைதபோலென்று கூவினள் குறத்தியும்
புறத்திலேபோலவேதான் புறப்பட்டார்குறுமர்
இல்லைபொல்லென்றுசொல்லிச் சிறுவராய்க்கூடினார்கள்
ஆளுக்கொருகுத்துவைத்து அடித்தாரேயர்ச்சுனனை
அர்ச்சுனன்தரித்திருந்த ஆபரணமுள்ளதெல்லாம்
கொண்டுவந்தாளே கொப்பீனமான்குறத்தியும்
அல்லிபட்டாப்பட்டசேலை போதுமென்றர்ச்சுனனும்
அர்ச்சுனமகாராச னயர்ந்துவிட்டான்
வாக்கியமிதேதனுடைமையென்று மனந்தெளிந்தெண்டனிட்டார்
அப்போதுமாயவனு மென்னதேதுசொல்வார்
பாளிகைக்குப்போகவே மனமுண்டோவர்ச்சுனனே
தருமர்தவிப்பாரே தம்பிமார்புலம்புவரே
காணுதேயுன்னைத்தேடி கலங்கித்தவிப்பாரே
வந்துவெகுநாளாச்சே வான்விசயனர்ச்சுனனே
பெண்ணாசைகொண்டு புலம்பித்தவிக்காதே
மாதர்மேலாசைகொண்டு மயங்குகிறாயர்ச்சுனனே
ஆணழகுமன்னன் னர்ச்சுனனுமேதுசொல்வான்
எந்தவிதமானாலு மிளங்கொடியாளல்லியாரை
தாலிகட்டிவையுமையா சுவாமிபெருமானே
மாலையிட்டுவையுமையா மாயன்பெருமானே
என்றுபணிந்தானே வீரனாமர்ச்சுனவிசயன்
மாயன்பெருமாளு மகிழ்வுடனேதுசொல்வார்
ஆணழகுமன்னனர்ச்சுனனேநீர்கேளும்
ஆண்டிவடிவாக அல்லியின்றன்வாசலிலே

மடநூர்க்குவர்ணதயாகில் மாலையிட்டுவைப்பேனடா
அப்படியேபோய்வருவேனையாசென்னவருளும்
அர்ச்சுனன் ஆண்டிவேடங்கொண்டு மடநூர்க்கது
மாயன்பெருமாளு மிராமப்போது
ஆண்டிகளைப்போலாக அர்ச்சுனனைச்சமைந்தார்
ஆறுமுகமன்ன அர்ச்சுனனுமேதுசொல்வான்
தொண்ணூறம்பத்துச்சென்ற துவண்டகிழவனைப்போல்
பன்னைப்பழம்போலே பழுத்தக்கிழவனைப்போல்
நாரைப்பூப்போலே நரைத்தகிழவனைப்போல்
தோலுகாம்புகளுந் தொங்குதுகிழமைந்து
பழுத்தபழம்போலே பார்த்திபன்வடிவெடுத்தார்
நாவிரைசூடியுடன் கைதனிலேபாத்திரையும்
திருநீறுந்தாமணிந்து திருதண்டமாலைகற
உருத்திராட்சத்தாவடமு முருத்திராட்சமாலைகளும்
அஜஅர்த்தமான்தோலும் அழகானபுலித்தோலும்
தொட்டபிடியுந் தோளில்வைத்தகின்னரியும்
மாத்திரைக்கோத்திரமும் பவிர்க்குச்சக்கமண்டலமும்
வேலையுகந்ததாயுதம் விருதுகண்டகோடாலி
கொலிகெல்லாத்திரமுங் கோதாரக்கங்கணமும்
இருவோபெர்த்திருமும் திருநீறுகோபிகளும்
சுகுசெயகண்டிகையுந் தரித்தாரே ருதுமணிகள்
சடைமுடியுமாகத் தம்பிரானைப்போலானார்
ஆதிசிவன்போலாக அர்ச்சுனனார்வேடங்கொண்டார்
கைலாசநாதனைப்போல் காண்பவர்வடிவெடுத்தார்
வேடங்கள்பூண்டாரே வீரதீரனுந்தான்
ஆயர்பெருமாளு மங்கெனவேவேடிதுசெய்தார்
அல்லியனைப்போலாக அழகுபடவெழுதி
பாக்கிஷிணுங்கலை பவளரேகைநகையை
கூடவெழுதினார் கோவிந்தவெம்பெருமாள்
படத்தைமடித்தவரும் பார்த்திபன்கைகொடுத்தார்
அல்லியதுவாசலிலே யங்கேபடம்விரித்து
அல்லியதுவாசலிலே பங்கேபடம்விரித்து
அவளுடைத்தியபாவங்கையில் ஒருமுழம்பிச்சைவாங்கி
வந்தாயேயாமாகில் மாலையிட்டுவைப்பேனடா
போய்வாருமென்றுசொல்லி பெருமாளனுப்பிவைத்தார்
வண்ணப்படமெடுத்து வாழ்விஜயன்வழிநடந்தான்
தன்னாடுதன்னாடு கடந்துமெள்ளவழிநடந்தான்
தெத்துதெருகடந்து தேரோடும்வீதிவிட்டு
அல்லியரண்மனையாமாசாரவாசல்வந்தான்
ஆண்டிதானிப்போ பாண்மன்னர்க்குப்போகவேணும்

பிச்சைகேட்கவந்தேனம்மா போகவழிவிடுங்கள்
பொற்கொடியாள்வாசலிலே போய்வருவேனாச்சியரே
ஐயாபெரியவரே யறிவுபடைத்தவரே
திரப்படித்தவரே தெளிவரிந்தசங்கமரே
ஆண்காற்றடியாது அல்லியதுகோட்டையிலே
போனாற்பழுதுவரும் போகாதேசுவாமியென்றாள்
ஆண்டிபரதேசி ஐயமென்றுவந்தவரை
வழியுமறிப்பார்கள் வையகத்தில்யாருமில்லை
தொண்ணூறாஞ்சென்ற தொண்டுகிழவனடி
தோலும்நரம்புமாந் தொங்குதுஎந்தனுக்கு
என்னைப்பார்த்தவர்களெல்லோரும் பணிந்திடுவார்தப்பாது
போகச்சிலவுகொடும் போய்வருவேனாச்சியென்றான்
வாசற்படைக்காரர் வழிவிட்டார்சங்கமற்கு
அவ்வாசல்வாசலதை அர்ச்சுனனுந் தாண்டிவந்தான்
ஐந்தாம்படித்தளத்தில் அர்ச்சுனனும் வந்துவிட்டார்
புலியாசனப்போட்டு பொற்படத்தைமுன் வைத்தான்
ஆசனத்தில்மேலிருந்து அல்லிபடந்தான்விரித்து
மான்செவியுங்கண்ணையு மறைத்தாரேமாயவனார்
கண்ணிரண்டுந்தெரியாமற் காதிரண்டுந்தோணாமல்
அல்லிமேற்சிந்தையாய் அருச்சுனன்புலம்பலுற்றான்
அல்லியென்பான்மெல்லியென்பானனந்தனிலேபெண்ணேயென்பான்
வருவாளோஅல்லியென்பான்வாய்திறந்துபெண்ணேயென்பான்
உன்னாசைகொண்டேனடி பூராசைபேர்மறந்தேன்
தாயாரைநான்மறந்தேன் தமயனதுபேர்மறந்தேன்
தப்பிதமயனைச் சகலரையுநான்மறந்தேன்
உன்னாசைகொண்டுநானு முழன்றுதிரிகிறேனடி
மன்மதபாணமது மார்பைப்பிளக்குதடி
சித்தசன்விட்ட கணை சிறுமார்புருகுதடி
காமக்கணையாலே கணை தாங்கிப்போறேனடி
அஞ்சாறுபாணமது நெஞ்சுருகிப்போகுதடி
ஆறுருகுபாணமது மார்புருகிப்போகுதடி
மார்போடேமார்பணைந்தால் மகாவிடாய்த்தீருமடி
என்றுதெளிவாயோ எக்காலஞ்செல்லுமடி
அல்லிமேற்சிந்தையா யருச்சுனன்புலம்பலுற்றான்
அவ்வாசல்காக்கின்ற ஆயிரந்தாதியர்கள்
அவ்வார்த்தைதான்கேட்டதிகவிசாரங்கொண்டாள்
இதுவென்னகாலக்கேடோயேதறியோம்தோழியரே
பாங்கியிலும்நல்லதொரு பவளசேனைதன்னருகில்
ஓட்டநடையுமாக ஓடிவந்தார்தாதியர்கள்
பவளச்சேனைபக்கத்தில் பணிந்தவர்களேதுசொல்வார்

ஆமோரொருகிழவ னாண்டிபரதேசியவன்
பிச்சைக்கிவந்தான்காண் போகவழிதான்விட்டோம்
இந்தாண்டிவாசலனு அரண்மனையில்தான்வந்தான்
அல்லியைப்போலாக அழகுபடமெழுதி
வண்ணப்படம்விரித்து வல்லமையாய்ப்படிக்கின்றான்
அல்லியர்மேலாசை அலைந்துபுலம்புகிறான்
வாடியென்றும்போடியென்றும் வம்புதும்புஞ்சொல்லுகிறான்
ஆகடியம்பேசுகிறா னழும்புகளுஞ்சொல்லுகிறான்
சொல்லுகிறவார்த்தையது செவிகேட்கமுடியாது
இவ்வார்த்தைதான்கேட் டேதுசொல்வாள்பவளசேனை
அல்லிப்பெருமானை அழகுமணஞ்சூட்டவென்று
மாறுவேடங்கொண்டவனும் மாலையிடவந்தவன்காண்
ஆண்டிபரதேசியானு லழும்புகளுஞ்சொல்வானோ
எல்லாமறிந்திடுவோம் யாரடிதோழிகளே
ஐந்துதாதிமார்கள் ஒருநிறமாயெழுந்திருங்கள்
ஒருநிறமாய்க்குழல்முடித்து ஒருநிறமாயெழுந்திருங்கள்
ஐந்துவிதப்பட்டுகளை யலங்காரமாயெடுத்து
பொன்னொருதட்டிலேயும் பூவையொருதட்டிலேயும்
ஆடையொருதட்டிலேயு மாபரணமொருதட்டிலேயும்
ஒன்பதுரத்தினமு மொருதட்டில்தானெடுத்து
பண்டாரமுன்னாலே பாங்கியரேகொண்டுபோய்
ஐயருக்குமுன்னேவந்து அடிபணிந்துதெண்டனிட்டு
ஐந்துபேர்பெண்களிலே யார்வேண்டுஞ்சொல்லுமென்று
ஆபரணமுத்துவஸ்திர மாசையென்றாலெடுத்துக்கொள்ளும்
பெண்களின்மேலாசையென்றால் பின்தொடர்ந்துவருவோமென்று
ஐயரைக்கேட்பதற்கு ஆரணங்கேபோங்களென்றாள்
அவ்வளவில்தோழிமா ரதிகமுடனோடிவந்து
ஐந்துபேர்தோழிமார்க ளலங்காரஞ்செய்துகொண்டார்
ஐந்துவிதத்தட்டினுலே ஆபரணபூஷணங்கள்
முத்துகளும்வஸ்திரமும் முன்னாலேகொண்டுவந்தார்
ஐயாதுமுன்னேவைத் தடிபணிந்துதெண்டனிட்டார்
ஐயாபெரியவரே யடியேன்சரணமென்றார்
ஆச்சியருந்தனுக்கு அனுப்பிவைத்தாள்பூஷணங்கள்
ஐந்துபேருனக்கு அனுப்பிவைத்தார்சங்கமரே
ஆசையுள்ளபெண்ணைநீர் அழைத்தால்வருவோமையா
வேண்டுமென்றரத்தினத்தை யெடுத்துக்கொள்ளும்சங்கமரே
என்றந்தப்பெண்களுமே யிறங்கியேதெண்டனிட
அல்லியென்பான்மெல்லியென்பா னந்தனிலேபெண்ணென்பான்
வருவாளோவல்லியென்பான் வாய்திறந்துபெண்ணேயென்பான்
எப்போவருவாளோ என்னாசைதீர்த்திடுமோ

மன்மதபாணமடி மார்புருகிப்போகுதடி
சித்தசன்விட்டகணை சிறுமார்புருகுதடி
காமக்கணையாலே கலை தாங்கிப்போறேனடி
அல்லியென்றுசொல்லி யலைகிறான் சங்கமனும்
கேட்டந்தநாதியுங் கிலேசங்கொண்டுதானடந்தாள்
பவளசேனை தன்னருகில் பக்கத்தில்வந்தாரவள்
ஆர்சியின்சொற்படிக் கைக்குதுபெண்கள்போறேனம்மா
அலங்காரந்தன்னுடனே யாபரணம்பூண்புனைத்தோம்
ஏனென்றுகேட்கவில்லை யேறமுகப்பார்க்கவில்லை
அல்லியின்மேல்சிந்தைகொண் டலைகிறான் சங்கமனும்
அநேகநெடுநேரம்நின்று அலைந்துமேவாந்துவிட்டோம்
இவ்வார்த்தைதான்கேட் டிளங்கொடியாள்பவளசேனை
என்றுதவெண்ணமெல்லாம் மெண்ணியிளங்கொடியும்
ஐயமென்றுவந்தவொரு யாண்டிபரதேசியல்ல
கட்டினவிருதுமுத்துக் கலியாணப்பண்ணவந்தான்
தெய்வமென்றுநாமறியோஞ் சிவராஜனென்றறியோம்
தன்மனதிலேயடக்கித் தானடந்தாள்செங்கமலம்
அல்லிநல்லாள்பக்கம்வந்து ஆரணங்குதெண்டனிட்டாள்
ஏதுபவளசேனை யிந்நேரம்வந்ததென்ன
வேர்க்கவிருவிருக்க வெந்தாயிலுஞ்சோர்ந்துவிழ
உச்சியுருகியே உத்தமியிங்குவந்தோம்
ஆச்சியரேகேட்டாயோ அதிசயமானவிதம்
நாடுசுகப்படவே நாளாச்சுவாச்சியரே
உனக்குவருப்பாக்கியங்க ளொருவருக்குந்தெரியாது
ஆதிசிவனைப்போ லாண்டியிங்கொருவர்வந்தார்
படம்பிடிக்கும்பண்டாரம் பரமசிவன்போலேவந்தார்
மாணிக்கச்சொக்கலிங்கம் வந்தாற்போற்காணுதம்மா
சடையுஞ்சடைமுடியும் தம்பிரான்போற்காணுதம்மா
கண்டுமறியோமம்மா கலியுகத்தில்தானறியோம்
தோலும்நரம்புகளுந் தொங்குதுகிழவனுக்கு
ஐந்தாங்கட்டுவாசலிலே ஐயர்வந்திருக்கிறார்
தெரிசனம்பண்ணினோமாகிற் றோஷவினைதீருமம்மா
பார்த்தால்பசிதீரும் பண்டாரமானவரை
ஆச்சியெழுந்திரம்மா ஐயரைப்போய்ப்பார்ப்போம்
என்றதுதான்கேட் டேதுசொல்வாளல்லியம்மாள்
ஆண்காற்றடியாத வரண்மனைவாசலிலே
ஆண்டிபரதேசி யையமென்றுவந்தாலும்
கொடுத்தனுப்பலாகாதோ கொம்பனையேயென்தோழி
எந்தனுடன்சொல்வானேன் எந்திழையேதாதியென்றாள்
பாக்கியிலும்நல்ல பவளசேனையேதுசொல்வாள்

பிச்சைகொடுக்கிறது பெருமையென்றுபாராதே
நல்லோர்பெரியோரை நடந்துபோய்ச்சேவித்தால்
காசிபோகவேண்டுமோ கருமந்துலையாமா
பெரியோரைச்சேவித்தால் பிழையொருக்காலுமில்லை
கைலாசநாதரைப்போற் காண்கிறதே ஆச்சியரே
என்வார்த்தைதள்ளாதே எழுந்திரும்போவோமென்றாள்
மருட்டத்துரைச்சியவள் வாழ்வரசியேதுசொல்வாள்
ஆண்டியைப்பார்ப்பதற்கு அழைக்கிறாயென்தோழி
ஆறெழுகுமன்னன் அரிகிழவனானாலும்
என்னைக்கண்டானேயாமாகில் காமங்கொளுத்திடுமே
பரிகாசஞ்செய்தாலே பாங்கியரேயென்னசெய்வேன்
வீரமணிவாளாலே வீசியெறிந்திடுவேன்
அப்படியேயாகுமம்மா ஆச்சியெழுந்திருங்கள்
சிங்காதனத்தைவிட்டுத் தேன்மொழியாள்தானெழுந்தாள்
பட்டுப்பளபளென்ன பாடகக்காற்சோதிமின்ன
நெற்றிச்சுற்றிச்சரிகென்ன நீலவிழிமைதுலங்க
காற்சிலம்புகலகலென்ன கைவளையல்பளபளென்ன
முத்தாணிச்சிலம்புரள மோதிரக்கால்சத்தமிட
தோழியைத்தோளணிந்து தோகைநல்லாள்தானடந்தாள்
பாங்கிமார்தோழியர்கள் பக்கப்புடைசூழ
வாசலும்வாசலது படியெழுந்தாள்தாண்டி
ஆண்டியிருக்குமந்த அஞ்சாங்கட்டுவாசல்வந்தார்
அல்லிவரும்போது அர்ச்சுனருமேதுசொல்வார்
என்னகாணல்லியரே எப்போமனமிரங்கும்
தன்னைநக்குக்காணுவேனென்றைசைதிருமடி
மாரனவனெய்தகணை மார்பைப்பிளக்குதடி
சித்தசன்தொட்டகணை சிறுமார்புருகுதடி
மாலையிடுவதெப்போ மருவியணைவதெப்போ
கூடியணைவதெப்போ குறைகளெல்லாம்தீர்வதெப்போ [ன்
அல்லியென்பான்மெல்லியென்பானனந்தனிலேபெண்ணேயென்பா
வருவாளோஅல்லியென்பான் வாய்திறந்துபெண்ணேயென்பான்
கட்டழகிஅல்லியம்மாள் காதாரக்கேட்டுவிட்டாள்
உருக்கியசெம்பொனது உதிரம்போற்கண்சிவந்து
பிறந்துவளர்ந்துநான் பூமிபாரமாண்டிருந்தேன்
நீண்முகனைக்கொன்றுநான் நீலிபட்டமாண்டேனே
வாடியென்றழைத்தவர்கள் வையகத்திலாருமில்லை
அடியென்றழைத்தவர்க ளவனியிலொருவரில்லை
ஆண்டியவன்வாயாலே அலைச்சல்படநாளாச்சே
எடுத்துவாபெரியகத்தி இருதுண்டம்போடவென்றாள்
வடுபரிசைபெரியகத்தி எடுத்துவாதாதியென்றாள்

பாங்கிலிருந்தநல்ல பவளசேனையேதுசொல்வாள்
பாண்டிப்பெருமானே பதராதேயரசியென்றுள்
அப்படியேகொண்டுவந்து ஆச்சியருகில்வைத்தாள்
கண்ணுடியெதிர்வைத்துக் கண்டாள்தன்படத்தழகை
தன்னழகும்படமழகும் சரியாகத்தோன்றவுமே
என்னழகும்பாவனையும் எங்குகண்டெழுதினுனே
உச்சிக்கனியழகும் உரோமத்தின்போக்கும்
மயிரழகும்பாவனையும் மாபாவியெங்குகண்டான்
முகத்துத்திருவழகை மூதேவியெங்குகண்டான்
கண்ணின்விழியழகைச் சழுநிறையனெங்குகண்டான்
பவளம்போலொண்ணிதழும் பல்லழகுமெங்குகண்டான்
மார்பின்தனமழகும் மச்சமுமெங்குகண்டான்
இடையழகுந்துடையழகும் பேதியெங்குகண்டான்
ஆபரணந்தன்னழகு மாடைத்துகிலழகும்
வடிவழகுமொப்பனையு மாபாவியெங்குகண்டான்
என்னையெழுதிவந்த நல்லாமலென்தோழி
உன்னையுங்கூடவே யுடனெழுதிவந்தான்
எடுத்துவாபெரியகத்தி யிருதுண்டாய்ப்போடவென்றுள்
பக்கச்சனைதகளெல்லாம் பதைக்கிறதல்லியற்கு
பாங்கியிலும்நல்லதொரு பவளசேனையேதுசொல்வாள்
ஐயமார்பட்டதொரு அவைவுபோலாகுமிது
பாண்டியர்கள்பட்டதொரு பதவிப்போலாகுமிது
ஆண்டியைவெட்டினுலே ஆரார்தலைபோமோ
அர்த்தக்கதையையெனக் காரணங்கேட்டுசொல்லுமென்றுள்

பவளசேனை பாண்டியர்களடைந்த துன்பத்தை
அல்லியரசாணிக்குக் கதையாகக் கூறினது

வைகைபெருக்கெடுத்து மாவெள்ளம்போகையிலே
ஆராலும்வைகைதன்னை யடைக்கமுடியாமல்
பாண்டியராசாக்கள் பங்குகளைபோட்டார்கள்
ஆணுய்ப்பிறந்தவர்க ளரைஞாண்கயிர்கட்டினவர்
பெண்ணுய்ப்பிறந்தவர்கள் புடவையுடுத்தினபேர்
அவரவர்க்கொருபங்கு அளந்துகரைபோட்டார்கள்
அவரவர்கள்பங்கு அடைத்தார்கள்வைகைதன்னை
அன்றுடம்பிட்டுகட்டு ஔவையார்வீற்றிருப்பார்
அவளுக்கொருபங்குமல்லோ அளந்துகரைபோட்டார்கள்
பங்குக்காளில்லாமல பதவித்துத்தானழுதாள்
மண்ணுஞ்சுமக்கரியாள் மனஸ்தாபப்பட்டழுதாள்
வாணியக்கிழவியவள் மனத்துயரமாகையிலே
மாணிக்கச்சொக்கலிங்கம் மகாதேவர்தானடைந்தார்
அட்டாளுஞ்சொக்கலிங்கம் ஆதியன்றுணைந்தார்

ராஜையார் மனத்துயரம் ஆயாசந்தீர்க்கவென்று
பட்டணப்போலொரு உலகெலாந் தமைத்தாரும்
கன்னங்கறுத்தவர்போல் கர்த்தர் வடிவெடுத்தார்
தட்டிதனிலிருந்த கெஜக்கோலைக்கைபிடித்து
மண்வெட்டித்தோளிலிருந்த மகாதேவர் வாராரே
மதுரைத்தெருவிலே வந்தாரே சொக்கலிங்கம்
அப்போது சொக்கலிங்கம் அதிசிவன் கூறியவாரார்
மண்வெட்டிப்பேன் கவர்ந்தைப்பேன் வைப்பிரோ கூலியாளாய்
என்றுமேசொல்லியல்லோ சல்லவாறுர் கூறியவாரார்
கூறியேவந்தாரே கொடிமதுரைவீதியிலே
முன்னையார் தன்னருகே அதிசிவன் வந்துவிட்டார்
முன்னையாருமப்போ ஒட்டனுக்கே தசொல்வான்
ஆடாவொட்டனே அன்புடனே கேளுமென்றான்
அன்றுடம்பிட்டுசெட்டி அங்காடிவிற்பேனடா
அந்திவருமட்டுங்கட்டா வொருபிட்டுதிருவடா
உதிர்ந்ததோர் பிட்டினுக்கு உந்தமனைநான் தருவேன்
மண்வெட்டித்தாரகடைத்து வருவாயோ மன்னவனே
உதிர்ந்துபோகும்பிட்டையெல்லா முந்தமனைநான் தருவேன்
சத்தியந்தப்பமாட்டேன் தருகிறேன் போவென்றான்
பிட்டுக்குக்கூலிகட்டிமெய்யா போயடைத்துவாரேனென்றான்
முன்னையருந்தான்பெருத்த அப்பூதிமூட்டினனே
பிட்டுக்குக்கூலிகட்டியல்லோ போதச்சமைக்கலுற்றான்
இருபதுபிட்டுசெட்டு வெபித்தாளே கூன்கிழவி
ஒட்டனுமடைப்பாக ஓடிவந்தார் சொக்கலிங்கம்
காலாறடைத்துவந்தேன் கன்னிபசிக்குதென்றார்
கட்டிவேராபிட்டுகளைச் சொல்லுதிர்ந்ததுண்டோ
எனக்கென்றமைந்திருந்த சுடரிவாறெட்டாதீ
இருந்தாலும் மென்றுசொல்லிச் சந்துவிட்டாள் பிட்டுதனை
குறையாயடைத்துவாரேன் கொப்பெனவேபிட்டுகெடும்
புரக்கடையிற்போவாளும் புன்னைமரத்தடியிருந்தார்
கொண்டுவந்தபிட்டையெல்லாங் கொப்பெனவேயுண்டுவிட்டார்
ஓதுரமுதிரத் தோடிவந்தார் சொக்கலிங்கம்
அரையாறடைத்துவந்தே னெச்சிபசிக்குதென்றார்
கட்டிவேராபிட்டுகளைச் சொல்லுதிர்ந்ததுண்டோ
ஐம்பதுபிட்டுசெட்டே னன்னத்துமுதிர்ந்ததடா
இந்தாருமய்யாவென் றெடுத்துகொடுத்துவிட்டாள்
வாங்கியந்தபிட்டுதனை வழிகடந்தார் சொக்கலிங்கம்
கொன்றைமரத்தடியிற் கொண்டுவந்துதான்புசித்தார்
சங்கராமூர்த்திசென் றெழுந்துவருமோடிவந்தார்
மாந்தெழும்தோள்மேலும் மண்வாரிப்போட்டுக்கொண்டார்

முக்காலா றடைத்துவந்தேன் மெத்தப்பசிக்குதம்மா
சுட்டுரோபிட்டுகளுஞ் சொல்லுமுதிர்ந்ததுண்டோ
நூற்றொருபிட்டுகளுஞ் சுட்டாளேகூன்கிழவி
ஒருபிட்டுத்தான் மற்றபிட்டுதிர்ந்தனவே
உதிர்ந்திருந்தபிட்டையெல்லாம் உத்தமனார்கைகொடுத்தாள்
வாங்கியந்தசொக்கலிங்கம் வழிநடந்தார்மெல்லனவே
குருந்தமரத்தருகே கொப்பெனவேவந்தமர்ந்தார்
கொண்டுவந்தபிட்டையெல்லாம் கொப்பெனவேயுண்டுவிட்டார்
தலைக்குயரந்தட்டுவைத்துச் சங்கரனார்பள்ளிகொண்டார்
ஆனந்தநித்திரையால் ஆதிசிவன்போராரே
ஒருபிட்டுவிற்றாளே உத்தமியாள்கூன்கிழவி
நூறுபிட்டுலாபமதை நேருடனே கண்டுகொண்டாள்
ஆறாயிரம்பாண்டியரு மையாரவர்வந்தார்கள்
வைகைக்கரைப்பார்த்து வருகையிலேபாண்டியர்கள்
கொஞ்சமாய்சலப்பெருகிக் குறையாதுவருகிறது
கண்டந்தப்பாண்டியருங் கடிதானகோபமுடன்
ஆருதடாபங்கிதுதா னடைக்காமல்போனதெங்கள
எவருதடாபங்கிதுதா னேதுக்கடைக்கவில்லை
பிட்டுவிக்கும்வாணிச்சி பொற்பொடியாள்பங்கிதுதான்
ஆள்பேருஞ்சேவகரும் அதிவிரைவாயோடிவந்தார்
ஔவையாரைத்தானுமங்கே யழைத்துவந்தாரரசரண்டை
வந்துமேதெண்டனிட்டாள் வாழ்பாண்டிராசருக்கு
வாடிநீகூன்கிழவி மாதுகன்னிஔவையரே
அவரவர்கள்பங்குதனை யடைத்தார்கள்பங்குதனை
உன்பங்கையடைக்காமற் போனதென்னகூன்கிழவி
ஆரோஒருவொட்டனையா ஆறடைப்பேனென்றுசொல்லி
நூறுபிட்டுவாங்கிதின்று நேராயடைப்பேனென்றான்
பிட்டுதின்றபாவியைத்தான் பின்வரக்காணேனே
ஆறடைத்தானென்றிருந்தேன் அங்கீதம்பண்ணிவிட்டான்
அவ்வார்த்தைதான்கேட்டா ராயிரம்பாண்டியர்கள்
ஆராடாசேவகரே அவனைப்பிடியுமென்றார்
தேடிப்பிடியுமென்றார் சீரானவொட்டனைத்தான்
அப்போதுசேவகர்க ளாராய்ந்துதேடலுற்றார்
மதுரைத்தெருவுகளும் வனங்களுந்தோப்புகளும்
தேடிவருகிறார்கள் சீரானவொட்டனைத்தான்
மரத்தடியில் பள்ளிக்கொண்ட மன்னவனைக்கண்டார்கள்
கண்டுபிடித்தார்கள் கடுகெனவேகூட்டிவந்தார்
பாண்டியராசாக்கள் பார்த்தவருங்கோபமதாய்
வாணியக்கிழவியைநீ வணமோசஞ்செய்தாயடா
ஆறடைப்பேனென்றுசொல்லிப் பிட்டெலாந்தின்றுவிட்டு

மண்ணெடுத்துப்போட்டுநீ வசையடையுமென்றால்
நட்டுவேமென்வாரித் தலைமேலெடுத்துக்கொண்டு
அடிமேலடித்துமல்லோ அஞ்சிநடைநடக்க
ஆதிசிவனென் றறியாமற்பாண்டியர்கள்
பிட்டுதின்றமயக்கத்திறைற் போநமனார்வல்லையோடா
என்றுசொல்லிப்பாண்டிய ரிவ்வளைத்தானடித்தார்
பாரப்பிரம்பாலே பாண்டியரடித்துவாரார்
அடிபட்டசொக்கலிங்கம் அம்மண்ணைப்போட்டுவிட்டார்
ஆறுமடைத்தவ ரருமியாய்ப்போய்மறைந்தார்
ஆறுயிரப்பாண்டியற்கு மடி தடையிற்பட்டதுவே
ஆறுமாதப்பிண்டத்திற்கு அந்தவடிபட்டதம்மா
அப்படிப்போலாருமிது அல்லியம்மாமிஞ்சாதே
ஆண்டியைக்கொன்றக்கா லாரார்தலைபோமோ
உன்கையாற்கொல்லாதே கட்டழிசங்கமரை
கொள்ளாரைவிட்டுமல்லோ கொல்லவிச்சங்கமரை

ஆண்டியைச் சர்ப்பங்களாற் கொல்லநினைத்தது.

பாம்புகளைக்கொண்டு பாரவிஷமேற்றி
சர்ப்பங்களைவிட்டுநீ சங்கமரைக்கொல்லுமென்றார்
அவ்வார்த்தைதான்கேட் டல்லிப்பெருமாளும்
ஆடிதாதிகளே யலங்காரத்தோழிகளே
பாம்புபிடாரர்களைப் பார்த்தோடியழையுமென்றார்
ஓட்டநடையுமாக ஓடியழையுமென்றாள்
அவ்வார்த்தைதான்கேட் டாரணங்குதோழிமாரும்
பாம்புபிடாரனைப்பெண்ணே பத்தினிமாரானோர்கள்
அல்லிப்பெருமாளு மழைத்தோடிவாருமென்றாள்
வாருங்களென்றுசொல்லி வரவழைத்தார்தாதியர்கள்
மட்டிக்குழலூதி மகாவிருதுகட்டினார்கள்
பாம்புவெட்டித்தோளில்வைத்துப் பிடாரப்பெண்கள்வாரார்கள்
வீதியும்வீதியது தெருவும்பலகடந்து
அல்லியம்பாள்வாசலிலே அனைவோரும்வந்தார்கள்
மகுடத்துரைச்சியற்கு வந்துதெண்டம்பண்ணினார்கள்
எங்களையழைத்தவகை யேதுவகைசொல்லுமென்றார்
உங்களையழைத்ததுநா னொன்றுக்குறையுமில்லை
காட்டித்துப்போங்களடி சன்னிபுத்தில்மருந்துவைத்து
கரிநாகஞ்செந்நாகம் கார்க்கோடகப்பாம்புதனை
மண்ணுளிப்பாம்புகளும் மலைவிரியன்தாசிரியும்
பட்டில்லாப்பாம்புகளை வகைவகையாய்ப்பிடித்து
ஆண்டியைக்கொல்லவேணு மதிதுரிதமாய்வாருமென்றாள்
உச்சிதங்கள்வேணமட்டு முங்களுக்குநான்தருவேன்
பாம்புப்பிடாரப்பெண்க ளாரணியம்வந்தார்கள்

புற்றுக்குமருந்துவைத்தார் பெரும்பாம்புதான்பிடிக்க
மந்திரத்தைச்சொல்லியவர் மகுடிக்குழலூதினார்கள்
புற்றீசல்போலாகப் புலப்பட்டதுபாம்புகளும்
கரிநாகஞ்செந்நாகங் கருத்தசிறப்பாம்புகளும்
ஆடிவரும்பாம்புகள் தானமர்ந்ததுபெட்டியிலே
சீறிவருகின்ற செந்நாகமுள்ளதெல்லாம்
மட்டில்லாப்பாம்புகளை வகையுடனேதான்பிடித்தார்
காவடியைத்தோளில்வைத்துக் கடுகியேவாரார்கள்
விருதுகளைக்கட்டிக்கொண்டு மகுடிக்குழலூதிவாரார்
காடுசெடி தாண்டிக் கடுகிவந்தார்தென்மதுரை
செட்டித்தெருதாண்டி தேரோடும்வீதிவிட்டு
அல்லியம்மாள்தன்னுடைய அரண்மனைக்குள்வந்தார்கள்
வாயலூர்வாசலது யேழுகட்டுந்தான்தாண்டி
பத்தினிக்குத்தெண்டனிட்டுப் பாம்புகளைமுன்னேவைத்தார்
வகைக்கொருபாம்பாக மாதேநாங்கொண்டுவந்தோம்
கொண்டுவந்தோமாச்சியென்று கொம்பனைக்குத்தெண்டனிட்டார்
மருட்டுத்துரைச்சியவள் மாதுவேளதுசொல்வாள்
ஆர்பெண்கள்நாதிகளே யலங்காரத்தோழிகளே
பாலும்பழமுமாய்ப் பாம்புகட்குவையுமென்றாள்
அபினிமருந்துகளு மடைவானசாராயமும்
முட்டையுடைத்துமல்லோ முன்னேவையுமென்றாள்
கொண்டுவந்துவைத்தார்கள் கொம்பனைமார்பாம்புகட்கு
அந்தண்டபாம்புகளு மாகாரமுண்கிறது
கண்கள்சிவக்கிறதே காந்தாளமாயினதே
அவ்வலரிக்கண்களெல்லாம் செவ்வலரிப்பூத்ததங்கே
பாம்புகளைப்பார்த்துமல்லோ பத்தினியாளேதுசொல்வாள்
அங்கயற்கண்ணம்மை யருளாலேயான்பிறந்தேன்
பட்டமுஞ்செங்கோலும் பாதிநாடாளுகிறேன்
வாடியென்றும்போடியென்றும் வம்புசொன்னாருமில்லை
ஆண்டியிடவாயாலே யலைச்சல்படுகிறேனே
சாதிகெட்டபண்டாரம் தாறுமாறாய்ப்பேசுகிறான்
என்-அங்கமுருகிறதே யாவிதணலாகிறதே
சென்மமுருகிறதே சிந்தைதணலாகுதம்மா
பண்டாரமானவனைப் பக்கிஷியேகொல்லுமென்றாள்
கும்பிட்டுத்தெண்டனிட்டாள் குணமானபாங்கியற்கு
அவ்வசனங்கேட்ட வத்தண்டபாம்புகளும்
செந்நாகமுள்ளதெல்லாஞ் சீறியெழுந்தனவே
கரிநாகமுள்ளதெல்லாங் கதறியெழுந்தனவே
இருதலைப்பாம்புகள்தா னெழும்பிவருகுதங்கே
மூன்றுதலைநாகமல்லோ முடுகிவருகிறதே

சீர்வருகாகமெல்லாம் தேர்விஜயனைப்பார்த்து
நீடிவளரும்பாம்பனைத்து பார்ச்சுனனைக்கண்டதுவே
அறுதெறுமன்று அர்ச்சுனராசனென்றான்
முன்னழகும்பின்னழகும் முதுகில்பச்சரேகைகளும்
பச்சிப்பாசவிலை பாதத்திற்செந்தாமரை
மீசைமுறுக்கழகும் விழிகல்லபார்வைகளும்
அவயவங்களைத்தான்பார்த்து அர்ச்சுனனென்றறிந்து
நாககன்னிமணவாளன் நல்லியராசனல்லோ
அருமைத்தம்பியாக தனஞ்செயனர்ச்சுனர்காண்
மெத்தப்பிரதாபனை மிகருக்குத்தப்பியல்லோ
மாயனைத்துணைக்குநர்காண் வாள்விஜயரிவர்காணும்
அல்லியரையாண்டிட ஆண்டிகோலமாகவே
மாண்டிடவேணுமென்று வேடங்கொண்டுவந்தாரே
மாப்பிள்ளையைக்கொல்லவென்று மருந்திட்டாளல்லியரும்
ஆனவிளக்காலமென்று கட்டமுகிமருந்திட்டாளே
அல்லியதுவார்த்தைகேட்டு அர்ச்சுனனைக்கொல்லவென்று
பொற்கொடியாள்நாககன்னி போதச்சிறையாவாள்
எனமோசம்வந்ததிம் கன்னிசெய்தகாரியங்கள்
செல்வமகளுக்குச் செங்கானல்விசவென்று
இந்தநேரமதா அர்ச்சுனர்க்குக்குடைபிடிக்கும்
தோள்மேலேயேறுவதும் தும்பிபறப்பதுவும்
தெங்கள்பாமேதும் கொண்டாடிப்பதுவும
அரும்பவனிநடத்தகைரு மாடுஞ்சிலகாகம
மருட்டுகைச்சியனை மாதருமபார்த்துவிட்டாள்
ராமபுயங்கவேதான் பாம்மருந்துவைத்தான்
வானஞ்சூழ்வதற்கு மருந்தனைபோள்கைகளில்
சன்னமயக்கவொரு மருந்தரியபட்டாளே
அர்சனுக்குதிகளை பலங்காரதேதாழ்சனே
வெள்ளிப்பிரம்பாலே விசங்கள்பாம்பகளை
பாரப்பிரம்பாலே பாம்பையடியுமென்றான்
தாதிமாரப்போது சவுக்கெடுத்துவீசலுற்றா
மாற்பயக்ககூற்றூர் வன்னவிதப்பாம்புகளை
அப்போதுசர்ப்பமெல்லா மல்லியரைப்பார்த்துரைக்கும்
மாமன்னிதேயுமாக மனமுகாத்தஞ்செய்கையிலே
அன்னஞ்சலர்த்தற கழைத்தால்வருவோமோ
சன்றநதப்பாம்புகள்தா னெகிரிப்பறந்ததுவே
பாங்கிதுமாதல்லதொரு பவளசேனைக்கேளும்
சாதுத்தத்தினிலே கொன்றிடுவோமென்றேதாழ்
பண்டாரத்தனைக்கொலைப் பக்குவஞ்சொல்லுமென்றாள்
ஆளுக்கேளாச்சியரே ஆலோசனைசொல்லுகிறேன்

நீபிறக்கத்தவசுபண்ணை சீநிபுள்ளகாட்டானை
அதின்மையனுமத்தான் தனக்குபயங்கொண்டேற்றி
சொல்லவிடலாமோகொம்பனேயோசங்கமனே
அவ்வார்த்தைதான்கேட்டு டல்லியனைவிழ்ந்து
ஆனையினால் ஆண்டவைக்கொல்ல வகைசெய்தது.
ஆரடி காதிகளே அலங்காரத்தோழிகளே
காட்டானைதன்னை கொன்று அபிசேகமுடிமன்றான்
ஆரிடமேசெல்லுமடி சொல்லுமவார்த்தை
நீபிறக்கத்தவசுபண்ணை சீநிபுள்ளகாட்டானை
வெற்றித்திரிகிறதே வெங்கானகத்திலே
தன்னிழலைத்தான்பார்த்துத் தனமதம்போமிலின்றது
கொம்பிலுள்ளமல்லையைப்பல்லோ குத்திப்பிளக்கிறதே
மின்னலைதனைத மன்னோடேசாய்த்துவிடும்
மதம்பட்டுக்திரியுதம்மா மலைவனேயோபல்வானை
காங்கலக்கண்டாலே எரித்துஅழைத்துவிடும்
செத்துமடிக்கிடுவோம் சிலவேலைப்போர்க்கிடுவோம்
சென்றேமேயாமாகில் திரும்பிவருவதில்லை
இவ்வார்த்தைதான்கேட்டு சொல்வாளல்லியரும்
கலையாழுமோதிரத்தைதக்கபூத்திக்கொடுத்தாளே
முத்திரைமோதிரத்தை மொய்குழலாள்கொண்டுநீங்கள்
ஆனைமுன்னேவைத்து அடிபணிந்துசொல்லிட்டு
நீ-பெற்றமகளல்லியம்மாள் பூமியெழுந்தினேன்
உன்னைப்-பார்க்கமனதாகப் பத்தினியாள்நாற்றினேன்
அழைத்தேனு வருமென்று சொல்லுவேனல்லியம்மாள்
கலையாழிசூழ்ந்தபல்லோர் கொணைத்துவாருமென்றான்
திட்டமனையாக ஒடுங்கள்தாதியென்றான்
மத்தகஜந்தான்பிடிக்கு மாவெட்டப்பெண்களவர்
தக்கதுமோனிலையிற் சடுதியிற்போய்நுழைந்து
புத்திரானவற்குப் புத்திமிவைாத்து
மத்தகஜந்தான்பிடிக்க மகாவனம்போமோமே
சாவோம்பிழைப்போமோ சண்டெயலெல்லாடிபோ
பிழைத்தாலம்வந்தோமானால் பின்னேமுகம்பார்ப்போம்
இல்லாமற்போக்குதானால் சென்பதுப்பேருக்கோம்
பின்னேகளைக்கூட்டி வந்து பெரியோர்காலிலொப்பிவித்து
வாய்க்கரிசிவாங்கி மலைகளிற்போகலுற்றார்
இருண்டவனங்களெல்லா மெங்கெங்குந்தேடலுற்றார்
மலையோரமபடுத்திருந்த மத்தகஜங்கண்டாலே
யானையதுவிரட்டலங்காரமாயெழுந்து
தன்னிழலைதான்பார்த்துத் தலையைக்குடைக்குமது
கொம்பால்மலையைக்குத்திக் கிழப்பிற்[illegible]யானையது

கண்டிப்புக்காரர்கள் கட்டழகிப்பெண்கொடியாம்
பார்த்தனுமக்கண்டுமே அடிபணிந்து தெண்டனிட்டார்
ஏந்திழையா ளிருந்தபோதே மன்னியபோதுசொல்லுவார்
அல்லிப்பெருமாளு மாமனைத்தானழைக்கிறாள்
நீங்கள்-தாயுமண்ணன் பெற்றெடுத்தாரு தையல்கன்னிகளையும்
உங்களை-மாமனார்ப்பயமாகிக் கலங்கித்தவிக்கிறீரே
பார்க்கவுமே தாமிப்பெற்றதற்குப்பயப்படுகிறான்
பொருளைப்பெண்ணும்புரம்பித்தவிக்கிறான் தான்
உன்னுறவுபிக்கார கொழுந்தொழுதுநாமிருந்தார்
பிள்ளைப்பெற்றதாலே பத்தினியாளல்லியரும்
அந்தநாளின் அதுபோலே மனதுக்கேதாவருமென்றாள்
நீ-வரையதுபோருக்கென் பாலைப்பொதுவேவென்றாள்
சொத்துவாடவேணுமென்றாள் சௌவழிந்துபோவேனென்றாள்
கல்லிணையே வாருமென்று கைப்பிடித்து தெண்டனிட்டார்
கேட்டதையாரோ கொர்க்கித்துத்தான்வருமாம்
பார்த்தனும்போது அழகானதாதியர்கள்
சித்தத்தெருக்கட்டு தேரோடும்வீதியிட்டு
அல்லியம்மாள் தன்னுருவே அடிபணிந்து தெண்டனிட்டார்
பார்த்தனுமே தன்று அடிபணிந்து தெண்டனிட்டார்
மதுரைத்தாதைச்சேவகர் மாதுகல்லி தான்கேட்டு
கரும்புச்சாயைக்கிழித்தான் கட்டுக்கட்டாய்வையுமென்றாள்
தென்னம்பட்டை வாழைமட்டை தோரணமே வையுமென்றாள்
பச்சரிசிகுத்தியுமே பாக்கிலேவையுமென்றாள்
தூண்கள்சாரமும் பச்சைபட்டுக்கொட்டகை
செங்கரும்பின்மேலும் சோலைவெட்டுவையுமென்றாள்
இடுவதுக்குப் பாவையான பிறைக்கோடுபோடவையுமென்றாள்
சொன்னவேர்த்தனைத்தாரகள் கொப்பனைபாவுண்டுமே
வாழ்மதுரைப்பட்டணத்தில் பத்தாசுகுதிறதாம்
பார்த்தனுமுமேதன்று அம்மதுரைப்பட்டணத்தார்
மதுரைக்குடிபடைகள் மாளிகையிற்போய்ப்புகுந்தார்
குடிபோனபார்ச ஆத்தமானவர்கள்
அப்போதுயபத்தெகும் அங்காரமாய்கட்டு
சித்தத்தெருதான் தேரோடும்வீதியிட்டு
கைடுகைத்தெருவும் கருமாரவீதியிட்டார்
அல்லியம்மாள் தன்னுடைய அரண்மனைக்குவந்ததாரை
பார்த்தனைக்கண்டவுடன் அல்லியெழுந்திருந்து
பத்தனுமுன்னேவந்து வணக்கமே தெண்டனிட்டாள்
பார்த்தன்குமுன்பாக ஆசனம்வைத்தார்கள்
வயிரமுடனுடனே பக்கமெரிதாக்க
கண்கள்சிவந்ததுவே கனமபக்கங்கொண்டதுவே

அல்லிப்பெருமாளு மடிவணங்கியேதுசொல்வாள்
நான்பிறக்கவேணுமென்று நல்லதவஞ்செய்தீர்களே
நீங்கள்-தபசுபண்ணிப்பெற்றமகள் தடிமாய்நின்றுவிட்டேன்
அன்று-ஏழுபிராயத்திலே யெதிர்த்துவந்தநீன்முகனை
வெட்டித்தலையறுத்து வீரபட்டங்கட்டிக்கொண்டேன்
நீன்முகனைக்கொன்றுதான் நீலிபட்டமாளுகிறேன்
வாடிபெண்ணேயென்பார்கள் வையகத்திலாருமில்லை
அடியென்றழைத்தவர்க ளாருமில்லைபூமியிலே
ஆண்டிபிடவாயாலே யலைச்சல்படுகிறேன்யான்
சாதிகெட்டபண்டாரந் தாறுமாறாய்ச்சொல்லுகிறான்
சொல்லாததுஞ்சொல்லுகிறான் செம்மழுருகுதையா
பொறுக்கமுடியவில்லை பெரும்பாவிசொன்னதெல்லாம்
கேட்டுமுடியவில்லை கேடுகாலன்சொல்வதெல்லாம்
செல்வம்குலைந்ததையா சீரழிந்துநின்றுவிட்டேன்
ஆண்டியைக்கொல்வதற்கு அழைப்பித்தேனுச்சியென்றாள்
அல்லியதுவார்த்தைகேட்டு ஆங்காரக்கோபமுடன்
கண்சிவந்துமத்தகளும் காளையரைக்கொல்வதற்கு
தும்பிக்கையைத்தூக்கியல்லோ சுற்றியறையவரும்
முதுகில்மச்சரேகைகளும் முன்னழகுகண்டதுதான்
மச்சரேகைவடிவுகண்டு மயங்கிற்றுஅப்பொழுது
மச்சரேகைபடைத்தவர்கள் மண்டலத்தில்யாருமில்லை
அருச்சுனனொருவனல்லால் அவனியிலேயாருமில்லை
வாழ்விசையனல்லாமல் மண்டலத்திலாருமில்லை
தேவேந்திரன்மகனாண் திருமாற்குமைத்துனனாண்
துரௌபதையைமாலையிட்ட தேர்விஜயனிவர்காணும்
அல்லியரைக்கண்ணமிட ஆண்டிகோலமாகவந்தார்
மாப்பிள்ளையைக்கொல்லவென்று மருந்திட்டாள்மாபாவி
கணவனைக்கொல்வதற்குக் கனத்தமருந்திட்டாளே
அல்லிதன்வார்த்தைகேட்டு அருச்சுனனைக்கொன்றுவிட்டால்
ஆயர்பெருமாளு மறிந்தாற்பழுதுவரும்
வீமனறிந்தாலே வெகுமோசம்நேர்ந்துவிடும்
அல்லியற்கேற்றதொரு அழகுள்ளபுருஷனிவன்
மகளாரைமாலையிட வையகத்திலாருமில்லை
செல்வமருமகன்றான் சீரழியக்காரணமேன்
அருமைமகன்றான் அலைச்சல்படுவானேன்
தும்பிக்கையாலே சுழற்றியெடுத்துக்கொண்டு
கும்பஸ்தலத்தில்வைத்துக் கூத்தாடுமேயானையது
கண்டாளேயானைதன்னைக் கண்கொள்ளாக்கோபமுடன்
மதயானைதான்மயங்க மருந்தறிவாள்பாவியவள்
காட்டானைதான்மயங்க கனமருந்தறிவாளடி

என்னையயர்க்கும்வகை யிவனறியமாட்டானே
ஆடுங்குதிரைகளை யடியுங்கன்யானைதன்னை
மாறியடியுமென்றாள் மதயானைதன்னையவள்
அப்போது மைத்துனனும் அல்லியரைப்பார்த்துரைக்கும்
மாமியின்னையுங்கேளுமாம் மணக்கோலம்வரும்போது
என்னையழைத்தாலும் வந்திறைஞ்சிவருவேனோ
வேண்டியழைத்தாலும் வருவேனோவெல்லியரே
என்றுரைத்ததுவே இருண்டவனங்களுக்கு
மதயானைபோனபின்பு மாயனுமேதுசெய்தார்
மாண்செவியுங்கண்களிரண்டு மாயனார்தெரியவைத்தார்
கண்ணுந்தெரிகிறதே காதிரண்டுங்கேட்கிறதே
அல்லிப்பெருமாளு மாமனுக்கேதுசொல்வாள்
பாக்கியிலுங்கள்வனோ பலனசேனாநாயகியே
இந்தப்பிழைதான் னென்செய்வேன்தோழியென்றாள்
செல்வக்குலைபட்டு தென்மொழியேயென்னசெய்வேன்
பாண்டிப்பெருமானே பதருதோக்கேறினும்
அறிந்துநான்வந்ததல்லோ அக்கிடமேசொல்லுகிறேன்
தெரிந்துநான்வந்ததல்லோ சொல்லுகிறேனுந்தனக்கு
நிலைக்கொண்டெழுந்திருந்து தோழியும்வருகிறாளே
சங்கமுருகில்வைத்து தையலருமேதுசொல்வாள்
ராயபெரியவரே பரிசைப்படைத்தவரே
நிரப்பபடித்தவரே தெளிவறிந்தசங்கமரே
புதிதாய்த்தாசபண்ணிப் புத்திமிகக்கற்றவரே
எங்கிருந்துவந்தீர்சாலிக்கேபுலப்படுகிறீர்
உறவுமையாக இங்கேவந்தீர்சொல்லுமையா
ஆர்காணுமாக்கிடமே யருகில்வந்துகேட்கிறது
மல்லிகார்ச்சுனமிருந்து வந்தேனிதுவழியாய்
துங்கபத்திரிகோதாவரி யப்பிருந்துநதியுடனே
சேதுராந்தரசானதியும் ஸ்தானங்களாடிவந்தேன்
பாராதஸ்தலங்களில்லை பணியாதகோவிலில்லை
மூழ்காததீர்த்தமில்லை மிதியாதகோவிலில்லை
புண்ணியகோடிதீர்த்தமாடிப் போனேனம்மாராமேஸ்வரம்
பட்டிக்குமன்னனுக்கு பித்தரையுந்தெரிசித்தேன்
சாமயத்துக்கென்றதப்பா பிதாவானவென்வயது
தோளுக்காய்ப்புகளும் தொங்குதுபார்தனக்கு
இப்பவோயென்னையோ இன்னமுமைநாழிகையோ
எப்பவோவன்சடலம் இறப்பதுநானறியேன்
அல்லிப்பெருமாளும் அரசாளுமநாயகியாள்
கன்னிகையென்றார்கள் கட்டழகியல்லியரை
பத்தினியாளென்றுமெகு பேர்களுஞ்சொன்னார்கள்

ஆசையினாலேதா னரணங்கைத்தேடி வந்தேன்
எங்கள்-முப்பாட்டநாளையிலே னைத்தபழஞ்சோளி
அட்சயபாத்திரந்தா னடிபீரலாச்சுதென்று
சோளிக்குப்பழஞ்சேலை கேட்கவந்தேன்சுந்தரியே
உடுத்திக்கிழித்திருக்கு முள்ளாடையொருமுளந்தான்
எனக்குமவள்தந்தாலே எழுந்திருந்துபோவேனம்மா
அவ்வார்த்தைதான்கேட்டு அரணங்குலைந்துவிட்டாள்
அல்லியற்குத்தெண்டனிட்டு அன்புடனேசொல்வாள்
ஐயாபெரியவர்மே லாயாசப்பட்டீரே
அவர்-முப்பாட்டநாளையிலே னைத்தபழஞ்சோளியம்மா
அட்சயபாத்திரந்தா னடிபீரலாச்சுதே
சோளிக்குப்பழஞ்சேலை கேட்கிறார்சுந்தரியே
பிச்சைகொடுத்தனுப்பும் போய்விடுவான்சுவாமியென்றாள்
அவ்வார்த்தைதான்கேட்டு அரசிதுரைநாயகியாள்
அறுபதுமுழப்புடவை அழகானபச்சைவடம்
எடுத்துக்கொடுங்களடி இரக்கமில்லாப்பாவியற்கு
நச்சுநச்சென்கிறது நரைக்கிழவன்போராட்டம்
எப்போதுதான் தொலையும் எடுத்துக்கொடுங்களென்றாள்
ஓட்டம்நடையுமாக ஓடிவந்தார் தாதியர்கள்
பச்சைவடங்கொண்டுவந்து பண்டாரமுன்னேவைத்தார்
ஐயாபெரியவரே யறிவுபடைத்தவரே
சோளிக்குப்பழஞ்சேலை சுந்தரியைக்கேட்டீரே
முப்பதுமுழப்புடவை முன்னேவைந்தோமெடுத்துப்போம்
ஆர்சாணுமாச்சியரே ஆரணங்கேநீர்கேளும்
இப்படிக்குவேணுமானால் எனக்குமனேகமுண்டு
நாட்டிலேநான்குலட்சம் நமக்குக்கொடுப்பார்கள்
பத்தினியாள்கட்டினதோர் பாவாடையுள்ளாடை
உள்ளாடைசேலைதனி லொருமுழம்வேண்டுமென்றார்
அவ்வார்த்தைதான்கேட்டு அல்லியருங்கோபங்கொண்டு
இப்படிக்குப்பிச்சைகேட்போ ருண்டோவுலகுதனில்
பாக்கியினும்நல்லதொரு பவளசேனையேதுசொல்வாள்
ஆச்சியரேயுந்தனுக்கு அகதேற்பழுதுமில்லை
கொடுப்பதினாலேயம்மா குறையொன்றும்வருவதில்லை
அழுக்கில்புழுங்கினதோர் ஆடைதந்தால்சேதமென்ன
கொடுக்காமற்போனாலவன் கொஞ்சத்தில்விடுவதில்லை
சனியன்தொலையவேண்டுஞ் சற்றேகொடுத்தனுப்பும்
அப்படியேநான்கொடுத்தா லாண்டியவன்போவானோ
கேட்டுவாதாதியரே கேடுகெட்டசங்கமனை
பாக்கியினும்நல்லவளாம் பவளசேனையோடிவந்து
ஐயாபெரியவரே அறிவைப்படைத்தவரே

நீரப்படித்தவரே தெளிவறிந்தசங்கமரே
உள்ளாடைசேலையது ஒருமுழமுந்தாலே
போகிறீரோபெரியவரே புண்ணியரேசொல்லுமென்றாள்
ஆனால்கேளாச்சியரே அதினுமொருவயணம்
ஏந்திழையாள்பிச்சைதந்தால் இருகையால்வாங்கிக்கொள்வேன்
தேன்மொழியாள்கைத்தலத்தை தீண்டியேயான்பிடித்து
அள்ளியேநீறிடுவேன் ஆனந்தமாரியற்கு
இருகையினால்வாங்கி ஏந்திழையாளளிக்கவேண்டும்
உலகத்திலுள்ளபடி உத்தமியேதப்பாது
அவ்வார்த்தைதான்கேட்டு அழகானதாதியரும்
மகுடத்துரைச்சியற்கு வந்தவளும்தெண்டனிட்டாள்
ஆச்சியரேநீர்கேளும் அடியேனொருவார்த்தை
ஐயருக்குபிச்சையது ஆரணங்கேதந்தபின்பு
உன்கைத்தலத்தைத்தான்பிடித்துக் கடுகியேநீறிடுவார்
வாங்கித்தரித்துக்கொண்டால் வாழ்த்தியவர்போய்விடுவார்
உலகத்திலுள்ளபடி யுனக்குக்குறைவுமில்லை
தலையிலெழுத்திதுவோ தையலரேஎன்தோழி
உடுத்தியசேலையது உள்ளாடைதான்கிழித்தாள்
இந்தாருஞ்சாமியென்று ஈந்தாளேயல்லியம்மாள்
வாங்கியந்தசங்கமனும் வாழ்வரசிமுகம்பார்த்து
அள்ளியேநீறுமிட்டார் ஆரணங்குகைத்தலத்தில்
பத்தினியைவாழ்த்தியவர் பல்லொளியைக்காட்டினரே
அடிவானமின்னலைப்போ லல்லியற்குத்தோன்றினது
கண்டுமயங்கினளே கட்டழகியல்லியவள்
காண்டீபனருச்சுனனுங் காற்றாய்ப்பறந்துவிட்டார்
தெத்துத்தெருதாண்டி சீரானகாட்டில்வந்தார்
மாயன்பெருமாளிடம் வந்துவிட்டானருச்சுனனும்
அல்லியின்வாசலிலே அதிசயங்களுள்ளதெல்லாம்
மாயருடன்சொல்லியல்லோ மனஸ்தாபப்பட்டழுதான்
மாலைதரிப்பதெப்போ மனதுகுறைதீர்வதெப்போ
கூடியணைவதெப்போ குறைகளெல்லாந்தீர்வதெப்போ
மன்மதபாணமதுமார்புருவிப்போகுதென்றான்
அப்போதுஅல்லியரும் அவள்சோகந்தீர்ந்தெழுந்து
ஆரடிதோழியர்க ளாயிரம்பேர்வாங்களடி
ஆண்டியைக்கொண்டுவாரும் ஆக்கினைகள்செய்யவேண்டும்
பாங்கியிலும்நல்லதொரு பவளசேனையேதுசொல்வாள்
சந்திரனோசூரியனோ சதுர்முகப்பிரமதேவர்
மாணிக்கச்சொக்கலிங்கம் வடிவுகொண்டுவந்தாரோ
எங்கென்றுதேடுவோம் எழிலானசங்கமனை
போனானுப்போய்ப்போரான் போரேவாமேரன்மனைக்கு

அல்லியரைக்கூட்டிக்கொண்டு அரண்மனையில்வந்தார்கள்
மாளிகைவாசலது மண்டபம்வந்தார்கள்

ஸ்ரீகிருஷ்ணபகவான் பாம்புப்பிடாரனாகவும் அருச்சுனன்
பாம்பாகவும் வடிவுகொண்டது.

அப்போதுபெருமாளும் ஆயரென்னவடிவெடுத்தார்
பாம்புப்பிடாரனாகப் பாரளந்தார்வடிவெடுத்தார்
தொண்ணூறும்பத்துஞ்சென்ற தூண்டகிழவனைப்போல்
பண்ணைப்பூபோலாக பழுத்தகிழவனானார்
பத்துவிதப்பாம்புகளை பாரளந்தாருண்டுபண்ணார்
வாழ்விசயனருச்சுனரை மாணிக்கப்பாம்பாக்கி
போர்விசயனருச்சுனரைப் பெட்டியிலேதானடக்கி
மூப்பதுவிருதுகட்டி மூகடிக்குழலெடுத்து
பாம்புபெட்டிக்காவடியை பாரளந்தார்தோளில்வைத்து
மகுடிக்குழலூதி வாராரேயெம்பெருமாள்
அல்லியவள்பிறந்த அழகானபொய்கையண்டை
ஆலமரத்தடியில் அரிராமர்வந்தமர்ந்தார்
நடுகாட்டிடைச்சியர்கள் நானூறுகன்னிகளும்
பாற்குடங்கள்தாமெடுத்துப் பத்தினிக்குக்கொண்டுவந்தார்
காராம்பசும்பாலைக் கப்பங்கள்கட்டிவைப்பார்
ஆலமரநிழலிலே அனைவரும்வந்தமர்ந்தார்
பெண்ணரசுமாதரெல்லாம் பிடாரனைக்கண்டார்கள்
ஐயாபெரியவரே அழகானபிடாரனேநீர்
எந்தவூரெந்தநாடு எங்கிருந்துவந்தீரையா
ஊரென்னபேரென்ன உத்தமனேசொல்லுமென்று
கொங்குமலையாளம் கொச்சிதேசமெங்களது
பாம்புபிடிக்கிறதும் பவனியாட்டிவைப்பேனென்றார்
ஆனால்கேளையாவே அடியேனொருவார்த்தை
என்னென்னபாம்புவிதம் எடுத்துதானாட்டுமென்றார்
பசியாயிருக்குதம்மா பாம்பாடமாட்டாது
ஐந்துநாளாச்சுதம்மா ஆகாரந்தான்புசித்து
போசனங்களில்லாமல் புல்லாடல்பட்டுதம்மா
பாலதுதான்குடித்துப் பசியதுதான்தீர்ந்தால்
அப்போதுவிளையாடும் அழகானபாம்பிதுதான்
அவ்வார்த்தைகேட்டு அங்கிருக்குமாதரெல்லாம்
கொஞ்சம்பால்வார்க்கிறோம் குடிக்கவையும்பாம்பையென்றார்
அப்போதுபிடாரன் ஆயரவரேதுசொல்வார்
ஒருவர்-கண்பார்க்கக்குடியாது கனமுள்ளபாம்பிதுதான்
பக்கந்திரைவளைத்துப் பாற்குடத்தைமுன்புவைத்தால்
உண்டுபசியாறும் உத்தமியேயிப்பாம்பு

பாற்குடங்களைத்திறுமுள்ள பாலையெல்லாம் பாம்பு குடித்தது.

அத்தனைபெண்களெல்லாம் அவ்வார்த்தைதான்கேட்டு
பாற்குடமுள்ளதெல்லாம் பால்திறந்துவைத்தார்கள்
சுற்றித்திரையேபோட்டுச் சீரானபாம்பைவிட்டார்
பக்கத்திரைவளைத்துப் பாம்புகளையுள்ளேவிட்டார்
அறுகூறுமன்னன் அருச்சுனவீரியனும்
பாலைக்குடித்துவிட்டுப் பானையுருட்டிவிட்டார்
திரையெடுத்துப்பார்த்தார்கள் திகிலடைந்தார்பெண்களெல்லாம்
நரையோதெய்வமென்று அறைந்துகொண்டாரெல்லவரும்
பாவிகெடுத்தாயே பாலெல்லாம்போச்சுதடா
இத்தனைபாலையுமெதாய்க்குடித்ததடா
அல்லியறிந்தாலே ஆக்கினைகள்செய்வாளே
தாயணிப்போட்டல்லவோ தலையைத்தறிப்பாளே
கொல்லென்னைப்பாளே குடிகேடுவந்திடுமே
ஆடாபாதகனே அறிவுகெட்டபிடாரனே
கொஞ்சப்பால்குடிக்குமென்று குடமெல்லாம்வைத்தாயே
நரைத்தலையைகாப்பிங்க கிழத்தலைக்குகேடுவர
எங்களைக்கெடுத்தாயடா எங்கள்பாவங்கொண்டாயடா
என்றுபுலம்புகிறா ரிளங்கொடிமாதரெல்லாம்
அழுதகண்ணுஞ்சிந்தையுமாய் போரார்கள்மாதரெல்லாம்
அல்லியம்மாள்தன்வாசல் அரண்மனையில்வந்தார்கள்
அல்லியைத்தொழுவந்து அடிவணங்கித்தெண்டனிட்டார்
ஆச்சரியமானதாயே அதிசயத்தைக்கேளும்
மதுராபுரியருகே வைகைக்கரையோரம்
ஆலமரத்தடியி லங்கேயொருகிழவன்
பாம்புப்பிடாரனவன் பாருலகில்யாமறியோம்
பத்துவிதப்பாம்புகளில் பஞ்சரத்தினபாம்பிதுதான்
சந்திரனைப்போலாகத் தொரு படமேதென்றுச்சி
சூரியனைப்போலேயல்லோ துலங்குதேதென்றுச்சி
வெற்பவளமது மின்னுகிறகாந்தியைப்போல்
மின்னற்கொடிபோலே விளங்குகிறதப்பாம்பு
பாம்புப்பசியாயிருக்கிறது பாலைவார்த்துப்போங்களென்றான்
பாற்குடத்தைத்திறக்கப் பாலதுவார்க்கவந்தோம்
கண்ணாலேபார்த்தாலே கண்டிப்பால்குடியாதென்றான்
அத்தனைபாலையுந்தா னப்பாம்புவுண்டதம்மா

அல்லியரசாணி பாம்புப்பிடாரனை வரவழைத்தது.

அவ்வார்த்தைதான்கேட்டு அல்லியருமேதுசொல்வாள்
இந்தவதிசயத்தை யெங்கிலும் கண்டதில்லை

பாம்புகளைப்பார்க்கவேண்டும் பிடாரனையழையுமென்றாள்
அந்தகிழவனைப்போய் அழைத்தோடிவாருமென்றாள்
அவ்வார்த்தைதான்கேட்டு அலங்காரத்தோழிமார்கள்
பாம்புகளையாட்டிவைத்தால் பாக்கியங்களளித்திடுவாள்
வேணுமென்றஉச்சிதங்கள் உத்தமியாள்தான்கொடுப்பாள்
வாருமையாவென்றுசொல்லி வருந்தினார்தாதியர்கள்
அப்போபிடாரனவன் அரிராமர்தானெழுந்து
காவடியைத்தோளில்வைத்து கடுகிவழிநடந்தான்
அங்காடிவீதிகளும் அரண்மனைத்தெருத்தாண்டி
அல்லியம்மாள்தன்வாச லரண்மனையிற்போய்ப்புகுந்தார்
வாசலும்வாசலது படியேழுந்தான்தாண்டி
சிங்காதனத்துக்கு முன்பாகவந்துநின்றார்
உத்தமியைக்கண்டவனும் ஒதுங்கியேதெண்டனிட்டான்
வந்துபணிந்தவரும் வணங்கியேநிற்கலுற்றார்
ஐயாபிடாரனே அப்பாம்பையாட்டுமென்றாள்
வண்ணவண்ணப்பாம்பெடுத்து விதவிதமாயாட்டலுற்றார்
ஆடாதகூத்துகளை ஆட்டிவைத்தான்பிடாரனவன்
ஐயாகிழவனாரே அன்பானபிடாரனேநீ
வேரிற்பவளம்போற் றளும்புதுபெட்டியிலே
சந்திரகாசம்போலாகத் தளும்புதுளென்றுச்சி
சூரியனைப்போலேயல்லோ துலங்கிறதுபெட்டியிலே
என்னபாம்பிருக்கிறது எடுத்துநீயாட்டுமென்றாள்
ஆச்சியரேநீர்கேளும் அடியேனொருவார்த்தை
என்னோடேதான்பிறந்த எனக்கிளைதங்கையவள்
தங்கையவள்வளர்த்துவந்த தயவானபாம்பிதுதான்
எப்பாம்பெடுத்தாலும் இப்பாம்பெடுத்தறியேன்
பெண்களைக்கண்டாலே பிரியமுடனோடிவரும்
மார்மேலுந்தோள்மேலும் மடிமேற்புரண்டாடும்
தோளின்மேலேறுவதும் தும்பிபரப்பதுவும்
மார்பின்மேலேறுவதும் மடியிலிருக்குமது
முகத்தோடேமுகமணைந்து முத்தங்கொடுக்குமது
மார்பின்மேலேறியல்லோ மருவிவிளையாடும்
கீதங்கள்பாடுவதும் கெண்டாணடிக்குமது
ஆடாதகூத்துகளும் அரும்பவனியாடுவதும்
வெட்டும்பிளகெடுத்து மெத்தனவேவாயிலிடும்
வெற்றிலைசுருளெடுத்து விரும்பியதுகொடுக்கும்
பஞ்சரத்தினபாம்பிதுதான் பத்தினியேநானெடுக்கேன்
உன்னையிதுகண்டாலே ஓடிவந்துமடியிலேறும்
இப்பாம்பைநானெடுக்கேனென்றான்பிடாரனவன்
ஆனுல்கேளய்யாவே அன்பானபிடாரநீ

அப்பெரியபாம்பினது அதிசயத்தைப்பார்க்கவேணும்
சற்றேபிடித்துவிடும் சந்தேகப்படவேண்டாம்
உச்சிதங்கவேணதெல்லா முன்றக்கேயான்தருவேன்
மெத்தவருந்திறளே மெல்லிநல்லாளல்லியரும்
அப்போபிடாரனவன் அப்பாம்பைத்தானெடுத்தான்
பெட்டிதிறக்கையிலே பேரானவாழ்விசையன்

அருச்சுனன் பாம்புருக்கொண்டு அல்லியம்மாளை மருவியது.

அல்லிமடிமேலே அருச்சுனனேறினனே
மார்மேலும்தோள்மேலும் மருவிவிளையாடுகிறான்
முகத்தோடேமுகமணைத்து முத்தங்கொடுக்கிறனே
போதுமையாமைத்துனரே போய்வாருஞ்சுவாமியென்றாள்
மாயவரைக்கண்காட்டி வழிபிடித்துப்போங்களென்றாள்
தும்பிபறக்கிறதுஞ் சேர்ந்துவிளையாடுவதும்
கொண்டாடிப்பதுவும் கூத்துகளாடுவதும்
வெற்றிலைபாக்கெடுத்து மெல்லிபற்குக்கொடுப்பதுவும்
பார்த்துமகிழ்ந்தாளே பத்தினியாளல்லியம்மாள்
ஐயாபிடாரனே நீ அன்பானவார்த்தைகேளும்
இன்றையராத்திரிக்கு இருக்கட்டுமிப்பாம்பு
நாளைக்குவந்துதான் வாங்கிப்போம்பாம்பையென்றாள்
அவ்வார்த்தைதான்கேட்டு அன்புடனேயேதுசொல்வான்
என்னுடையதங்கையவள் இன்பமுள்ளநாயகியாள்
பஞ்சணைமெத்தையிலே படுத்திருக்கும்[illegible]யிலே
கூடப்படுத்துக்கொண்டு குலாவிவரும்பாம்பிதுநான்
பக்கத்திற்பிரிந்ததில்லை பத்தினியாள்தங்கையவ
காணமற்போனாலே கலங்கித்தவிப்பாளே
பாராமற்போனாலே படுக்கைபொருந்தாளே
உண்ணாள்குளியாளே உறக்கம்வந்துதூங்காளே
அல்லவென்றுஉன்னிடத்தி லாச்சியேநான்விட்டுப்போனால்
பாம்புகரைந்துபோகும் பத்தினியேயேதுசெய்வேன்
அரைப்பலங்குறைந்துபோகும் அழகானவிப்பாம்பு
கரைந்துகுறைந்தாலும் கனகந்தருவேனென்றாள்
தருசிறையாக நிறுத்துப்போம்பாம்பையென்றாள்
அப்படியேசம்மதித்தார் ஆயன்பிடாரனவன்
எடுத்துத்தராசில்வைத்து இடைபார்த்துவந்துவிட்டார்
பாலும்பழங்களுமே பசியாறவையுமென்றாள்
நாளைவருகிறேன் நாயகமேபோகிறேன்யான்
பானையினுலேயல்லோ பார்த்திபனேதுசொல்வான்
எட்டொருநாள்போனபின்பு இங்கேவாமைத்துனரே
இந்தவிசுவாசமெனக்குத்தெரியுமென்றான்

போங்காறுங்களாயியென்று புகழாகத்தெண்டனிட்டார்
பாம்பைக்கொடுத்தல்லவோ பாரனந்தர்போய்நடந்தார்
பாலும்பழங்களுமே பாம்புக்குவைத்தார்கள்
பார்த்திபனர்க்கனரும் பசியாறித்தானிருந்தார்
அந்திக்காலமாச்சுதங்கே ஆதித்தன்போய்மறைந்தார்
ஆதித்தன்தான்மறைய அல்லியம்மாளேதுசொல்வாள்
அந்தியனுஷ்டானம அனைத்துமிகக்கழித்து
செபதபங்களுள்ளதெல்லாம் செய்தாளேயல்லியம்மாள்
சொக்கலாபூசைசெய்து செவிதனிலேபூச்சாருகி
போசனச்சாலையிலே புகுந்தாளேயல்லியம்மாள்
சர்க்கரைபோல்போசனமும் சாதங்கறிவகையும்
உண்டுபசியாறி உத்தமியாள்கையலம்பி
பஞ்சணைமெத்தையது பள்ளியறைசோடியென்றாள்
தோழிமாரானவர்கள் கருக்காவெழுந்திருந்து
கண்டூன்றுடையதொரு கனவயிரக்கட்டில்விட்டார்
மெத்தைமடிததுவிட்டார் மேலேதலையணைபோட்டார்
காம்பரிதலுங்கலப்பூ கட்டிலின்மேல்சொரிந்தார்
தங்கத்தலையணையுஞ் சார்மணையுமிட்டார்கள்
ஒருகுதலையணையும் ஒய்யாரத்திண்மைவைத்தார்
அருகுதலையணையும்வைத்து அலங்காரஞ்செய்தார்கள்
அத்தர்பனுகுகளும் அள்ளித்தெளித்தார்கள்
கதம்பமுங்கஸ்தூரி [illegible]க்குத்தெளித்தார்கள்
சந்தனமும்பன்னீரு சா[illegible]லுரெத்திசையும்
சந்தனமும்பன்னீரு சாம்[illegible]ராணி தூபமிட்டார்
குத்துவிளக்குகளை[illegible]ழுந்துபடவேற்றினார்
மாடங்கள்தோறுமங்கே மணிவிளக்குமேற்றினார்
சன்னலிலேபன்னீரைச் சாடினரெத்திசையும்
பஞ்சணைமெத்தையண்டை பாக்குப்படிக்கம்வைத்தார்
முத்துசுட்டசுண்ணாம்பும் மோரங்கிவெற்றிலையும்
ஆரங்கிப்பாக்குகளும் அழகுள்ளவெற்றிலையும்
காச்சாகளிப்பாக்கும் கம்மாறுவெற்றிலையும்
வாசாய்ச்சுருள்மடித்து மாணிக்கத்தட்டில்வைத்தார்
வெள்ளிபிற்பாலைவைத்துச் செண்டிகையில்தீர்த்தம்வைத்தார்
சோடித்தோமாச்சியென்று தெண்டனிட்டார்தாதியர்கள்
பாம்பெடுத்துமடியில்வைத்துப் பத்தினியாள்தானடந்தாள்
பஞ்சணைமெத்தையின்மேல் படுக்கையறைபோய்ச்சேர்ந்தார்
மாணிக்கக்கதவடைத்து வயிரத்தாள்பூட்டினாளே
அத்தண்டதாதிகளும் அங்கங்கேபள்ளிக்கொண்டார்
பஞ்சாதனப்பாம்பெடுத்துப் பக்கத்தில்வைத்துக்கொண்டாள்
பத்தினியாளல்லியம்மாள் பள்ளிக்கொண்டாளரண்மனையில்

அப்போதருச்சுனரும் ஆயனைத்தானினைந்து
கண்சொப்பனந்தெளியவேண்டும் ஸ்ரீராமா தயவுசெய்யும்
காயமிகாமது கவலைதீரவேண்டுமென்றான்

ஸ்ரீகிருஷ்ணபகவான் மூதேவியையழைத்து அல்லியின் மேல் பிரவேசிக்கச் செய்தது.

அருச்சுனன் தன் துயர மறிந்தாரேயெம்பெருமான்
சீதேவியுடன்பிறந்த திருவிளையாள் மூதேவி
மூதேவிதானவளை முகில்வண்ணர் தாமழைத்து
மதுரைத்துரைச்சியற்கு மாறுசெய்திக்காலை
விடுத்துமொருசாமம் மெல்லவிருந்திடைதெளியாமல்
மாறுசெய்திடைகொன்றுமென்று மாலிட்டார்மாயவரும்
வந்துவிழுந்துகொண்டாள் வளம்பெரியமூதேவி
அலைந்துதெளியாமல் அசந்துநித்திரைபோகலுற்றாள்
பாம்புவடிவையிட்டுப் பார்த்தியனருச்சுனனும்
அப்போதப்போலாக இளங்கையன்வடிவுகொண்டான்
சங்கரரும்பார்வதியும் தழுவியிருந்ததுபோல்
சிவனுடனே பார்வதியும் சேர்ந்திருந்தபாவனைபோல்
தென்னசீராமருக்குச் சீதைசந்தவாய்த்ததுபோல்
கந்தருடன் வள்ளியம்மை கைகலந்தபாவனைபோல்
சாரையுஞ்சர்ப்பமும் சருவியபானதுபோல்
மானுங்கலையுமல்லோ மருவியணைந்ததுபோல்
கூடிமருவினரே குங்குமப்பூமெத்தையிலே
கண்ணாடிமேலேயல்லோ கற்குருண்டபாவனைபோல்
மல்லிகைப்பூமேலே வண்டிருந்துபாய்ந்ததுபோல்
மருவியணைந்தானே மனோவிடாய்தீர்த்தானே
அருந்தகவலெல்லாம் ஆற்றினனருச்சுனனும்
தீராதகவலெல்லாம் தீர்த்தானருச்சுனனும்
மங்கையரைப்புல்கியல்லோ மருவினனருச்சுனனும்
வெள்ளிமுளைக்கையிலே வெண்கோட்டான் கூவும்போது
பாம்புவடிவெடுத்துப் பக்கம்படுத்திருந்தான்
அப்போதுஞ் சர்ப்பம்போ லெழில்விசையன்வீற்றிருந்தான்
பொழுதுவிடிந்தங்கே பொற்கொடியாற்கண்விழித்தார்
பதாதியர்கள்தாதியர்கள் திடுக்கிட்டெழுந்தார்கள்
அல்லிப்பெருமாளும் அசைந்துநித்திரைபோகலுற்றாள்
கொம்பனையார்தோழியர்கள் கூவியெழுப்பினார்கள்
தட்டியெழுப்பினார்கள் தாமக்குழலாளை
பொட்டெனவேகண்விழித்துப் பொற்கொடியாள் தானெழுந்து
அங்குலையத்தலைகுலைய ஆடைகலைந்திருக்க
திகைத்திருந்தாளே கட்டழகியல்லியம்மாள்

பாங்கியர்கள்சூழவேதான் பவளசேனைவந்துவிட்டாள்
அல்லிப்பெருமாளை ஆரணங்கைத்தான்பார்த்து
உற்றுற்றுப்பார்த்தவளும் உத்தமியைக்கேட்கலுற்றாள்
ஒருநாளுமில்லாத உச்சிதங்கள் சாலுதம்மா
வாரிமுடித்ததலை மயிருங்கலைந்ததென்ன
கோதிமுடித்ததலை கூந்தல்கலைந்ததென்ன
மஞ்சளழிந்ததென்ன மார்பழிந்துபோனதென்ன
பொட்டுக்கலைந்ததென்ன பூவழிந்துபோனதென்ன
கண்ணிலிட்டமைகளெல்லாம் கரையவந்தகாரணமேன்
கோவைப்பழம்போல குமரிசின்செவ்வுதடும்
குமரிசின்செவ்வுதடும் கோதியிருப்பானேன்
படுக்கைகலைவானேன் பஞ்சணைகலைவானேன்
காம்பரிந்தஜெங்கலப்பூ கசங்கிநசுங்குவானேன்
மங்கையரேயுந்தனுக்கு வாட்டம்வந்தவாறேது
அல்லிப்பெருமாளு மாரணங்கேதுசொல்வாள்
பிடாரனவன்சொன்னவார்த்தை பொய்யல்லதாதியரே
மனிதருடன்கூடவே மருவினபாம்பிதுதான்
பஞ்சணைமெத்தையிலே பக்கத்தில்வைத்திருந்தேன்
எதாய்விளையாடிற்றோ இழங்கொடியேதேன்மொழியே
என்று-முத்தின்மிதியடியைத் தொட்டுநடக்தசைந்தாள்
பூங்காவனத்திற்போய் புனல்கங்கைநீராடி
பாலைகொண்டுபல்விளக்கி ஓலைகொண்டுநாவழித்து
கன்னியிழங்கொடியாள் கால்முகஞ்சுத்திசெய்து
வாயோடேபல்லும் மதிமுகஞ்சுத்திசெய்து
சிவனுக்கருளென்று திருநீற்றுக்காப்பணிந்து
சிங்காரமெத்தையின்மேல் தேன்மொழியாள்வந்தமர்ந்தாள்
ஆரடிதாதியரே அலங்காரத்தோழியரே
பாம்புதனக்குப்பாலும் பழங்களும்வையுமென்றாள்
கொண்டுவந்துவைத்தார்கள் குடம்நிறைந்தபாலதுவை
பஞ்சரத்தின்பாம்பிதுதான் பாலைக்குடித்ததுவே
அப்போபெருமாளும் ஆயரவர்தாமெழுந்து
பிடாரனைப்போலாகப் பெருமாளும்வந்துவிட்டார்
வாசலுள்ளவாசலது படியேழுந்தான்தாண்டி
அல்லியம்மாள்முன்னேவந்து அடிபணிந்துதெண்டனிட்டார்
ஆச்சியரேநீர்கேளும் அடியேனொருவார்த்தை
இப்பாம்புமில்லாமலென் னுடையதங்கையவள்
அழுதகண்ணுஞ்சிந்தையுமா யழுதாண்ணமாட்டாமல்
கண்ணீரைவிட்டவளும் கலங்கியழுதாளே
கேளாதவார்த்தையெல்லாம் கேட்டேனம்மாஉன்னாலே
உன்னாலேபட்டகலை உத்தமியேபோதுமம்மா

என்னுடையபாம்பதுதா னெத்தனைகரைந்துபோச்சோ
எவ்வளவுதேய்ந்ததோ வெடுத்துவாரும்பார்ப்போமென்றார்
கொண்டுவந்துநிறுத்தார்கள் கொம்பனவேதிராசுதனில்
பாரமிகக்குறைந்து பாம்புதட்டெழும்பியது
அரைவாசிகுறைந்ததம்மா அழகானபாம்பிதுதான்
இன்னம்-இரண்டுநாளிருந்தால் இங்கேதான் சாகுமம்மா
அறியாமல்விட்டுப்போனே னனர்த்தம்வாலாச்சுதம்மா
கொஞ்சமிடைக்குத்தான் கொண்டுவாரும்ரத்தினத்தை
என்றுசொல்லத்தான்கேட்டு யிளங்கொடியாளல்லியம்மாள்
வச்சிரமாணிக்கமும் வைத்திடைக்கட்டித்தந்தாள்
பாம்பெடுத்துப்பெட்டியிலே பாரளந்தார்வைத்துக்கொண்டார்:

ஸ்ரீ கிருஷ்ணபகவான் அர்ச்சுனனாகிய பாம்பை எடுத்துப்போனது.

போகிறேனாச்சியென்று போய்நடந்தான்பிடாரனவன்
கோட்டைகடந்தவரும் கொத்தளமுந்தான்தாண்டி
தெத்துத்தெருகடந்து தேரோடும்வீதிவிட்டு
ஆரண்யந்தன்னிலே யரிராமர்வந்துவிட்டார்
அனலழகுமன்ன னர்ச்சுனனேதுசொல்வான்
வாழ்வாசியல்லியரை மாலையிடுவதெப்போ
தாலிதரிப்பதெப்போ சுவாமிபெருமாளே
கட்டினவிருதறுத்துக் கலியாணஞ்செய்வதெப்போ
என்றுதெளியுமோ எக்காலஞ்சென்றிடுமோ
அல்லிமேற்சிந்தையா யலைகிறானர்ச்சுனனும்

ஸ்ரீ கிருஷ்ணபகவான் மறுபடியும் மிருகங்களை யுண்டுபண்ணினது.

அன்றுபோய்மற்றநா ளரிராமரேதுசெய்தார்
மாயமிருகங்களை வனத்திலேயுண்டுபண்ணார்
காட்டானைசிங்கங்களும் கரடிபுலியானைகளும்
ஏனக்கடம்பைகளும் யெருமைக்குரங்குகளும்
புள்ளிமான்முள்ளம்பன்றி புனுகுப்பூனைமுயல்களுடன்
மயில்குயிலன்னமும் வண்ணவண்ணப்பட்சிகளும்
அந்தமானமிருகமெல்லா மரிராமருண்டுபண்ணார்
மதுரைக்குடிப்படைகள் வனத்தில்வரஅஞ்சுகிறார்
கண்டவரைஎதிர்க்கிறது காட்டானைசிங்கந்தான்
ஓடிப்பதுங்கியல்லோ வெளிப்பாரேசனங்களெல்லாம்
அழுதகண்ணுஞ்சிந்தையுமா யல்லியண்டையோடிவந்தார்
அழுதமுகத்துடனே அல்லியண்டையோடிவந்தார்
இத்தனைநாள்பிழைத்தோ மிடுக்கமில்லாதிருந்தோம்
என்னகுறைசெய்தோமோ இயலானமிருகமம்மா
காட்டானைகரடிபுலி கண்டுமிரட்டுதம்மா
எந்தவிதமாய்ப்பிழைத்து இடுக்கமில்லாதிருப்போம்
மிருகந்தன்றிமானினமும் விம்மித்துரத்துதம்மா

மறுதேசம்போய்காங்கள் வகையாய்ப்பிழைப்போமம்மா
மதுரையிலுள்ளசெனம் வலசைகுடிபோறோமென்றார்
அவ்வார்த்தைதான்கேட் டலங்காரத்தாதியர்கள்
அல்லியம்மாள்தன்னுடனே அறிக்கையிட்டார்தாதியர்கள்
மகுடத்துரைச்சிவள் வார்த்தையதுகேட்டு
வேடடைக்காரப்பெண்டுகளை விரைந்தோடியழையுமென்றாள்
குறவர்பெண்கள்மறவர்பெண்கள் கூட்டிவாதாதியென்றாள்
வில்லியப்பெண்களைநீ வேட்டைக்கழையுமென்றாள்
கேட்டந்தத்தாதியர்கள் கொப்பெனவேயோடிவந்தார்
வேட்டைக்காரப்பெண்களைத்தா னோடியழைத்தார்கள்
அப்போதுவில்லியர் மெல்லியர்வாரார்கள்
காற்செருப்புந்தோல்குல்லாவும் கைதனிலேசில்லாக்கோலும்
இரட்டைக்குண்டுதுப்பாக்கி இருதோளில்வைத்தார்கள்
பன்றிகுத்தும்வல்லயங்கள் பாங்குகளுந்தானெடுத்தார்
மான்வலையுமுயல்வலையும் வகையுடனேதானெடுத்தார்
உண்டுவில்லுஞ்சுண்டுவில்லுஞ் சிங்காணிவில்லெடுத்தார்
வெள்ளித்தமுக்கடித்து வெண்கலக்கொம்பூதிவாரார்
பொன்னின்தமுக்கடித்துப் புறப்பட்டார்பெண்களவர்
வேட்டைநாயுஞ்சங்கிலியும் விருதுகட்டிவாரார்கள்
கருநாயுஞ்சங்கிலியும் கடுகெனவேகூட்டிவந்தார்
அல்லியம்மாள்வீதியிலே அனைவோரும்வந்தாரென்றார்

அல்லியம்மாள் மறுபடியும் வேட்டைக்குப்போகிறது.

ஐயாயிரந்தோழியர்க ளடங்கலும்பயணமென்றார்
பல்லக்கைஜோடியென்றார் பத்தினியாளல்லியரும்
கனகதண்டிசெப்பனிட்டுக் கன்னியர்முன்னேவைத்தார்
ஆயிரம்பெண்களவ ரழகுள்ளகுதிரையேறி
பாண்டிப்பெருமாளும் பல்லக்கிலேறினளே
பாராசாரிபுரவியது பஞ்சகலியாணியது
விடுகுதிரைசாடித்து மெல்லியர்கள்கொண்டுவந்தார்
எறினள்கனகதண்டி எடுத்தார்கொடிவிருது
ஆனையின்மேன்பேரிகைதா னடிபடுதேகுமுகுமென்று
வெண்கலப்பேரிகைகள் விருதுமுழங்குதங்கே
மேளமுழங்குகுது மும்மண்டலமதிர
மதுரைத்தெருக்களிளெல்லாம் மண்துாளெழும்புது
மதுரைத்தெருந்தாண்டி வந்துவிட்டார்கானகத்தில்
காடுசெடிபுகுந்து கனவேட்டையாடுகிறார்
கனகதண்டிவிட்டிறங்கி கட்டழகிஅல்லியம்மாள்
எறினள்புரவியின்மே லெடுத்தாளே அம்புவில்லை
தட்டினள்புரவிதன்னைச் சாரிவிட்டாள்கானகத்தில்
வளைத்தாளேவில்லதனை வாங்கிவிட்டாளஸ்திரத்தை

இழுத்துவிட்டாள்பாணந்தன்னை இமயகிரிகடுங்க
தொட்டாளே வில்லுதனைச் சொரிந்துவிட்டாள்பாணங்களை
காட்டானைசிங்கங்களைக் கண்டுதுரத்தலுற்றார்
புலிகள்கரடிகளைப் போடுகிறாள்பாணத்தால்
கலைமான்பன்றிகளும் காண்டாமிருகங்கள்
மட்டில்லாமிருகங்களை வதைபண்ணிப்போட்டிடுவாள்
புள்ளிமான்றன்னைக்கண்டு போட்டாளேபாணத்தாலே
மதயானைமிருகங்களை அதமாக்கிப்போடுகிறாள்
அநேகமிருகங்களை அதமாக்கிப்போடுகிறாள்
மாயன்பெருமானு மலைஜாகியேதுசெய்தார்
அந்தவனந்தனிலே அதிசஜலமில்லாமல்
தண்ணீர்கிடையாமல் சுவாமியவருண்டுபண்ணார்
அல்லிப்பெருமாட்கு அதிகத்தாகமுண்டுபண்ணார்
தண்ணீர்களையாலே தாகவிடாயானாளே
நெஞ்சுலர்ந்துபோனாளே நினைவுதப்பிப்போகிறதே
உண்ணாக்குந்தொண்டையது வுலர்ந்துமேபோகிறதே
காதையடைக்கிறதே களையாய்வருகிறதே
தண்ணீர்களையாலே தான்விழுந்தாள்பூமியிலே

அர்ச்சுனன் காசிப்பிராமணனாகவந்து தீர்த்தங்கொடுத்தது

கண்டபனர்ச்சுனனுங் கட்டழகாப்போது
காசிப்பிராமணன்போல் கடுகவடிவெடுத்தார்
தொண்ணூறும்பத்துஞ்சென்ற துவண்டகிழவனைப்போல்
நாணற்பூப்போலேயல்லோ நரைத்தகிழவனானார்
காசிநல்லதீர்த்தமது காவடியைத்தோளில்வைத்து
மூர்ச்சையாய்விழுந்தாளே மொய்குழலாளல்லியம்மாள்
அந்தவழியாக வர்ச்சுனரும்வந்தாரே
பிராமணனைக்கண்டார்கள் பொற்கொடிமார்தோழியர்கள்
ஐயாபெரியவரே அழகானவேதியரே
பாருலகையாளுமொரு பத்தினியாளல்லியம்மாள்
தண்ணீர்களையாகத் தவித்துவிழுந்தாளே
தாகவிடாய்மிகுந்து தளர்ந்தாள்காண்ராஜகன்னி
காதையடைத்தலுங் களைத்துவிழுந்தாளே
காசிதீர்த்தம்வாருமையா களைகளைத்தெளியவேணும்
புண்ணியமாய்ப்போகுதையா பிராமணரேதீர்த்தங்கொடும்
என்றதுகேட்டு யிறக்கினான்காவடியை
இறக்கினானேகாவடியைத் தீர்த்தக்குப்பிதானெடுத்து
மாதுகளைதெளிய வார்க்கலுற்றான்தீர்த்தமதை
தாகந்தெளிவதற்குத் தண்ணீருந்தான்கொண்டுவந்து
கடுகவந்தவர்ச்சுனனுங் காவடியைத்தோளில்வைத்து
காற்றாய்ப்பறந்துமல்லோ கரியமால்பக்கம்வந்தான்

மாயன்பெருமாளே வார்த்தையொன்றுநீர்கேளும்
களைபட்டிருந்தாளே கன்னியிளங்கொடியாள்
தண்ணீரையான்கொடுத்துத் தாகவிடாய்தீர்த்துவந்தேன்
மாலைதரிப்பதெப்போ மணமுகூர்த்தஞ்செய்வதெப்போ
தாலிதரிப்பதெப்போ சுவாமிபெருமாளே
என்றுதெளிந்தடுமோ எக்காலஞ்செல்லுமோதான்
அல்லியின்மேல்சிந்தைகொண்டு அலைகிறானர்ச்சுனனும்
மாதுமேற்சிந்தையாய் மயங்குகிறானர்ச்சுனனும்
மாயன்பெருமாளு மலைராமரேதுசொல்வார்

ஸ்ரீகிருஷ்ணபகவானும் அருச்சுனனும் மாறுவேடங்கொண்டு தண்ணீர்ப்பந்தல் வைத்தது.

அத்துவானகானகத்தி லாரணியந்தன்னிலேதான்
தண்ணீர்ப்பந்தல்போடுகிறார் சுவாமிபெருமாளும்
வெந்நீர்குளிர்ந்தநீர் மோர்களும்வைத்தார்கள்
கொள்ளுந்தண்ணீர்வைத்தார் குளிர்ந்தஜலம்வைத்தார்கள்
தண்ணீர்ப்பந்தல்வைத்தபின்பு சுவாமியென்னவடிவெடுத்தார்
காய்க்கும்பிராயமவள் கன்னிகட்கும்பாவனையாம்
பூக்கும்பிராயமவள் பிஞ்சுவிடுங்காலமவள்
கொஞ்சம்வயதல்லவோ கொழுந்தெல்லாம்பிஞ்சுகண்டீர்
சோலையிலேசந்திரனைச் சுழற்றிப்பிடித்ததுபோல்
ஈழத்துத்தச்சனவ னெழுதிவரவிட்டானோ
வேறில்பவளமது மின்னுகிற காந்தியைப்போல்
மின்னற்கொடிபோலே மேகவர்ணர்வடிவெடுத்தார்
அழகுதுலங்குவது ஆனந்தங்கொஞ்சுகிறதும்
வடிவுதுலங்குவது மாணிக்கங்கொஞ்சுவதும்
இந்தவிதமாக எம்பெருமான்வடிவெடுத்தார்
அருச்சுனராசதுரை அவரென்னவடிவானார்
தொண்ணூறும்பத்துஞ்சென்ற துவண்டகிழவனைப்போல்
பண்ணைப்பூபோலாக பழுத்தகிழவனானார்
நாணற்பூப்போல நரைத்தகிழவனானார்
தோலும்நரம்புகளும் தொங்குதுகிழவனுக்கு
ஒருகண்கொள்ளைக்கண் ஒருபக்கம்நொண்டிக்கால்
ஒருகைமொண்டிக்கை யொருபக்கம்சாய்ந்தவுடல்
இந்தவிதமாக இளவிசையன்வடிவெடுத்தான்
தண்ணீர்ப்பந்தலுக்குள்ளாகத் தானிருந்தாரிருவர்களும்
படிசொம்புகைபிடித்துப் பிராமணத்திமுன்னிருந்தாள்
அல்லிப்பெருமாளும் அவளுடையசேனைகளும்
அத்துவானகானகத்தில் அந்தவழிவாரார்கள்
மிகவேட்டையாடியல்லோ வெளிப்பட்டுவாரார்கள்
கண்டாளே தண்ணீர்ப்பந்தல் கன்னியுள்ளேவந்தாளாம்

வந்திறங்கினார்கள் வர்ணலட்சம்சேனையெல்லாம்
அத்தண்டசேனைகளும் அனைவோரும்வந்தார்கள்
சக்கரக்கனைகளுமே சகலரும்தான்தெளிந்தார்
அல்லிப்பெருமாட்கு ஆசனங்கள்போட்டார்கள்
ஆசனத்தின்மேலாக அமர்ந்தாளேயல்லியம்மாள்
பிராமணக்கன்னியென்னும் பெண்ணரசைத்தான்பார்த்து
ஆர்காணுங்கன்னியரே அலங்காரப்பெண்மயிலே
எந்தவூரெந்ததேசம் எங்கிருந்துவந்தீர்காண்
அத்துவானகானகத்தில் ஆர்வைத்தார்தண்ணீர்ப்பந்தல்
பிராமணப்பெண்ணழகி பொற்கொடியாளேதுசொல்வாள்
என்பாவம்பெரிதுகண்டீர் பத்தினியேதுசொல்வேன்
தெய்வலோகம்வாழுகின்ற தெய்வப்பிராமணத்தி
நான்-வாழும்பெருமையது மகிழ்ச்சிகள்மெத்தவுண்டு
ஆண்டிப்பரதேசி அமுதுக்குவந்தார்கள்
அள்ளிப்பதரையிட்டு அனியாயம்பண்ணதோஷம்
சாணிதிரண்டுவந்து சாணங்கள்போட்டதோஷம்
ஆதிசிவன்சந்நிதிமுன் அழகாய்வளர்ந்ததுகாண்
மகாதேவர்சந்நிதிமுன் மலையாய்வளர்ந்ததுகாண்
சாணிமலையதுதான் சதிராய்வளர்ந்ததுகாண்
பிட்டுத்திருநாளுக்குப் புறப்பட்டார்சொக்கலிங்கம்
முப்பத்துமுக்கோடி முனிவர்களுந்தேவர்களும்
வானவருமிந்திரரும் மகாதேவர்தான்முதலாய்
கைலாசஞ்சுற்றியல்லோ வருகிறவேளையிலே
சாணிமலைதனைச் சங்கரனார்கண்டுவிட்டார்
என்னாலேவந்ததொரு இடறுகளைத்தாமறிந்தார்
பொல்லாதசாபமிட்டுப் பூமியிலேபோங்களென்றார்
சாபந்தொலைவதற்குத் தண்ணீர்ப்பந்தல்வைத்தேனம்மா
அண்ணனில்லை தம்பியில்லை அனுசரிக்கயாருமில்லை
தாய்வீட்டுச்சனங்களில்லை தாபரிக்கயாருமில்லை
மாமிவீட்டுச்சனங்களில்லை மற்றுமனிதரில்லை
தாண்டிநுழைவதற்குத் தாழ்வாரமில்லையம்மா
எட்டிநுழைவதற்கு எரவானந்தானுமில்லை
வாவென்றழைப்பதற்கு மனிதரொருவரில்லை
தோலுநரம்புகளுந் தொங்கிற்றுகிழவனுக்கு
மாளுங்கிழவனுக்கு மாலையிட்டேனென்னாச்சி
இந்தக்கிழவனுந்தா னிறந்துமடியவில்லை
பாவந்தொலையவில்லை பத்தினியேயென்னசெய்வேன்
ஏவல்பணிசெய்து எங்கேயாகிலும்பிழைப்பேன்
அவ்வார்த்தைதான்கேட்டு அல்லியம்மாளேதுசொல்வாள்
எந்தனுக்குத்தோழியாக எனக்கருகில்நீயிருந்தால்

சகலமானபாக்கியமுஞ் சம்பத்துந்தருவேனென்றாள்
கூடவருவாயோ கொம்பனையேயென்றழைத்தால்
எப்படிவருவேனம்மா யிளங்கொடியேயுன்பிறகே
இலக்குமிநோன்பதுதான் நாளைவருகுதம்மா
நோன்புமுடிக்கவேண்டும் நீதியுள்ள தாயாரே
என்றைக்குமுன்னடிமை யாகவிருக்கின்றேன்யான்
மகுடத்துரைச்சியவள் மாதருமேதுசொல்வாள்
எந்தனரண்மனையி லுன்னிடநோன்புதனை
குறையாமற்செய்துவைப்பேன் கொம்பனையேயென்தோழி
வேணுமென்றசாமான்கள் மெல்லியரேநான்தருவேன்
வாருமம்மாவென்றுசொல்லி வருந்தியழைக்கலுற்றாள்
இந்தமூடவனைநான் எங்குபோட்டுவருவேனம்மா
தோளிலேபோட்டவரைத் தூக்கிவரச்சொல்லுமென்றார்
பல்லக்கிலேறினாள் பத்தினியாளல்லியம்மாள்
கிழவனைத்தூக்கிவந்து தோளிலேபோட்டார்கள்
தோழிமாருள்ளவர்கள் தூக்கியெடுத்தார்கள்
காடுசெடிதாண்டி கடுகிவருகிறார்கள்
ஆறுசுனைதாண்டி அதிகவனந்தாண்டி
மதுராபுரிப்பட்டணத்தில் மகிழ்ச்சியுடன்வாரார்கள்
தெத்துத்தெருகடந்து தேரோடும்வீதிவிட்டு
மாளிகைவாசலிலே வந்தாளேயல்லியம்மாள்
கனகதண்டிவிட்டிறங்கி கன்னியரும்போகலுற்றாள்
இந்தக்கிழவனையும் இவ்வாசல்வையுமென்றார்
ஐந்தாங்கட்டுவாசலிலே ஆரியனைவையுமென்றாள்
அப்போபிராமணத்தி அரிராமரேதுசொல்வார்
தனியாகவிட்டுப்போகத் தரிக்குமோவென்மனது
மூடவனைநான்விட்டுவிட முறையல்லவெந்தனுக்கு
அவராலேயென்னகுற்றம் ஆச்சிவரட்டுமென்றாள்
அல்லிப்பெருமாளும் அரண்மனையிற்போய்ப்புகுந்தாள்
முத்துச்செம்பொன்வாசலது மூன்றுகட்டுந்தான்தாண்டி
ஆசாரவாசலது அரண்மனைபோய்ச்சேர்ந்தாள்
அந்தியனுஷ்டான மனைத்துமேதான்கழித்து
போசனச்சாலையிலே புகுந்தாளேமாதுகன்னி
பிராமணக்கன்னியர்க்கும் அவளுடையபுருஷனுக்கும்
அமுதுபடியரிசி ஆனதெல்லாங்கொடுங்களென்றாள்
அந்திக்காலமாச்சுதங்கே ஆதித்தன்போய்மறைந்தான்
போசனங்களுண்டவர்கள் பொற்கொடிமார்பள்ளிகொண்டார்
மற்றுநாட்காலையிலே கதிரோனும்வந்துதித்தான்
திங்கட்கிழமையது தசமிபுனர்பூசம்
அன்றையத்தினமதிலே அரிராமரேதுசொல்வார்

அல்லிப்பெருமாளே அரசிதுரைநாயகமே
விரதமுடிக்கவேண்டும் எந்நோன்புதீரவேண்டும்
சாலங்காரகமது தையலரேவேண்டுமென்றாள்
வேணுமென்றசாமானை வாங்கிக்கொண்டாள்பிராமணத்தி
தேவையுள்ளவஸ்துவையெல்லாஞ் சேகரித்துக்கொண்டவளும்

அர்ச்சுனன் அல்லியம்மாளுக்குச் சூதாகத்தாலிகட்டி விருதறுத்துப் போனது.

பந்தக்கால்நட்டுமல்லோ பந்தலலங்கரித்து
பச்சோலைபந்தலது பாங்காயலங்கரித்து
நிலத்தைமெழுகியல்லோ மாவாலேகோலமிட்டார்
சாலங்காரகமுமே சதுராய்நிறுத்திவைத்தார்
பாலிகைவைத்துமல்லோ பாங்காய்முளைதெளித்தார்
அரசாணிக்கால்நட்டு அம்மிகுழவிவைத்தார்
அந்திக்காலமாச்சுதங்கே ஆதித்தன்போய்மறைந்தான்
ஆயிரம்பெருவிளக்கை அழகாகஏற்றிவைத்தார்
குத்துவிளக்குங் குடவிளக்குமேற்றிவைத்தார்
மாயன்பெருமாளும் மலைராமரேதுசெய்தார்
அத்தண்டதோழிகட்கும் அல்லிப்பெருமாட்கும்
மயக்கந்தையுண்டுபண்ணுர் மாயன்பெருமாளும்
மூதேவிதனையழைத்து முகத்தில்நிறையுமென்றார்
வந்துநிறைந்தாளே வாடயிட்டாள்மூதேவி
சொரணைதப்பித்தோழியர்கள் சோர்ந்துபடுத்தார்கள்
அப்போபெருமாளும் அர்ச்சுனனைத்தானழைத்து
ஓமம்வளர்த்துமென்றார் உலகளந்தமாயவரும்
வேதங்கள்தப்பாமலே வேள்விவளர்த்திறார்கள்
ஐயன்பெருமாளும் அருளாளரேதுசொல்வார்
தேவேந்திரனையல்லோ சிந்தையிலேதானினைந்து
அர்ச்சுனராசனவன் அல்லியரைமணம்பொருந்த
மணமுகூர்த்தஞ்செய்வதற்கு மங்கிலியம்வேண்டுமம்மா
யானைத்தலைபோலே அழகானமங்கிலியம்
தும்பிக்கையாலே திருமங்கிலியச்சரடு
மாயத்திருநீறும் வரவனுப்பவேண்டுமென்று
தோத்திரம்செய்தாரே ஸ்ரீராமரெம்பெருமாள்
இந்திரனப்போது இருதயத்திற்றானறிந்து
உள்ளமகிழ்ந்துமல்லோ உம்பர்பிரானிந்திரனும்
யானைத்தலைபோலே அழகானமங்கிலியம்
தும்பிக்கைபோலே திருமங்கிலியச்சரடும்
மாயத்திருநீறும் மகிழ்ச்சியுடனெடுத்து
தூதன்கையிற்கொடுத்து ஸ்ரீராமர்கைகொடென்றார்
வாங்கியந்தத்தூதன் மாயவனார்கைகொடுத்தான்

ஆயாவர்வாங்கியல்லோ அருச்சுனனார்கைகொடுத்தார்
லக்கினமுந்தப்பாமல் நல்விசையன்கைகொடுத்தார்
தாராபலன்பார்த்துத் தரியுமென்றார்மங்கிலியம்
மாயரிடதன்பாதம் வணங்கியந்த அர்ச்சுனனும்
ஈஸ்வரரைப்பார்வதியை இருதயத்தில்தானினைந்து
பிட்டுக்குமண்சுமந்த புனிதரைத்தானினைந்து
தேவேந்திரபகவானைச் சிந்தையிலேதானினைந்து
அல்லியென்னும்பெண்ணரசி ஆரணங்குதன்கழுத்தில்
சிவசாமியென்றுசொல்லித் தேர்விசையன்கட்டலுற்றான்
அரகராவென்றுசொல்லி அழுத்தினான்மங்கிலியம்
பிரமமுடிமூன்றுமுடி போட்டானே அர்ச்சுனனும்
ஈஸ்வரனார்வெண்ணீற்றை இட்டானேநெற்றியிலே
மாயன்பெருமாரும் வரமென்னதான்கொடுப்பார்
இந்தமங்கிலியந்தன்னையவன் வாள்கொண்டறுத்தாலும்
கோடாலியாலேயிவன் கொத்திப்பிளந்தாலும்
இரம்பத்தைப்பூட்டியிவள் நலமாயறுத்தாலும்
கத்திகொண்டறுத்தாலுங் கட்டழகிமங்கிலியம்
அறுமலிருக்கவென்று அரிராமர்வரமளித்தார்
அருச்சுனரைக்கூட்டிக்கொண்டு அரிராமர்தானடந்தார்
பத்துசுற்றுக்கோட்டைகளும் பார்த்திபன்தாண்டிவந்து
மஞ்சட்கொடிகளுமே மகுடரத்னதோரணமும்
பொம்மைவிருதுகளும் பூதத்தலைகளுமே
அல்லிக்கொடிவிருதும் அறுத்தெறிந்தானருச்சுனனும்
முச்சுகொட்டாக்கொடிவிருதை மூனைவீரன்தானறுத்தான்
கிருஷ்ணபகவானும் அர்ச்சுனனும் தருமாபுரம் வந்துசேர்ந்தது.
வீராதிவீரன்தம்பி விசையன்வெளியானான்
மாயனுந்தானுமாக வழிநடந்துபோனார்கள்
மதுராபுரிகடந்து வனமாய்வனங்கடந்து
காடுசெடிதாண்டி கரியமலைதான்தாண்டி
ஆறுசுனைதாண்டி அதிகவனந்தாண்டி
பொல்லாவனந்தாண்டி போய்ச்சேர்ந்தார்தர்மாபுரம்
மாளிகைவாசலிலே வந்துசேர்ந்தாரிருவருமாய்
பொற்கோழிகூவியல்லோ பொழுதுவிடிந்ததுகாண்
சுக்கலாதேவிபுத்திரன் சூரியனும்வந்துதித்தான்
அருணனிடதேரேறி ஆதித்தன்வந்துதித்தான்
தோழியருந்தாதியர்கள் தூக்கம்விழித்தார்கள்
அத்தண்டதோழியர்கள் அனைவருங்கண்விழித்தார்
பாங்கியினும்நல்லதொரு பவளசேனையேதுசொல்வாள்
அல்லிப்பெருமாளின் அருகாகவந்தார்கள்
தட்டியெழுப்பினார்கள் தாமக்குழலாளை

அல்லியம்மாள் மங்கிலியத்தைக்கண்டு பாதவிக்கிறது.

கழுத்திலேமங்கிலியம் கண்டாளே அல்லியம்மாள்
அத்தண்டதோழிகளும் அனைவோரும்வந்தார்கள்
முடாப்போலேதாலியது முன்மார்பில்தொங்குதங்கே
கண்டுவிழுந்தாள் கட்டழகியல்லியரும்
பார்த்தப்பதங்குலைந்தாள் பத்தினியாளல்லியம்மாள்
இங்கிருந்தபாப்பாத்தி எங்கேபோனாள்பாருமென்றாள்
தேடிப்பிடித்துநீங்கள் சீக்கிரமாய்ப்பாருமென்றாள்
எங்கெங்குந்தேடி யினியவிடமாராய்ந்தார்
எண்ணதுமென்னியல விடிவிழுந்தாளல்லியம்மாள்
கத்தியெடுங்களடி கடுகஅறுக்கவென்றாள்
கத்திகொண்டறுத்தாலும் கத்தியொடியுதங்கே
இறம்பங்கொண்டறுத்தாலும் நாலுதுண்டாய்ப்போகுதங்கே
வாள்கொண்டறுத்தாலும் வாளுமடியுதங்கே
மெத்தவிசாரமிட்டு மெல்லிபுலம்புறாள்
கட்டினவிருதறுத்துக் கழுத்திலேதாலிகட்டினதார்
ஆரென்றறிவேண்டி ஆரணங்கேபவளசேனை
எவரென்றுயானறியேன் ஏலப்பசுங்கிளியே
ஆராயிரம்பாண்டியரை யழைத்தோடிவாங்கென்றாள்
பொன்னின்மலைநாடாளும் பேரெடுத்த அண்ணரையும்
அழைத்தோடிவாருமென்று அனுப்பினாள் தாதியரும்
ஒட்டம்பெருநடையாய் ஓடிவந்தார்தாதியர்கள்
ஆறாயிரப்பாண்டியர்க்கும் அண்ணருக்குமேதுசொல்வாள்
மாதுகன்னியல்லியரை மங்கிலியஞ்சூட்டினார்கள்
கட்டினவிருதுகளைக் கடுகவறுத்தவர்கள்
அல்லிப்பெருமாளும் அழைத்தோடிவாருமென்றாள்
வாருங்களையாவென்று வணங்கினார்தாதியர்கள்
அலைகுலையத்தலைகுலைய அரைப்புடவைநழுவிவிழ
அல்லியிடவாசலுக்கு அனைவோரும்வந்தார்கள்
மகளாரைக்கண்டலவோ வயிறெரிந்துதானழுதார்
ஐயோமகளேஉன்னை அநீதம்பண்ணவனார்
யானைத்தலைபோலே அழகானமங்கிலியம்
முடாப்போலேதாலியல்லோ முன்மார்பில்நாட்டினதார்
இதுவென்னகாரணமோ வென்றழுதார்பாண்டியர்கள்
கண்ணீரைவிட்டுமெல்லோ கதறிப்புலம்புகிறார்
மருட்டுத்துரைச்சியவள் வாய்திறந்தேதுரைப்பாள்
வயிற்றிற்பிறந்ததில்லை வன்கொடுமைசெய்ததில்லை
குடலிற்பிறந்ததில்லை குலக்கொடுமைசெய்ததில்லை
அங்கயற்கண்கிருபையாலே அல்லியிலேபிறந்தேன்
சொக்கர்கிருபையாலே சுந்தரியும்பெண்பிறந்தேன்

எழுபிராயத்திலே எதிர்த்துவந்தவீண்மூகனை
வெட்டித்துணித்துநான் வீரப்பட்டங்கட்டிக்கொண்டேன்
பன்னிரண்டுபிராயமட்டும் பாருலகையாண்டிருந்தேன்
கொள்ளவருவார்க்குக் குறடாகொடுப்பேனென்றேன்
ஒவ்வொருமன்னர்களாய் சோதனைதந்தார்கள்
மாயன்பெருமாளும் வந்துசத்தியம்பண்ணுரே
வெற்றிமதயானை வீமனெழுந்திருந்து
நெய்கிடாரந்தன்னருகே நேராய்வருகையிலே
அக்கினியாய்வீசியது அருகில்வரவொட்டாமல்
வெந்துகருகுகிறது வீமனதுதேகமெல்லாம்
மாயன்பெருமாளே மைத்துனரேதிருட்டுகிருஷ்ணு
முன்னிட்டகாலையவன் பின்னிட்டுவாங்கிக்கொண்டான்
என்னபுதுமையது எம்பெருமாளென்றுகேட்டான்
அருகில்வரவொட்டாமல் அக்கினியாய்வீசுதுகாண்
சேரவேவொண்ணுமல் செந்தணலாய்வீசுதுகாண்
ஒருபாவம்நானறியேன் ஏதுவினையென்றறியேன்
அக்கினிபகவானை ஆயருங்கைதொழுது
எம்பெருமாள்மாயவரும் யாரையினைக்கலுற்றூர்
ஒருநன்றிசெய்தவரை யுள்ளத்தில்வைக்கவேண்டும்
அக்கினிபகவானே அருச்சுனராசருக்கு
எத்தனைசகாயஞ்செல்தா ரெல்லாம்மறந்தீரோ
மாளுகின்றவுன்னையந்த வாழ்விசயன்காத்தானே
அந்தசகாயமல்லோ அறியாமலேன்மறந்தீர்
பெண்டுடையமன்னவன் பெண்ணரசைமாலையிட்டான்
உந்தனுக்குக்கோபமென்ன வுறத்துவானேன்செந்தணலாய்
கோபத்தைவையாதே குளிர்ந்தஜலம்போலிருங்காண்
என்றுதொழுதாரே எம்பெருமாள்மாயவரும்
ஆயரதுசொற்கேட் டக்கினிதேவரவர்
குளிர்ந்தஜலம்போலாகிக் கொப்பனவேநின்றுவிட்டார்
வாருங்காண்வீமசேனு வார்த்தைகேளும்மைத்துனரே
மாதுக்குமங்கிலியம் மதவீமாதரித்ததுண்டோ
செய்ததேயுண்டானல் சேரவரவொட்டாது
கலைகங்களுண்டானுல் கட்டழகாதுாரநில்லு
மனதிற்கபடுகளும் வஞ்சனைகளில்லையென்றால்
இராஜாக்கள்போலேநீ நம்பிக்கைசெய்யுமென்றார்

வீமராசன் நெய்குடித்துவிட்டுக் கொப்பரையுருட்டினது

மறுபடியும்வீமராஜன் மன்னவனுந்தான்வருவான்
கொதிக்கிறநெய்யருகே கொப்பெனவேவந்துநின்றுன்
பணக்கின்றநெல்லருகே மதவீமன்வந்துவிட்டான்
தூக்கினுன்கொப்பரையைத் துரிதமாய்நெய்யையெல்லாம்

வெற்றிமதயானை வீமனவன்வாயில்வைத்து
வெட்டிக்குடித்துவிட்டு கோரகவிட்டெறிந்து
தருமர்தமக்கிளைய மதவீமன்வந்துவிட்டான்
மாயனுடனே வழிபிடித்துப்போய்கடந்தார்
மதுரைத்தெருதாண்டி வனமாய்வனங்கடந்து
இத்தனைபேர் தனிலே யெவனைத்திருடனென்பேன்
ஆனைக்கோடிராஜர்களி லாரைத்திருடனென்பேன்
சத்தியங்கள்செய்தாரே தரணியுள்ளராசரெல்லாம்
கைப்பிள்ளைகைதோய்த்து செல்லீசிப்பிட்டிவிட்டார்
சோதனைகாட்டியல்லோ துரைகளெல்லாம்போனகையிலே
அந்தவேளைப்போனாக அவனுக்கைதோய்க்கவேணும்
கொதிக்கினநெய்தனையும் குடிக்கனீதிமுறையோ
திருடருக்குதெய்வமுண்டோ சோரருக்குபேயுமுண்டோ
வானஞ்சுழல்வதற்கு மருந்துண்டவன்கையில்
பூமிசுழல்வதற்கு பொடியுண்டவன்கையில்
வண்ணமருந்தெடுத்துத் தண்ணீர்துரைக்கலையோ
வம்புதும்புபேசியவன் வாய்பழுதுசொல்லலையோ
ஆற்றில்பிரட்டியல்லோ அவனைத்தான்கொல்லுமென்றேன்
அவனுடையமந்திரத்தா லாற்றைத்தடைகட்டலையோ
தூக்கிலேபோட்டவனைத் தோழியரைக்கொல்லுமென்றேன்
தாதியரைக்கொன்றுவிட்டான் தந்திரவித்தையினால்
சாவியமன்கோவிலுக்குக் காவுகொடுக்கவென்றேன்
வடவாசல்செல்லியரை வாய்த்தடைகட்டிவிட்டான்
பண்டாரப்போலேவந்து படம்பிடித்தான்வாசலிலே
வம்பானவார்த்தைகளும் வாய்பழுதுசொன்னனே
ஆயத்தைவிட்டொ றண்டியைக்கொல்லுமென்றேன்
பாம்பைத்தடைகட்டினனே பாதகனவனும்
யானையைமதமேற்றி ஆண்டியைக்கொல்லுமென்றேன்
வேதியனைப்போலாக வேள்விவளர்த்தினனே
மறையவனைப்போலேவந்து மங்கிலியஞ்சூட்டிவிட்டான்
செய்யைக்குடிக்கவன் வகையறியமாட்டேனே
மாயாளவித்தைகளும் மந்திரமுங்கற்றபாவி
எந்தவூர்ராஜாவோ எனக்கறியச்சொல்லுமென்றாள்
தர்மபுரமாளும் தருமர்தம்பியென்றார்
அவ்வார்த்தைதான்கேட் டல்லிப்பெருமாளும்
எட்டிப்பழம்போலே இருகண்ணுந்தான்சிவந்து
உருக்கியசெப்பொன் உதிரம்போல்கண்சிவந்து
தர்மபுரமுள்ளதெல்லாம் தவிடுபொடியாக்கி
தங்கமதில்கோபுரத்தை தரையோடேசாய்த்திடுவேன்
ஆமணக்கும்பருத்தியுமா யடங்கலும்விரைத்திடுவேன்

ஆண்சிறையும்பெண்சிறையு மடக்கலும்நான்பிடிப்பேன்
பவனைப்பவனென்று பவனபேர்போச்சுமென்றாள்
வெட்டியானைத்தானழைத்து வீரமுரசறையுமென்றாள்
ஆறுபிரம்பாண்டியர்கள் அடங்கலும்பவனமானார்
இன்றுவெளிக்கூடாரம் மியலுடனேபோடுமென்றாள்
சண்டாளமைநாட்டுமென்றாள் சமுசைபடையுமென்றாள்
அப்போதுசாம்பவனும் யானையேறிமாலைகூடி
அடித்தான்பறையோசை அம்மதுரைதானறிய
மதுரைப்பட்டணங்களெல்லாம் வாருங்களென்றுசொல்லி
ஆயுதங்கட்டியல்லோ அனைவோருவாருமென்று

அல்லியரசாணி பஞ்சபாண்டவர்பேரில் சண்டைக்கு வருகிறது.

மதுரைப்படைகளுமே மாசனங்களெல்லவரும்
எண்ணூறுஆயுதத்தை எடுத்தரையிற்கட்டிக்கொண்டு
அமாதரும்சமரதரும் அதிரதாளவரும
கலிங்கர்தெலுங்கர்களும கன்னடியாளவரும்
ஈழத்துவங்கணரும் இளநாட்டுச்சோனகரும்
ஆரியரும்மாரியரும் அலைமலைத்துநாடர்களும்
உடையவரும்சூதகரும் மொட்டையரும்பார்ப்பாரும்
கிட்டிமன்னர்தேசமன்னர் உரைமன்னர்போர்மன்னர்
குறவர்மறவர்களும் குச்சிலியருள்ளவரும்
வேடரும்வில்லியரும் வேணசெனமுள்ளவரும்
ஆயுதங்கள்கட்டியல்லோ அநேகசனம்வந்தார்கள்
பட்டயஞ்சூரியர்கள் பாரியவிச்சமுதாடு
சிமையில்சுடும்குண்டுகளும் சேரிசமாயபெரியகத்தி
கூலிசமும்குலிசமும் குண்டுதுப்பாக்கிகளும்
மண்வெட்டிகோடாலி வல்லயம்திருப்புலக்கை
வாளுகளும்வேலுகளும் வளைதடிசக்கரமும
கண்டகோடாலிகளும கவண்டுகளுண்டுவில்லும
சிங்காணிப்பூச்சவில்லும் சேனைவிதஆயுதமும்
இரம்பமும்பாசங்களும் காலேடிவாயிதமும்
எண்ணூறுதவாயுதத்தை எடுத்தரையிற்கட்டினார்கள்
சட்டைதமானவச்சிரப்பாய் தரித்தார்களெல்லவரும்
சண்டைக்குமுன்நிற்பாய்ச் சமர்த்தரெல்லாம் வருகிறார்கள்
வந்துநிறைந்தார்கள் வளம்பெரியசேனையெல்லாம்
யானைகளோஆறுலட்சம் அசுவங்களேழுலட்சம்
ஒட்டகமோபத்துலட்சம் ஒன்றாகக்கூடினார்கள்
கார்மேகம்போலாகக் கருத்தானைக்கூட்டமவரும்
செவ்வானம்போலாகச் செவந்தபரிகளும்
வந்துநிறைந்தார்கள் வாழ்வரசியல்லிபண்டை
பொன்னின்மல்லநாடாளும் பேரெடுத்தஅன்றைவை

அன்னுலைத்தானைழைத்து ஆளுமென்ருள்பொன்மதுரை
வென்றுகெலித்துநான் விருகட்டிவருமளவும்
செயித்துவருமளவும் தென்மதுரையாளுமென்ருள்
முத்துப்படித்துறையும் முனைவீரர்பட்டறையும்
யானைபடித்துறையு மடங்களும்பதணமென்ருள்
பவளப்படித்துறையும் பட்டணம்பார்த்திருங்கள்
கப்பற்படித்துறையுங் கடற்சோங்கும்பத்திரங்கள்
ஜெயித்துவருமளவும் சீர்மதுரையாளுமென்ருன்
படைப்பயணமென்று பயணபேரியடியுமென்ருள்
அம்பெடுத்து வில்லெடுத்து அம்புருத்தாணிமுதுகணிந்து
சக்கரப்பயணமென்று எறினர்தேர்மேலே
வானத்துமேகங்கள் மணிரதங்கள்வருகிறது
ஆயிரந்தேரும் அணியணியாய்வருகிறது
சொக்கலிங்கந்துணையென்று தேரைநடத்தினர்கள்
அச்சுகிறுகிறென்ன யானைநெடுந்தோசைய
வண்டில்கிருச்சுமிட மதயானைகோஷ்டமிட
முதிரையனுமானிக்கக் கோடிமன்னர்சத்தமிட
வெய்யலுக்கெடுத்தார்கள் வெள்ளைநல்ல கூடாரம்
காணலுக்கெடுத்தார்கள் கருப்புநல்லகூடாரம்
கருப்புச்சான்செகப்புச்சான் கலந்துபறக்குதுபார்
அல்லிக்கொடிவிருது அலைகிறதுதோள்மேலே
மஞ்சட்கொடிபறக்க மகரதோரணமசைய
வருகிறதேதூசிபலம் மண்ணிலிடங்கொள்ளாமல்
ஆற்றுமணல்போலே யனேகங்கோடிசேனைகளும்
மேகம்புரண்டாப்போல் வேணசனங்கள்வரும்
காட்டுகளாப்பூவும் காளாம்பூத்ததுபோல்
சுற்றிக்குடைபிடித்தார் சூரியன்தோற்ருமல்
பக்கங்குடைபிடித்தார் பகவானைக்காணமல்
செத்துவொழுப்பினதே சூரியனைக்கப்பிற்றங்கே
அடிபடுதேபேரிகை வந்தரந்தாணதிர
யானையின்மேல்பேரிகை குதிரையின்மேல்டங்காவும்
ஒட்டையின்மேல்நகபத்தும் ஓசையெழுப்பினதே
வெண்கலப்பேரியது விருதுமுழங்கியதே
பாஞ்சசன்னியத்தேவதத்தம் பலவிருதுதான்முழங்க
தச்சரிகைவீணைளும் தாக்கிமுரசசைய
ஒற்ருவாசல்சங்கமது ஊதுகிருருலகதிர
மதுராபுரியைவிட்டு வனநாட்டிற்போகலுற்ருர்
காடுசெடிதாண்டிக் கரியமலைதான்தாண்டி
ஆறுஞ்சுனைதாண்டி அதிகவனந்தாண்டி
வேங்கையடர்ந்தவனம வெண்களாப்பூத்தவனம்

அண்டரறியாத இருண்டவனந்தாண்டி
தருமாபுரிபட்டணத்தை தானடுத்தாளல்லியம்மாள்
பட்டணத்தைச்சுத்திக்கொண்டு பாளையஞ்சூழ்ந்தாளே
பஞ்சவர்கள் கூடாரம் பலதிசையும்போட்டார்கள்
இலட்சணைபோட்டாளே இராசாத்தி அல்லியம்மாள்
ஜண்டாவைநட்டார்கள் தமுறடித்தார்பாளையத்தில்
அடிபடுதாரயபேரி அடிவானத்திடிபோலே
கோடைகாலத்திடிபோலே தமுறுதோரயபேரி
செவ்வானத்திடிபோலே சோமுழங்கிறதே
சத்தத்தொனியதுதான் தருமரவர்கேட்டுவிட்டார்
ஊரிலுள்ளஜனங்களெல்லாம் ஓடிவந்துபலப்பலுற்றார்
சந்தனவடிவழகர் தருமலிங்கமகாராஜர்
வெற்றிமதயானை வீமனைத்தானழைத்தார்
நகுலசகாதேவ ராஜர்களைத்தானழைத்தார்
மாயன்பெருமாளை மனதிலேதானினைத்தார்
அடியளந்தமாயவரே ஆதிமூலம்வாருமென்றார்
வாருமென்றபோதே வந்தாரெம்பெருமாள்
சந்தனவடிவழகர் தருமருக்குச்சரணஞ்செய்தார்
கூடச்சரணஞ்செய்தார் கோபாலமாயவரும்
என்னையழைத்தது தானேது கருமமென்றார்
பட்டணத்தைச்சுற்றியல்லோ பாளையங்கள்வந்ததுகாண்
கோட்டையைச்சுற்றியவர் முத்திரைபோட்டார்கள்
சண்டைபண்ணவாருமென்று தமுருமடித்தார்கள்
சண்டைசிஜாமிட்டார்கள் தண்டுவந்திறங்கினதே
எந்தவூராசாவோ எதுமறியேனே
ஆளோடேவிட்டுநீங்க ளறிந்துவரச்சொல்லுமென்றார்
ஆர்க்காரொருவனைத்தா னனுப்பினார்மந்திரியை
வந்தவராரென்று வார்த்தையறியுமென்றார்
ஒற்றொளொருவனவன் ஓடினான்மந்திரியும்
பாண்டியர்களெதிரில்வந்து பார்த்துடனேதெண்டனிட்டு
எந்தவூராசரையா எதற்காக வந்தீர்கள்
சண்டைபண்ணவந்ததொரு வயணமென்னராசர்களே
சொல்லுங்களையாவென்று தெண்டனிட்டார்வந்தவர்கள் ;
மந்திரியுங்கேட்கையிலே மகாராசரேதுசொல்வார்
மதுராபுரியாளும் வாழ்வரசியல்லியற்கு
காணாமல்மங்கிலியம் கட்டினானவள்கழுத்தில்
பொய்சத்தியப்பண்ணியல்லோ புகழ்வீமன்வந்துவிட்டான்
ஆகையினாற்சண்டைசெய்ய அநேகதளங்கூட்டிவந்தோம்
சண்டைபண்ணிகெலிக்கச்சொல்லும் சாமர்த்தியராசர்களை
வந்தாலேயாச்சுது வாராமலிருந்தாக்கால்

வாளை-கோட்டையிடித்திடுவோம் கொத்தளங்கள்பேர்த்திடுவோம்
ஆயனைக்கும்பருத்திகளும் அமரவிளைத்திடுவோம்
ஆண்சிறையும்பெண்சிறையும் மடங்கலும்பிடித்திடுவோம்
கூசலார்சொல்லும் கட்டழகராசர்களை
அவ்வார்த்தைதான்கேட்டு அழகான தூதுவர்கள்
சந்தனவடி வழகர் தர்மரண்டைவந்துவிட்டார்
வணங்கிநமஸ்கரித்து மந்திரியுமேதுசொல்வார்
மதுராபுரியாளும் வாழ்வரசிகன்னியர்க்கு
தாறுமல்மங்கிலியம் கட்டினாராமவள்கழுத்தில்
பொய்சத்தியம்பண்ணியல்லோ வந்தாராம்புண்ணியரும்
ஆகையினாலேதா னல்லிதளங்கூட்டிவந்தாள்
சண்டைக்குவந்தாளே தருமதுரைராசாவே
கோட்டைபிடிப்பேனென்றாள் கொம்பைப்பறிப்பேனென்றாள்
சண்டைக்குவரச்சொன்னாள் தருமலிங்கராசாவே
என்றுசாணமிட்டா ளியலான தூதுவனும்
தக்கப்புகழுடைய தருமராதுதான்கேட்டு
மாயன்பெருமாளின் மதிமுகத்தைத்தான்பார்த்து
கதயிளங்கொடிக்குச் சத்தியஞ்செய்யவென்று
தென்மதுரைப்போனீர்களே செய்தியென்ன சொல்லுமென்றார்
அருள்மைந்தர் தருமருக் கரிராமரேதுசொல்வார்
மண்டலத்துராசாக்கள் வந்துசத்தியம்பண்ணார்கள்
கொதிக்கின்றநெய்தனிலே கொப்பெனவேகைவைத்து
வெற்றிமதயானை வீமனவனேதுசெய்வான்
சத்தியங்கள்செய்யாமல் தாமந்தவாழ்பார்பன்
கொதிக்கின்றநெய்யதனைக் கொப்பரையோடெடுத்து
நெய்யைக்குடித்துவிட்டு கொப்பரையையுருட்டிவிட்டான்
மதப்பட்டவீமன்செய்த வல்லமையினாலிப்போது
சண்டைக்குவந்தாளே சாமர்த்தியமுள்ளகன்னி
சண்டைபண்ணவந்தவளைச் சற்றும்விடலாகாது
சண்டைகளைச்செய்யவேணுஞ் சாமர்த்தியமுள்ளகன்னி
வந்தசண்டைவிடலாமோ வளம்பெரியதர்மரேசொல்
பின்னுக்கிடைந்தாளே விடுவாளோபெண்ணரசி
வென்றுஜெயிக்கவேண்டும் வீரபட்டஞ்சூட்டவேண்டும்
அவ்வார்த்தைதான்கேட் டருண்மைந்தரேதுசொல்வார்
ஆரையனுப்பிடுவோம் அமரதுசெய்யவென்றால்
எவரையனுப்புவோம் எம்பெருமாள்சொல்லுமென்றார்
நகுலசகாதேவ ராஜாக்கள்தங்களையும்
வெற்றிமதயானை வீமனையனுப்புமென்றார்
நால்வருடனுகை வெகுசனங்கூட்டுமென்றார்
நானுங்கூடப்போறேன் ராசாவேயஞ்சாதே

வென்றுஜெயித்து நான் வெளிப்பட்டுவருவேனென்றார்
மனதுக்கிசைந்தபடி மாயவரேசெய்யுமென்றார்

பஞ்சபாண்டவர் அல்லியோடு சண்டைக்குவருகிறது.

தர்மாதுசேனைகள் சகலஜனர்வாருமென்றார்
இன்றுவெளிகூடார மியலுடனேபோடுமென்றார்
சண்டைமுரசறையுமென்றார் சண்டைக்கொடிகாட்டுமென்றார்
பாளையங்களுள்ளதெல்லாம் பயணங்கள்சொன்னார்கள்
ஆரடாதேர்ப்பாகா அலங்கரியும்தேரையென்றார்
தேர்ப்பாகனோடிவந்து தேரையலங்கரித்து
ஆறுவண்டிநூறுசட்ட மழகான குத்துக்கால்
குத்துக்கால்சொப்பனிட்டு கொடுங்கைதிரைவளைத்து
கும்பக்கலசமது கொடுங்கையலங்கரித்து
தேரையலங்கரித்துத் தோப்பாகன்கொண்டுவந்தான்
அழகான சிலையினால் அலங்காரம்பண்ணினானே
நாலுபக்கஞ்சாலர்களும் நவரத்னதோரணமும்
கண்ணாடிசல்லிகட்டி கவரிமான்சுங்குவிட்டு
ஐந்துகொத்தாராய்ச்சி யழகுமணிகட்டினானே
நவகண்டவீரமணி நான்குபக்கங்கட்டினானே
வாழைமரங்கட்டியே மகமேரலங்கரித்து
நான்குபுரவிகளை நன்றாய்க்குளிப்பாட்டி
பாராசாரிபுரவியொன்றும் பஞ்சகலியாணியொன்றும்
தேசிரெணிப்புரவியொன்றும் சிலாத்னபுரவியொன்றும்
நாலுகால்வண்டயமாம் நடுக்கழுத்தில்கொலுசுகளும்
முன்னலேசுட்டிகளும் பின்னலேகுச்சிகளும்
மாணிக்கக்கடிவாளம் வாயிற்கொடுத்தானே
நான்குகுதிரைகளை நன்றாயலங்கரித்து
தேரின்மேலேறினானே சீக்கிரமாய்ப்புரவிகளை
சாய்ந்திருந்துசண்டைசெய்ய சார்மணைபோட்டானே
குந்தியேசண்டைசெய்ய குறிஞ்சிபூமேடையிட்டானே
ஒளிந்திருந்துசண்டைசெய்ய ஒருகுகலையணிகளிட்டான்
சந்தனப்பொட்டுமிட்டு சாம்பிராணிதூபமிட்டான்
தேரையலங்கரித்துத் தேர்ப்பாகனோடிவந்து
அலங்கரித்தேனென்றுசொல்லி யடிவணங்கித்தெண்டனிட்டான்
வெற்றிமதயானை வீமனவனெழுந்து
நகுலசகாதேவ ராசரவரெழுந்து
ஆயர்பெருமாளு மரிராமர்தானெழுந்து
மகுடமணிக்காரர்கள் வாகுவலயமிட்டார்
வாள்களும்கத்திகளும் வலதுகையில் தானெடுத்து
அம்புவில்லுந்தானெடுத்து அப்புறத்தூணிமுதுகணிந்தார்
சட்டைதமான்வச்சிரகபாய் தாமணிந்தார்ராசரெல்லாம்

உண்டுவில்லுஞ் சுண்டுவில்லுஞ் சிங்காணிபூச்சுவில்லும்
வச்சிரக்கப்பாயணிந்தான் மதவீமராசனவன்
தண்டாயுதமணிந்தார் மந்திரவாளணிந்தார்
சண்டைக்குழல்தீபாய்ச் சமர்த்தர்வெளியானார்
அர்ச்சுனரிதுவறிந்து ஆபரண்டையோடிவந்து
அல்லியவளோடே யமருக்குப்போரீரே
அவள்மேலேயம்புபட்டால் என்றுவியுருகிவிடும்
சீவனழிந்திடுவேன் செவையழிந்துபோவேனென்றான்
மாண்டுமடிந்திடுவேன் மாதருக்குப்பாணம்பட்டால்
சாந்தவிதமானாலும் யிட்டுவந்துசேருமையா
பொற்கொடியாளதனைநீர் பிடித்துவந்துசேருமையா
நல்லதருச்சனரே நமக்குத்தெரியவரும்
சாந்தவிதமானாலு மிட்டுவந்துசேர்க்கிறேன்பார்
உன்மனதுக்கிசைந்தபடி மன்னவனேசெய்கிறேன்போ
என்றுமேசொன்னாரே எம்பெருமான்மாயவரும்
அப்போதருச்சனரும் ஆணழகர்தாமெழுந்து
வெற்றிமதயானை வீமரண்டையோடிவந்து
மதகரிவீமனுக்கு வணங்கிநமஸ்கரித்து
அண்ணேமதவீமா அடியேனொருவார்த்தை
அல்லியவள்மேலே அமருக்குப்போரீரே
அவள்மேலேபாணமதை விடவேண்டாமண்ணேவே
வில்வித்தைசெய்யவேண்டாம் விசைபாணம்போடவேண்டாம்
தந்திரமாய்க்கொண்டுவாரும் தாமந்தவாழ்மார்பா
என்றுதொழுதானே எழில்விசயனருச்சனனும்
அவ்வார்த்தைதான்கேட்டு ஆணழகனேதுசொல்வான்
நல்லதுதம்பியரே நமக்குத்தெரியவரும்
என்றுசொல்லிமதவீமனேறினான்தேர்மேலே
ஏறினார்தேர்மேலே எடுத்தார்வெண்குடையை
முத்துக்குடைகளுமே பலதிசையுந்தானெடுத்தார்
பட்டுக்குடைகளுமே பலதிசையுந்தானெடுத்தார்
கிருஷ்ணரதுதேர்மேலே கருடக்கொடிபறக்க
வீமரதுதேர்மேலே சிங்கக்கொடிபறக்க
நகுலரதுதேர்மேலே நாமக்கொடிபறக்க
சகாதேவர்தேர்மேலே சாஸ்திரக்கொடிபறக்க
அச்சுவினிமுகிரெண யானைநெடுந்தேரசைய
வண்டிக்கிழுச்சிவிடும் மதயானைகோஷ்டமிடும்
குதிரையனுமானிக்கக் கோடிமன்னாசத்தமிட
யானைசேனைபரிவார மடங்கலும்வருகிறதே
செந்தூளெழும்புவதும் சூரியனைக்கப்புவதும்
கருந்தூளெழும்புவதும் கதிரோனைக்கப்புவதும்

மண்தூளெழும்புவதும் மண்டலத்தைக்கப்புவதும்
அடிபடுதுராயபேரி அங்கரகந்தானதிர
வெண்சலப்பேரியது விருதுமுழங்கிவர
சண்டைசண்டையென்றுசொல்லிச் சண்டைபேரியடிபடுது
வெற்றிவெற்றியென்றுசொல்லி வெற்றிமுரசடிபடுதே
ரணங்கள்ரணங்களென்று ரணபேரியடிபடுதே
கோடைகாலத்திடிபோலே குமுறுதேராயபேரி
அடிவானத்திடிபோலே அடிபடுதேராயபேரி
அண்டங்கிடுகிடென்ன அடிபடுதேராயபேரி
அல்லியென்றுபேர்சொன்னால் கல்களெலாங்கூத்தாடும்
மண்தூளுஞ்செந்தூளும் மண்டலத்தைக்கப்பியதே
வருகிறசெனங்களென்றால் மட்டுமிதங்களில்லை
பட்டணத்தைத்தாண்டிப் பாளையம்வருகிறதே
யூகப்பிரித்தார்கள் யுத்தங்கள்செய்யவென்று
வந்துமூனைகொடுத்தார் வளம்பெரியசேனையெல்லாம்
இருபதுபாளையங்களெட்டிநெருங்கிற்றங்கே
உத்திபிரித்தார்கள் யுத்தங்கள்பண்ணவென்று
வில்வளைத்துநாரிபூட்டி வேணபாணந்தொடுத்தார்
சரமேற்சரம்பொழிந்தார் சாமர்த்தியமுள்ளவர்கள்
கலிங்கர்தெலுங்கர்களும் தெலுங்கர்கலிங்கர்களும்
கன்னடியர்சஸ்தியர் கஸ்தியர்கன்னடியர்
சத்திரியர்முத்திரியர் முத்திரியர்சத்திரியர்
யானையோடுயானைதாக்க அஸ்வத்தோடஸ்வந்தாக்க
ஒட்டகமுமொட்டகமும் ஒக்கபோர்செய்யுதங்கே
ஒருவருக்கொருவரல்லோ யுத்தங்கள்பண்ணுகிறார்
எட்டிற்றேநல்லசண்டை எழும்பிற்றேராயபேரி
மூளுதேநல்லசண்டை முழங்கிற்றேராயபேரி
வந்துமுனைகொடுத்தாள் வாழ்மாரியல்லியம்மாள்

வீமசேனன் யுத்தம்.

வெற்றிமதயானை வீமனவன்பார்த்து
வந்துவளைத்தானே வல்லிடிபோல்தேர்திருப்பி
தேரைத்திருப்பியவன் செங்கையில்வில்லெடுத்தான்
வில்வளைத்துநாரிபூட்டி வில்லைக்குணத்தொனித்து
அம்புதொடுத்தானே அல்லியவள்மேலாக
வாரிபொழிந்தானே வளம்பெரியஅஸ்திரத்தை
வாய்வாஸ்திரங்களொடு இந்திராஸ்திரங்களுந்தான்
சூரியஅஸ்திரமாம் சுப்பிரமண்யஅஸ்திரமாம்
மூம்பனிபோலாக முடுக்கிவிட்டான்பாணமதை
அம்புவருவேகமானை லார்க்கமுடிபோகாது

பாணம்வரும்வேகமானால் பார்க்கமுடிபோகாது
சரவருஷம்போலாகச் சரமேற்சரம்பொழிந்தார்
கண்டாளேயல்லியம்மாள் கண்கள்செவந்தாளே
சிறிசெறிபறந்து சிங்கத்தைப்போற்கதும்பி
கழுத்திலேபங்கிலியங் கட்டினவனாடா
திருட்டுப்பயலேயுன் சீவன்பறித்திடுவேன்
சண்டிப்பயலேயுன் சாமர்த்தியம்நானழிப்பேன்
என்சமர்த்துஞ்சேவகமு மிப்போதெரியுதுபார்
அல்லியென்றுபேர்சொன்னால் அழுதபிள்ளை வாய்மூடும்
அல்லியென்றுபேர்சொன்னால் அண்டாண்டங்கிடுகிடென்னும்
அரைநாழிக்கொள்ளையிலே யளகாபுரஞ்சேர்த்திடுவேன்
தேரைத்திருப்பினாளே செங்கையிலேவில்லெடுத்தாள்
பம்பரம்போலாகப் பாரரதந்திருப்பி
சக்கரத்திகிரிபோலச் சம்பரத்துடனேதேர் திருப்பி
வில்வளைத்துநாணிபூட்டி விட்டாள்சரபாணம்
ஆகாயமுள்ளதெல்லாம் அம்பாலேபந்தலிட்டாள்
அம்புவரும்விதங்கள் பார்க்கமுடியாது
பாணம்வரும்விதங்கள் பார்க்கமுடியாது
கார்த்திகைமாதத்திலே கனத்தமழைபெய்ந்ததுபோல்
ஐப்பசிமாதத்திலே யடர்ந்தமழைபெய்ந்ததுபோல்
சோனைமழைபோலே சொரிகிறாள்பாணங்களை
அக்கினியாஸ்திரங்கள் அனேகம்பொழிந்தாளே
நெல்லிப்பழப்போலே நெருங்கிற்றேகொப்பளங்கள்
அருநெல்லிப்பழப்போலே யஸ்தமெல்லாங்கொப்புளிக்க
நான்குநாள்மட்டாக நல்லசண்டைபண்ணார்கள்
தன்மேல்வரும்பாணஞ் சங்கரிப்பான்வீமனவன்
ஒருவர்விட்டபாணமெல்லாஞ் சங்கரிப்பான்வீமனவன்
இருவர்சமானமாக இனியசண்டைபண்ணுகிறார்
வீமன்விடும்பாணத்தினால் வெகுசனங்கள்மாளுகுது
யானையின்மேலிருந்தவரை யறுந்துவிழுகிறார்கள்
குதிரையின்மேலிருந்தவரை கொக்கரித்துக்கீழ்விழுந்தார்
ஒட்டகத்தின்மேலிருந்தவரை யோலமிட்டுவிழுவார்கள்
அம்மாடியென்றுசொல்லி யலறிவிழுவார்கள்
தென்னங்காய்போலாகச் சேனைதலையுருளவிட்டான்
பனங்காய்ப்போலாக பரித்தெரிந்தான்வேனதலை
அறுத்ததலைகளெல்லா மம்மானுருடுதங்கே
பெட்டியும்பேழைபோலே பெள்கொடுத்ததலைகள்போல
சட்டிகள்பானைபோலே தலைகளுருளவிட்டான்
அம்மாடியென்றுசொல்லி அனேகந்தலையுருளும்
காலறுந்துபோகுதே கைகளற்றுப்போய்விடுதே

ஈரல்குடல்சந்து இருநிலத்தில்வீழ்வாரும்
மணிக்குடல்தான்சரிந்து மண்ணில்விழுவாரும்
நிலப்பூச்சிபோலாக நிலத்திற்நசுங்கலுற்றார்
சாகிறவுணிபோலே தரையில்நசுங்கலுற்றார்
மாண்டசெனங்களென்றால் மட்டுமிதங்களில்லே
செத்தசெனங்களென்றால் சொல்லமுடிபோகாது
அல்லியம்மாபாளையங்க ளலைந்தலைந்தோடுகுது
சண்டைபண்ணமாட்டாமல் சலாம்பண்ணியோடலுற்றார்
ஆயுதத்தைத்தூரவைத்து அருகில்சலாம்பண்ணுவாரும்
பண்டாரமென்பாரும் பரதேசியென்பாரும்
நாமத்தைக்காட்டுவாரும் நான்தாதனென்பாரும்
பூநூலைக்காட்டுவாரும் பிராமணனென்பாரும்
பிச்சையிரந்துண்ணப் புறப்பட்டோமென்பாரும்
ஆயுதத்தைத்தூரவைத்து அருகில்சலாம்பண்ணுவாரும்
ஐயையோதெய்வமென்று அலைகிறதேபாளையங்கள்
வடுகரெல்லாம்நீளென்பார் வன்றமிழர்தண்ணீரென்பார்
துலுக்கரெல்லாம்பாணியென்று சொல்லிப்புலம்புகிறார்
தண்ணிதண்ணியென்று தவிக்கிறதேபாளையங்கள்
மார்பளவுரத்தாறு வழியவிட்டான்வீமனவன்
பிடாரியம்மன்கோவிலுக்குப் பலிகொடுத்தபாவனைபோல்
அம்மையார்கோவிலுக்கு ஆடுவெட்டும்பாவனைபோல்
துள்ளுகிறதலைகளெல்லாம் செருக்களங்கொள்ளவில்லை
ரத்தாறுஓடினதே யுத்தத்தளங்களெல்லாம்
இவ்விதமாய் இனியபோர்செய்வதிலே
தேவாதிதேவரெல்லாம் சொல்லுவாரொருவார்த்தை
இராமரதுசண்டையென்பார் இராவணன்சண்டையென்பார்
சூரபத்மன்சண்டையென்பார் சுப்ரமண்யன்சண்டையென்பார்
வீரபத்ரன்சண்டையென்பார் வெள்ளிதக்கன்சண்டையென்பார்
வெற்றிமதயானை வீமனவன்பின்னிடையான்
நான்குநாள்மட்டுமல்லோ நல்லசண்டைபண்ணுகிறான்
அல்லிப்பெருமாளு மாக்கரித்துபற்கடித்து
ஆலவாய்ச்சொக்கரென்னு மாண்டவனைத்தானினைத்து
திவ்வியாஸ்திரத்தை தூபமிட்டுதானெடுத்தாள்
மந்திரதூபமிட்டு வாங்கிவிட்டாள்மண்மேலே
மார்புளவாங்கியல்லோ தோள்புளவாங்கிவிட்டாள்
மேலிட்டுவருகிறதே வீமனதுதேர்மேலே
வாயில்நெருப்பெரிய வந்துவிழுந்ததுவே
தேருமுடைந்ததுவே செம்புரவிசெத்ததுவே
போட்டதோர்வச்ரப்பாய் தவிடுபொடியாச்சுதங்கே
சட்டைதமானவச்ரப்பாய் தவிடுபொடியாச்சுதங்கே

சரீரஞ்சொல்லாம் சல்லடைக்கண்ணாச்சுது தான்
மாணங்குலைந்தானே மதகரியான்வீமசேனன்
விழுந்துமெழுந்தவனும் வெட்கங்கெட்டோடிவிட்டான்

ஸ்ரீகிருஷ்ணபகவான் யுத்தம்.

மாயன்பெருமாளும் மலைராமர்கண்டுவிட்டார்
வகைமோசம்வந்ததென்று மாயவருந்தேர்திரும்பி
வந்துமேசண்டைசெய்தாள் மயிலனையாள்தன்னுடனே
பம்பரம்போல்திருப்பி பாணந்தொடுத்துவிட்டார்
அல்லிப்பெருமாளை மாக்சரித்துப்பற்கடித்து
சொக்கரைத்தானினைந்து தொட்டாளேபாணமதை
இருவர்தாங்களு மிருநிலத்தில்தான்சுழல
பம்பரம்போலாகப் பாரதந்திருப்பி
விட்டாள்சரபாணம் மேகவண்ணன்தேர்மேலே
வாயவாஸ்திரங்களும் வருணாஸ்திரங்களும்
வச்சிரபாணமதை வாரிச்சரம்பொழிந்தான்
ஒன்றல்லரண்டல்ல ஒருகோடிபாணம்விட்டான்!
ஆரியனைத்தான்மறைத்தாள் தொடுத்தநல்லபாணமதால்
ஆகாயமுள்ளதெல்லா மம்பாலேபந்தலிட்டாள்
பெருமாளுமல்லியரும் பிரியாதசண்டைபண்ணார்
மாளுஞ்சேனைகளென்றால் மட்டுமிதங்களில்லை
ஐயாகோதெய்வமென் றலையுதேபாளையங்கள்
யானையின்மேலுள்ளவர்கள் அபயமிட்டுமண்ணைக்கவ்வ
குதிரையின்மேலுள்ளவர்கள் நொக்கரித்துமண்ணைக்கவ்வ
ஒட்டகமேலுள்ளவர்கள் ஓலமிட்டுமண்ணைக்கவ்வ
இந்தவிதமாக இனியசண்டைபண்ணுகிறார்
அலைகடல்சத்தம்போல் அபயமிடும்வெகுஜனங்கள்
கூக்குரலாகவே கோஷ்டமிடும்பாளையங்கள்
அபயம்சிவாயமென்று அலைகிறதேவெகுஜனங்கள்
வடுகரெல்லாம்நீரென்பார் வன்றமிழர்தண்ணியென்பார்
துலுக்கரெல்லாம்பாணியென்று சொல்லுகிறார்பாளையத்தில்
கண்ணீர்தண்ணீரென்று தவிக்கிறதேபாளையங்கள்
அப்போது அல்லியம்மாள் அதிகமானகோபமுடன்
வச்சிரபாணந்தன்னை மந்திரதாபமிட்டு
மாயரதுதேர்மேலே வரிந்துமிழுத்துவிட்டாள்
திக்கிராஸ்திரங்களது திவ்வியாஸ்திரங்களது
இராமச்சந்திர அஸ்திரமாம் நாராயண அஸ்திரமாம்
அக்கினியாஸ்திர மனந்தம்பொழிகின்றாளே
ஒன்றல்லஇரண்டல்ல ஒருகோடிபாணம்விட்டாள்
வாரிப்பொழிந்தாளே வனம்பெரிய அஸ்திரத்தை

எடுத்துப்பொழிந்தாளே ஏழுலட்சம்பாணங்களை
பாதாளமூடுருவப் பாணந்தொடுத்தாளே
ஆயன்சரீரமெல்லா மங்கம்பிளக்கடித்தார்
சல்லடைக்கண்போலே சரீரமெல்லாந்துளைத்து
மயிருக்கொருபாணம் மாதுதொடுத்துவிட்டாள்
விற்பிடித்தகைகளெல்லாம் மெத்தசிலப்பேறிற்று
கைகளெல்லாஞ்சோர்ந்துவிடக் கன்னியரும்பாணம்விட்டாள்
ஆகாயதேவரெல்லாம் அல்லியரைக்கொண்டாடினார்
இந்தப்படியாக இனியசண்டைசெய்கையிலே
இவனேவெகுபார மென்றொருபாணமதை
மார்புரளவாங்கியல்லோ தோள்புரளதொடுத்துவிட்டாள்
வாயில்நெருப்பெரிய வந்துவிழுந்ததுவே
தேருமொடிந்துபோச்சு செம்புரவிநாலும்போச்சு
சட்டைதமான்வச்சிரகபாய் தவிடுபொடியாகி
செங்கையிலேவில்லெடுத்து சோடுசட்டைதானணிந்து
பாதாதியாப்போகிறார் பாரளந்தவெம்பெருமாள்
கைமோசம்வந்ததென்று கரியமாலோடுகிறார்

சகாதேவன் யுத்தம்.

கண்டான்சகாதேவன் கரியமாலோடுவதை
தேரைத்திருப்பினனே செங்கையில்வில்லெடுத்தான்
வந்தவளைந்துகொண்டான் வல்லிடிபோல்சகாதேவன்
பேரிகையறைவித்துப் போயெதிர்த்தானல்லியண்டை
சண்டைபேரிகையடித்து சமர்த்துடனேவந்தெதிர்த்தான்
கண்டாளேயல்லியம்மாள் கண்கள்ரெண்டுந்தான்சிவக்க
ஒருபாணம்விட்டாளே யுலகமெல்லாந்தானதிர
பேரிகையைக்கிழித்தாளே பெரியடமாதான்கிழித்தாள்
விழுந்துளழுந்திருந்தான் வெட்கங்கெட்டோடிவிட்டான்

சகாதேவன் அல்லியைப் புலிகூண்டினால் பிடித்துவருகிறது

எந்தவிதத்தினாலே யிவளைசெயித்திடலாம்
அடங்காதநீலிதனை அடிக்கும்வழியெப்படிதான்
என்றுமேதானினைந்து இளையசகாதேவன்
உள்ளங்கைசாஸ்திரத்தை உத்தியுடன்பார்த்து
பாதாளஅஞ்சனத்தை பார்த்துசகாதேவன்
பத்துசுற்றுபுலிக்கூண்டை பாங்குடனேகொண்டுவந்தார்
சூதுபண்ணியல்லியரைக் கூண்டிலடைக்கவேண்டும்
இல்லாமற்போனக்கா லிவளைஜெயிக்கமுடியாது
இவள்கையால்மாளுவ தெல்லாருநிச்சயந்தான்
சாஸ்திரத்தைத்தான்பார்த்து தாக்குள்ளசகாதேவன்

செருக்களத்தைதனிட்டவனுஞ் சீக்கிரமாய்ப்போகலுற்றான்
மாளிகையிற்போய்ச்சேர்ந்து மன்னன்சகாதேவன்
மிகையிற்பதர்களை விரைந்தோடியழையுமென்றான்
அப்போதுகாவலர்களழைத்தோடிவந்தார்கள்
ஆயிரந்தச்சர்களை யழைத்துவந்துவிட்டார்கள்
வந்துபணிந்தார்கள் மன்னன்சகாதேவனைத்தான்
எங்களையழைத்தபணி யாதென்றுகேட்டார்கள்
இமைப்பொழுதொருநாழிகையில் இரும்புக்கூண்டையென்றான்
ஒருபக்கம்பார்த்தாலே புர்சிதக்கூண்டைபோல
மறுபக்கம்பார்த்தாலே மச்சுவீடுபோலாக
பத்துசுற்றுக்கோட்டையதாய்ப் பக்கங்கதவடைத்து
வாசலுக்குவாசலுமாயிரத்தாழ்போட்டு
சாவிக்குங்கிலேயுந் தாப்பாளுஞ்செய்யென்றான்
ஆயிரந்தச்சர்களு மக்கணமேசெப்பனிட்டு
இமைப்பொழுதொருநாழிகையில் நியமித்தார்விசுவகர்மர்
சோடித்தோமென்றுசொல்லித் தெண்டனிட்டுப்போனார்கள்
அப்போசகாதேவன் அங்கணமேதானெழுந்து
தேரைத்திருப்புகிற சூதனைத்தானழைத்து
குதிரையலங்கரித்துக் கூண்டிலேகட்டுமென்றான்
பாரசாரிப்புரவிகளைப் பாங்காயலங்கரித்து
கூண்டுக்குழுகாக குதிரைகளைக்கட்டுமென்றான்
சாஸ்திரகொடிவிருதைச் சமர்த்துடனேகட்டுமென்றான்
அங்கேசகாதேவ னம்புவில்லுங்கைபிடித்து
ஏறினான்கூண்டுதன்னி லடித்தாரேபேரிகையை
திறவுகோல்கைபிடித்து சூதாகப்போனானே
கூண்டைத்திருப்பியல்லோ கொண்டுவந்தான்பாளையத்தில்
செயங்கொண்டோமென்றுசொல்லி செங்கையில்வில்லெடுத்தார்
சண்டைசண்டையென்றுசொல்லி சண்டைபேரியடிபடுது
வெற்றிவெற்றியென்றுசொல்லி வெற்றிக்கொடிபடுது
ரணங்கள்ரணங்களென்று ரணபேரியடிபடுது
கண்டாளேயல்லியம்மாள் காற்றைப்போல்தேர்திருப்பி
வந்துமுனைந்தாளே வல்லிடிபோல்வளைந்தாள்
எட்டுதேதல்லசண்டை எழும்பிற்றோயபேரி
முட்டுதேகல்லசண்டை முழங்கிற்றோயபேரி
விட்டாள்சரபாணமழை யேனியெல்லாந்தான்மறைய
ஒருவர்விடுப்பாணம் ஒருவர்தடுக்கொள்வார்
இருவர்சமமாக விருந்துசண்டைபண்ணுகிறார்
அர்த்தசந்திரபாணங்களில் அல்லியொருபாணம்விட்டாள்
சகாதேவன்வில்முறியச் சமர்த்துடனேபாணம்விட்டாள்
வேதாளமாகவந்து வில்லைமுறித்ததுவே

வில்லுமுறியவே தான் வேந்தன் சகாதேவன்
வாள்கேடயந்தானெடுத்து மண்ணிற்குதித்தானே
முன்கந்துபின்கந்து முப்பத்திரண்டுகந்து
இந்திரவித்தையி லெழும்பிவரான் சகாதேவன்
அப்போதுஅல்லியரு மாரணங்குதான்பார்த்து
கரணங்கள்போடுகிறாள் கையலகுபண்ணுகிறாள்
கோடிபாய்ச்சல்தானெடுத்து கொப்பனவேபாயுகிறாள்
புலியும்புலியுமது போயெதிர்த்தபாவனைபோல்
யானையும்யானையுமாய் அதிர்ந்துமெதிர்த்ததுபோல்
சிங்கமுஞ்சிங்கமுமாய்ச் சீறியெதிர்த்ததுபோல்
கொக்கரித்துயாளியிட்டுக் கொற்றவனும்பாய்கிறான்
துள்ளுமான்குட்டியைப்போல் துள்ளுகிறாளல்லியம்மாள்
ஓடியொழிப்பவன்போல் உபாயமாய்ச்சகாதேவன்
ஓடிப்போனானென்று உலகாளும்ராசகன்னி
கூடக்குதித்தாளே கூண்டுதன்னிற்பாய்ந்தாளே
முன்வாசற்புகுந்தவனும் பின்வாசலோடலுற்றான்
அவ்வாயற்புகுந்தாளே அல்லிமலர்நாயகியாள்
எங்கேபோனான்கள்ளனென்று இளங்கொடியாள்தேடுகிறாள்
ஐந்தாங்கட்டுவாசலிலே அல்லியம்மாள்தான்புகுந்தாள்
அவ்வாசல்கதவடைத்து தாப்பாளும்போட்டானே
ஐந்துவாசற்கதவடைத்து ஆணழகன்வெளியானான்
அகப்பட்டாளல்லியென்று அடியுமென்றான்பேரிகையை
செயங்கள்செயங்களென்று செயபேரிபோடுமென்றான்
அகப்பட்டாளல்லியென்று அடிபடுதேபேரிகைதான்
சிக்கினாளல்லியென்று சின்னங்களூதுகிறார்
அத்தண்டபேர்களுமே அனைவோருங்கேட்டார்கள்
சந்தோஷப்பட்டார் ஒருமருடசேனையெல்லாம்
தப்பினசேனையெல்லாந் தென்மதுரைசேர்ந்துவிட்டார்
அப்போதுசகாதேவன் ஆனந்தமாய்வாரானே
கூண்டைதிருப்பியே கொண்டுவந்தான் வையகத்தில்
அருச்சுனன் தன்னருகே அடிபணிந்துதெண்டனிட்டான்
தெண்டனிட்டசகாதேவர் சொல்லுவாரொருவார்த்தை
அல்லியுடன் சண்டைபண்ண அமருக்குப்போனபோது
ஆங்காரப்பெண்புலிதா னகப்பட்டதென்கையிலே
வேங்கைபுலியதனை விடுகூட்டிலடைத்துவந்தேன்
மதுராபுரியாண்ட வாழ்வரசியல்லியரை
தேரேறிசண்டைசெய்யுந் துரைகளைக்கொண்டுவந்தேன்
அவ்வார்த்தைதான்கேட் டருச்சுனனுந்தான் மகிழ்ந்து
சந்தோஷப்பட்டானே தாமந்தவாழ்மார்பன்
அன்னநடைதுரோபதையாள் ஆரணங்கைத்தானழைத்து

சோரவனங்கை சுபத்திரையைத்தானழைத்து
நான்செய்தகாரியத்தை நாயகமேநீர்கேளும்
மாயவரும்பாலுமாக வனவாசம்போனபோது
தீர்த்தயாத்திரைபோகையிலே செப்பதமிழைநீர்கேளும்
ஆதிசிவனைத்தான் அடிவணங்கவேண்டுமென்று
மதுராபுரியிலே மாணிக்கச்சொக்கலிங்கம்
பிட்டுக்குமண்சுமந்த பித்தனைக்காணவென்று
மதுரைக்குப்போகின்ற வழியிலேயங்கொருவன்
அழுதகண் ணுஞ்சிந்தையுமாய் அங்கொருவன் புலம்பிநின்றான்
மதுராபுரியாளும் வாழ்வரசியல்லிபற்கு
அன்றுமுத்தெடுத்து அளப்பாளுமாரிமைந்து
படிமுத்துக்குறைந்ததென்று பதறியவனழுதான்
அல்லியராணி அரசாளுகிறதும்
அவள்பிறந்தவன்மைகளும் அவனுடன்சொல்லுமென்றேன்
ஆறுமெம்பாண்டியர்க ளரியதவஞ்செய்ததவும்
ஆலவாண்டசொக்கலிங்கம் அங்கபத்கன்கிருபையினல்
அல்லியிலேமேலே அவள்பிறந்தவன்மைகளும்
மழுபிரபத்திலே எதிர்த்துவந்தசன்றழகின
வெட்டித்தலைதுணித்து வீரபட்டங்கட்டினதும்
கொள்ளவரும்மாப்பிள்ளைக்குக் குடாரகொடுப்பேனென்றாள்
சேரவரும்மாப்பிள்ளைக்குச் செருப்பத்தாதருவேனென்றாள்
ஆளவருஞ்சம்பந்தியை அடிப்பேனென்றாள்செருப்பால்
மூச்சிக்கொட்டாதெருவிற்கட்டி மொய்குழலாளாண்டிருந்தாள்
இவ்வார்த்தைதான்கேட் டென்மனதுதாளாமல்
கட்டினவிருதறுத்துக் கலியாணஞ்செய்யவென்று
என்றுமனதிலெண்ணி எட்டுகாணகாத்திருந்தேன்
பத்தினியானவள் பரிவேட்டைபோனதும்
பெண்வேஷம்போட்டுமெல்லோ பின்னேதொடர்ந்துபோனேன்
கரும்புரவியேறி மான்வேட்டையாடையிலே
ஆனைக்குமாரியருக் கப்பொழுதுக்கித்தந்தேன்
வேட்டையாடியே மெத்தக்களித்தவளும்
ஆலமரத்தடியில் அங்கேபடுத்தாளே
காலப்பிடித்தேனே கதைபொன்றுசொன்னேனே!
அடையாளங்காட்டவென்று ஆரங்கழற்றிக்கொண்டேன்
அன்றுபோய்மற்றுநாள் மற்றொருவேடங்கொண்டேன்
பித்தம்பிடித்தவன்போல் பெரும்பயித்தியங்கொண்டவனும்
அல்லிபட்டணத்தில் அழுதிருக்குளத்தில்
வண்ணமருந்தெடுத்து வளமைபாடியாளுரைத்தேன்
அனேகந்தாதிமாரைவிட்டே ஆற்றிலெண்ணைபுரட்டுமென்றாள்
அதிமேலுஞ்சாகாமல் அவள்பின்னேயாயிருந்தேன்

தூக்குமரந்தனிலே போடுமென்றாளென்னையவள்
செங்கமலத்தாதியரை யுபாயமாய்க்கொன்றுவிட்டேன்
காளியம்மன்கோவிலிலே காவுபோடச்சொன்னாளே
பூதக்கிடங்கிலே போட்டடைக்கச்சொன்னாளே
பூதம்பணிமாறப் பிழைத்திருந்தேனவ்விடத்தில்
மாயனொருபெண்ணாகி வரவழைத்துக்கொண்டுவந்தார்
ஆண்டியைப்போல்வடிவெடுத்து அல்லிதன்வாசலிலே
வண்ணப்படமெடுத்து மாதுபிச்சைவாங்கிவந்தேன்
மாயன்பிடாரனானார் வண்ணமிதப்பாம்பானேன்
பாம்புருவாய்ப்போயிருந்து படுக்கையிலேநான்கலந்து
பொடிபோட்டுமாதினுக்குப் புத்திரனுண்டாக்கிவைத்தேன்
மற்றொருவேஷமது மறுநாள்வடிவெடுத்து
பெருமாளந்தமாயவனார் பிராமணப்பெண்ணானார்
மெத்தக்கிழவனைப்போல் வேதியனாய்வடிவெடுத்து
அத்துவானமானகாட்டில் தண்ணீர்பந்தல்வைத்திருந்தோம்
அதுவேஷந்தன்னுடனே அரண்மனையிற்போயிருந்தேன்
தேவேந்திரனைநோக்கி செய்தேன்பெருந்தபசு
ஆனைத்தலைபோலே அழகானமங்கிலியம்
தும்பிக்கைபோலாகத் திருமங்கலியச்சரடும்
கொடுத்தனுப்பவேண்டுமென்று கொப்பனவேதவஞ்செய்தேன்
மாயத்திருநீறும் மங்கலியந்தரித்துவிட்டேன்
மாலைப்பசுங்கிளிக்கு மங்கிலியந்தரித்துவிட்டேன்
ஆருமறியாமல் அங்கொருவர்காணாமல்
கட்டினவிருதறுத்துக் கடுகியேவந்துவிட்டோம்
இன்னவனென்றுசொல்லி என்னையறியமாட்டாள்
கழுத்திலேமங்கிலியங் கட்டினவனையறியாள்
தரணியிலுள்ளராஜர்களை வாவென்றழைத்தவளும்
நெய்தனைக்காய்ச்சியல்லோ கைகளைத்துவையுமென்றாள்
மண்டலத்துராஜரெல்லாம் வந்துசத்தியஞ்செய்தார்கள்
வெற்றிமதயானை வீமன்குடித்துவிட்டான்
ஆகையினாலேயவள் அமருக்குயிங்குவந்தாள்
தர்மமுடியானுஞ் சகாதேவன்பிடித்துவந்தான்
புலிகூண்டிலேயடைத்துப் பொற்கொடியைக்கொண்டுவந்தான்
இந்தவயணமெல்லா மேந்திழைக்குநீயுரைத்து
நம்பிக்கைவாங்கியே நாயகியைவெளியிடுங்கள்
கோபங்களாற்றுங்கள் கொம்பனையாள்நாயகிக்கு
மனந்தேறச்சொல்லுங்கள் மாலையிடப்பாருங்கள்
சத்தியத்தைவாங்கி தையலைவிட்டுவிடும்
ஆயுதத்தைவாங்கியேதான் அப்புறத்தில்விட்டுவிடும்
என்றுசொல்லியே எழில்விஜயனனுப்பிவைத்தான்

திரௌபதை முதலானவர்கள்வந்து அல்லியம்மாளை மனந்திருப்பி மாலையிடச்செய்தது.

அப்படியேயாகுதென்று அன்னநடைமாதர்களும்
திரௌபதைதாககன்னி சுபத்திரைவருகிறார்கள்
மந்தாரக்குந்தியம்மாள் மற்றுமுள்ளோர்வருகிறார்கள்
வாசலும்வாசலது படியேழுந்தான்கடந்து
புலிக்கூண்டுதன்னருகே போய்ச்சேர்ந்தார்மாதரெல்லாம்
தோராவடிவழகி துரோபதையேதுசொல்வாள்
ஆரடியம்மானே அழகானகூண்டிலேதான்
இப்பெரியகூண்டிலேதா னிருக்கிறவளார்காணும்
வாயைத்திறந்தாநீ வந்தவகைசொல்லுமென்றாள்
மகுடத்துரைச்சியவள் வாய்திறந்தேதுசொல்வாள்
என்னசொல்வேன்நாயகியே என்தலைவிதிப்பயனை
ஆருக்கடங்காம லரசுநிலைசெய்திருந்தேன்
வயிற்றிற்பிறந்ததில்லை வன்கொடுமைசெய்ததில்லை
குட்டிற்பிறந்ததில்லை குலக்கொடுமைசெய்ததில்லை
ஓடுகிறதண்ணீரி லுள்ளேமணற்சேருமுண்டு
அடிக்கிறகாற்றதனி லலைகாற்றரும்புமுண்டு
ஆலாலகண்டருக்கு கண்டங்கறுப்புமுண்டு
குண்டுமணிக்காலுங் கொஞ்சங்கறுப்புமுண்டு
மயிரோகறுப்பொழிய மற்றக்கறுப்புமில்லை
புருவங்கறுப்பொழிய பின்னேகறுப்புமில்லை
ஆயிரம்பாண்டியர்கள் அரியதவஞ்செய்தார்கள்
மாளுகிறோமென்றுசொல்லி மலைமேற்றவமிருந்தார்
மாளாதேயென்றுநான் மலரிலவதரித்தேன்
அல்லியிலைமேலே ஆரணங்குபெண்பிறந்தேன்
ஏழுபிராயத்திலே எதிர்த்துவந்தநீன்முகனை
வெட்டித்தலைபிளந்து வீரபட்டங்கட்டிக்கொண்டேன்
நீன்முகனைக்கொன்றுநான் நீலிபட்டங்கட்டிக்கொண்டேன்
நல்லையரசாண்டு இருந்தேனம்மாவிக்காலம்
சேரவரும்மாப்பிள்ளைக்குச் செருபந்துதருவேனென்றேன்
ஆளவருஞ்சம்பந்தியை யடிப்பேனென்றேன்செருபந்தால்
பொம்மைவிருதுகட்டிப் பூமியரசாண்டேனம்மா
எவனோதிருட்டுப்பையன் என்கழுத்தில்மங்கிலியம்
தாலியைக்கட்டினானே தனிவிருதையறுத்துவிட்டான்
அறிந்துபிடிக்கவென்று அனைவரையும்வரவழைத்தேன்
நெய்தனைக்காய்ச்சியே கையைத்துவையுமென்றேன்
நெய்யைக்குடித்துவிட்டு னிர்மூடன் வந்துவிட்டான்
சண்டைக்குவந்திடத்தில் சமர்த்துக்கனைக்காட்டாமல்

எதிரேயிருந்துமல்லோ வென்சமர்த்தைப்பார்க்கவேணும்
எனை மோசஞ்செய்தலவோ இக்கூண்டிலடைத்தானே
சரியாகநிற்கவேண்டுஞ் சமர்த்துக்களைக்காட்டவேணும்
வெளியேவிடச்சொல்லும் வீரியத்தைக்காட்டுகிறேன்
அவ்வார்த்தைதான்கேட்டு எதுசொல்வாள் திரௌபதியாள்
கழுத்திலேமங்கிலியம் கட்டினவண்மையெல்லாம்
அந்தவதிசயத்தை ஆரணங்கேசொல்லுகிறேன்
காட்டிலே வேட்டையாடக் கடுகவரும்போது
பெண்வேஷபோட்டுமல்லோ பின்னேதொடர்கிலையோ
அம்புபொருக்கிலையோ ஆரணங்கேயுந்தனுக்கு
காலுப்பிடிக்கலையோ கதையொன்றுசொல்லலையோ
பித்தபிடித்தவர்போல் பெருமருந்துதானெடுத்து
வண்ணமருந்தெடுத்து தண்ணீரிலுரைக்கலையோ
அல்லிபெருமானேநீ அதிககோபங்கொள்ளாதே
ஆற்றிலேபோட்டுநீ யலைப்புரட்டலையோ
தூக்கிலேபோடுமென்றாய் தூய்யபசுங்கிளியே
காளியம்மன்கோவிலிலே காவுகொடுக்கச்சொன்னாய்
பூதக்கிடங்கிலே போட்டடையுமென்றுசொன்னாய்
மற்றநாள்தெய்வகன்னி மணவாளனென்றழுது
தன்புருஷனென்றுசொல்லி தானழைத்துப்போகலையா
ஆண்டியவரைப்போலேவந்து அல்லியேயுன்வாசலிலே
படலூர்ந்துவந்தனலூ வாசலிலிருக்குபோது
பாம்புகளைவிட்டு பண்டாரத்தைக்கொல்லுமென்றாய்
பாம்புப்பிடாரனைப்போற் பத்தினிவருகையிலே
பாபபாகசேடங்கொண்டு படுக்கலையோவுன்னிடத்தில்
உன்னிடத்திலேயிருந்து உனக்குமைந்தனைக்கிவைத்து
பார்ப்பானைப்போலேவந்து பணிமாலைசூட்டலையோ
தாலிதரித்தவர்தான் தருமர்தம்பியருச்சுனர்காண்
உன்னைத்-தாலிகட்டிவந்ததுதான் சமர்த்தென்றும்பாராதே
அல்லியிலைமேலே அதிசயமாய்ப்பெண்பிறந்து
பெத்தப்பெரிதென்று பாராதேயல்லியரே
நான்-அக்கினியிற்பெண்பிறந்த அதிசயத்தைநீர்கேளும்
வயிற்றிற்பிறந்ததில்லை வன்கொடுமைசெய்ததில்லை.
குடலிற்பிறந்ததில்லை குலக்கொடுமைசெய்ததில்லை
சந்திரர்க்குமச்சமுண்டு சற்றேகறுப்புமுண்டு
குண்டுமணிக்காலுலும் கொஞ்சக்கறுப்புமுண்டு
எனக்கு-மயிரேகறுப்பொழிய மற்றகறுப்புமில்லை
புருவகறுப்பொழியம் பின்னேகறுப்புமில்லை
மாசிலாப்பெண்பிறந்தேன் வளருகிற அக்கினியில்
நெருப்பிற்பிறந்தேனே நீலப்பசுங்கிளியே

பாஞ்சாலனெக்கியத்தில் பிறந்தபதிவிரதை
மந்தரகிரிமேடைதன்னில் மச்சரையில்பெண்பிறந்தேன்
அர்ச்சுனரைமாலையிட அக்கினியில்பெண்பிறந்தேன்
அரக்குமாமாளிகையி லைவரிறந்தாரென்று
செய்திதெரிந்து துயரமிட்டாரென் தகப்பன்
ஐவரிறந்தாரென்று ஆயாசப்பட்டார்கள்
நான்மீறிவளர்ந்தேனே மெல்லிருதுவானேன்
போதவளர்ந்தேனே பிள்ளைபெறுநாளானேன்
கொள்ளவேவந்தார்கள் கோடானகோடியுண்டு
மாலையிடவந்தவர்கள் மட்டுமிதங்களில்லை
அப்போதருச்சுனரு மன்றுமோர்பார்ப்பாருய்
குஷ்டரோகிபோலாகக் கொற்றவரும்வடிவெடுத்தார்
பாஞ்சாலன்பந்தலிலே பார்ப்பான்போல்வந்திருந்தார்
அப்போதுஎன் தகப்பன் ஆலோசனையேதுசொல்வார்
வில்லைவளைத்தவர்க்கு மெல்லியரைக்கொடுப்பேனென்றார்
அவ்வார்த்தைதான்கேட்ட அரசுமுடிராசாக்கள்
மண்டலத்துராசாக்கள் வந்துவில்வளைத்ததில்லை
திக்கரசையாண்டதொரு துரைகளெல்லாம்வந்தார்கள்
வானவர்கோனிந்திரரும் வந்துவில்வளைத்தார்கள்
மண்ணுலகராசர்களும் வில்லைவளைத்ததில்லை
தேசத்துராசாக்கள் வில்லைவளைத்ததில்லை
அரசுமுடிராசாக்கள் அவ்வில்லைவளைத்ததில்லை
திக்கரசுராசாக்கள் சிலைவளைக்கமாட்டாமல்
வெட்கங்கள்கெட்டாரே வேந்தரந்தராசாக்கள்
ஆராலுமுடியாது அவ்வில்லைவளைப்பதற்கு
வந்தவந்தராசாக்கள் மானங்குலைந்தார்கள்
அப்போதுஎன்புருஷன் அருச்சுனண்டி ஆணழகன்
பார்ப்பானைப்போலிருந்த பார்த்திபனெழுந்திருந்து
தேவாதிதேவர்மெச்ச துரைகளெல்லாபார்த்திருக்க
விஷ்ணுவும்பிரமாவும் வியந்துநடுங்கிடவே
விண்ணிரெண்டும்தானதிர வில்லைவளைத்தாரே
நீர்பார்த்துமீனெய்தார் நித்திலக்குடைமுடியார்
என்னைமாலையிட்டாரே யெழில்விசையனருச்சுனரும்
எனக்குக்குறையுமுண்டோ என்னுடையதங்கையரே
இவ்வார்த்தைதான்கேட் டேதுசொல்வாள்நாககன்னி
அல்லியரே அப்பியரே அதிசயத்தைநீர்கேளும்
நான்-இந்தவுலகமல்ல இன்னாட்டுமனுஷியல்ல
நாகலோகம்பெண்பிறந்த நாககன்னிநானல்லவோ
ஒருமொருமாணிக்கம் பெருமொருமாணிக்கம்
மாணிக்கம்தன்னால் மடையடைக்கும்பொற்பாவை

என்னைவந்துமாலையிட்டா ரியலானஉன்புருஷன்
எனக்கென்னகுறையாக விருக்குறேனடியப்பியரே
இவ்வார்த்தைதான்கேட் டெழுந்தாள்சுபத்திரையும்
பூவிற்பிறந்தவளே பொற்கொடியேநீர்கேளும்
மகுடத்துரைச்சியரே வார்த்தையொன்றுநீர்கேளும்
ஆயாதுதங்கையர்காண் அம்மான்மகளல்லவோ
என்னைச்சிறையெடுத்து இட்டுவந்தாருன்புருஷன்
நானென்னகுறையாக விருக்கிறேனரைச்சியரே
அருச்சுனரைப்பார்த்தாலே ஆவல்தெளிந்திடுமே
மீசைமுறுக்கழகர் விழியிற்கறுப்பழகர்
நாவிலேநட்சேத்திரம் நயனவிழிப்பார்வைகளும்
தோளில்துளசிமாலை தொப்புளிலமுர்தகலசம்
பல்லில்பாசவீணை பாதத்தில்செந்தாமரை
முதுகிலேமட்சரேகை முழங்காலில்முத்துமாலிக்கம்
ஸ்திரீலைமன்மதனடி சிறுபெண்கட்குகந்தவனடி
அருச்சுனரைப்பார்த்தாலே ஆவல்தெளிந்துவிடும்
அவ்வார்த்தைதான்கேட் டல்லியருமேதுரைப்பாள்
அழகுவேண்டுமென்றுசொல்லி ஆரடிகாத்திருந்தார்
மாப்பிள்ளைவேணுமென்று மயங்கினவளாரடிதான்
கணவனார்வேணுமென்று காத்திருந்தவராரடிதான்
வேண்டுமென்றிருந்தாலல்லவோ விசயனைவேண்டுவது
இராசாக்கள்தன்னைப்பேலே நானுமகுடஞ்சூட்டி
மாணிக்கக்கிரீடமது மகுடஞ்சிரசிலிட்டு
கத்திகட்டிசீமைகளை கன்னியரசாளலையோ
எதிர்த்தவரைச்சங்கரித்து எல்லையரசாளலையோ
மண்ணாண்டராசாத்தி மனையாட்டியாயிருந்தால்
பூமியாண்டராசாத்தி பெண்சாதியாயிருந்தால்
கண்டார்நகையாரோ கலியுகத்தாரேசாரோ
பார்த்தார்நகையாரோ பாருலகமேசாதோ
இவ்வார்த்தைதான்கேட் டேதுசொல்வாள்துரோபதையும்
மகுடத்துரைச்சியரே வார்த்தையொன்றுநீர்கேளும்
தலையிலெழுதினதைத் தள்ளிவைப்பாராருமில்லை
எட்டிலெழுதினதை எடுத்தெறிவாராருமில்லை
அன்றெழுதுமாதிசிவன் அழித்தெழுதப்போரதில்லை
கதியைத்துலைக்கலாம் காவேரிநீந்திடலாம்
விதியைததுலைப்பதற்கு வேறுவிதம்நாமறியோம்
கழுத்திலேதாலியது கட்டியிருக்கையிலே
வயிற்றிலேபிள்ளையது வந்துயிருக்கையிலே
ஆயாசப்படுத்துவதுதான் அன்னியருக்கேச்சாகும்
தாணியுள்ளோர்கேட்டால் சற்றேநகைப்பார்கள்

பாலைதரித்துநீ மணமுகூர்த்தஞ்செய்யவேணும்
எப்போதும்போலேயுங்க ளிராச்சியமாளவேண்டும்
மதுராபுரிபட்டணத்தில் மண்டலத்தில்யாருமில்லை
எப்போதும்போலேநீ யெல்லையரசாளுமம்மா
அவ்வார்த்தைதான்கேட் டல்லியம்மாளேதுசொல்வாள்
நல்லதுஆச்சியரே நம்மைவெளியேவிடும்
உங்கள்-மனதின்படியாக விவகாரம்பேசுகிறேன்
கூண்டிலடைத்துமென்னை விவகாரம்பேசவதேன்
விழியெதிரேநிற்கவேணும் விவகாரம்பேசவேணும்
வெளியேவிடுங்களென்றாள் மெல்லியிளங்கொடியாள்
அவ்வார்த்தைதான்கேட் டன்னநடைதுரோபதையாள்
தோகைமயிலாளும் துரோபதையுமேதுசொல்வாள்
கையிலிருக்கும்வாளைக் கன்னியரேவிட்டுவிடு
சக்கிராயுதத்தைநீ சன்னலுலேவீசிவிடு
எவ்வார்த்தைதன்னிநீ யாதென்றும்பேசவேண்டாம்
என்று-நம்பிக்கைதந்தாலே நானும்விடுவேனம்மா
சத்தியத்தைதந்தாலே தையலேவிடுவேனம்மா
அப்படியேயாகுமென்று ஆரணங்குமேதுசொல்வாள்
சொக்கர்திருவாணை ஸ்ரீமீனாட்சிதன்னாணை
ஆதிசிவன்தன்னாணை ஆறுயிரவராணை
அங்கயற்கண்ணம்மை யலர்மேலுதன்னாணை
பரமசிவன்தன்னாணை பார்வதியாள்தன்னாணை
சந்திரசூரியரும் சமஸ்தானதேவதைமேல்
ஈஸ்வரருமீஸ்பரியு மிருடியார்மேலாணையென்றாள்
இந்திரரும்பிரமாவு மெல்லார்மேலாணையென்றாள்
சத்தியந்தவறுவேனென் றெண்ணாதேதையலரே
கதவைத்திறந்தல்லோ கடுகவிடுங்களென்றாள்
அப்போதிரௌபதியாள் ஆரணங்குமேதுசொல்வாள்
சகாதேவராசாவை சடுதியில்வரவழைத்து
கதவைத்திறந்துநீர் கன்னியரைவிடுங்களென்றாள்
அப்போதுசகாதேவன் அன்புடனேவோடிவந்து
தந்திரவுபாயத்திற் சாத்துங்கதவுதன்னை
எட்டித்திறந்தானே இயலானபொற்கதவை
சூஸ்திரமாகவேதான் திறந்துவிட்டான்பொற்கதவை
மின்னலொளிபோல வெளிப்பட்டாளல்லியம்மாள்
சந்திரனைப்போலே தளும்புகிறாள்தோகைநல்லாள்
குன்றுமேற்சந்திரன் குதித்தெழுந்தபாவனைப்போல்
மகுடத்துரைச்சியவள் வந்தாள்வெளியாக
மூடிச்சிவிகைவைத்தார் முன்னாலேயல்லியற்கு
ஏறினாள்சிவிகைதன்னி லெடுத்தார்நெடுங்குடைகள்

அந்தப்புரத்திலே ஆரணங்கைக்கொண்டுசென்றார்
பத்தாங்கட்டரண்மனையிற் பத்தினியைக்கொண்டுசென்றார்
சிவிகைதனைவிட்டிறங்கிச் சென்றுளேமாளிகையில்
கெண்டிகையில்தீர்த்தமது கொண்டுவந்துமுன்னேவைத்தார்
கைகாலுஞ்சுத்திபண்ணிக் கனிவாயைக்கொப்பளித்து
அமுதுண்ணுமண்டபத்தி லாரணங்குபோய்ச்சேர்ந்தாள்
பந்திப்பாய்மேலாக பாங்குடனேவந்தமர்ந்தாள்
வாழையிலைபோட்டு வரிசையுடன்நீர்தெளித்து
மல்லிகைமொக்குபோலே மாற்றுவெள்ளிநிறம்போலே
போசனமும்பாளித்து பொரிக்கறியும்வைத்தார்கள்
பத்துவகைகறியும் பதினெட்டுபச்சடியும்
சர்க்கரைப்பாற்போசனமும் முப்பழவர்க்கமுடன்
உண்டுபசித்தாளே உரிமையுடனல்லியரும்
கைகாலலம்பினார்கள் கனிவாய்சுத்திபண்ணினார்கள்
மற்றுமொருமண்டபத்தில் வந்தமர்ந்தாரெல்லவரும்
சந்தனமும்புட்பமும் தாம்பூலமுந்தான்கொடுத்தார்
வாங்கித்தரித்தார்கள் மண்டபத்தில்கொலுவில்வந்தார்
அன்னநடைதிரௌபதியாள் அர்ச்சுனரைத்தானழைத்து
கலியாணமுகூர்த்தமது கடுகெனவேவையுமென்றாள்
ஓலையெழுதியே ஊருக்கனுப்புமென்றாள்
ஆறாயிரம்பாண்டியர்களனைவோர்க்குமோலையது
எழுதியனுப்புமென்றாளின்பத்திரௌபதையாள்

கலியாணவோலையெழுதி அரசருக்கனுப்புதல்.

அவ்வார்த்தைதான்கேட்டு அருச்சுனர்மனமகிழ்ந்து
அண்ணன்தருமராயருக் கறிக்கையிட்டாரர்ச்சுனனும்
சாஸ்திரப்பிராமணரை சடுதியிலேதானழைத்து
ஊர்க்கணக்கப்பிள்ளைகளை யுத்தமரைவரவழைத்து
சீரானகணக்கர்களைச் சிறப்புடனேயழைத்து
திங்கட்கிழமையிலே தசமிநல்லமுகூர்த்தமதில்
அல்லியர்க்குமர்ச்சுனற்கு மணமுகூர்த்தம்வைத்து
ஆறாயிரம்பாண்டியர்களனைவோரும்வாருமென்றார்
எழுதுமென்றாரோலையது இன்பமுடன்தருமலிங்கம்
அப்போதுகணக்குப்பிள்ளை அன்புடனேவோலைகொண்டு
ஈழப்பனையோலை இருபக்கங்காம்பரிந்து
தாழப்பனையோலை தலைபக்கங்காப்பரிந்து
வாரியவோலையிலே மஞ்சளைமேற்பூசி
ஆறாயிரம்பாண்டியர்களையண்மார்தங்களுக்கு
வக்கணையாகவேதான் வைத்தெழுதினார்கள்
எழுதினவோலைதன்னைச் சுருள்முடித்துத்தந்தார்கள்
செந்திரிக்கந்தான்போட்டுத் திருவடிக்கீழ்வைத்தார்கள்

சாஷ்டாங்கமாய்த் தண்டனிட்டு நடந்தாரே கணக்கப்பிள்ளை
ஓலைகளை யெடுத்து உத்தமனார் தருமலிங்கம்
காற்றிலதிசயமான கடுந்தூதரையழைத்து
கையுடனே தலைகொடுக்கும் மல்லர்களைத்தானழைத்து
ஓலைகொண்டு போகுமென்றார் உத்தமனார் தருமலிங்கம்
இந்திரபுரந்தாண்டி இயலானகாடுவிட்டு
காடுசெடி தாண்டிக் கரியமலைதான் தாண்டி
ஆறுகளைத் தாண்டி அதிகவனந்தாண்டி
குன்றுமலை தாண்டிக் கொப்பெனவே தூதுவர்கள்
மதுராபுரிபட்டணத்தில் வந்துவிட்டார் தூதர்கள்
பாண்டியராஜர்முன்னே பாங்குடனே ஓலைவைத்தார்
ஆறுபேர்ப்பாண்டியர்கள் தர்மமுடிராசாக்கள்
சாஷ்டாங்கமாகவே சரணமிட்டார் தூதர்கள்
ஏறிப் வருவோமென்றார் ராசாக்கள் பந்தலுக்கு
ஆறுபேரவர்களு மையன்மார் பயணமானார்
பொன்னுமலைநாடாளு போரெழுதியவர்கூட
மற்றுமுள்ளராசாக்கள் மன்னர் பயணமானார்
யானைபரிவார மடங்கலும் பயணமானார்
தூரியோதனராசனுக்குச் சுருளோலைவந்ததுகாண்
துருபததேசனுக்குச் சுருளோலைவந்ததுகாண்
மத்திரதேசனுக்கு வந்ததேஓலையது
மண்டலத்துராசருக்கு வந்ததேஓலையது
கல்யாணஓலை தன்னைக்கண்டந்தராசாக்கள்
சகலமானபேரும் சந்தோஷப்பட்டார்கள்
இத்தரையாண்டதாரு துரைகளெல்லாம்வாறார்கள்
மண்டலத்தையாண்டவர்கள் வருகிறார் துரைகளெல்லாம்
மேளமுழங்கியது மூமண்டலந்தானதிர
செந்தூளெழும்பியது சூரியனைக்கப்பிற்றங்கே
கருந்தூளெழும்பியது கதிரோனைக்கப்பிற்றங்கே
முத்தைப்பிளந்தார்கள் மூன்றுங்கால்நட்டார்கள்
பவளம்பிளந்தார்கள் பந்தக்கால்நட்டார்கள்
வெள்ளியால்கால்நிறுத்தி வெற்றிலையால்பந்தலிட்டார்
மூங்கில்பிளந்தார்கள் முக்குடும்பந்தலிட்டார்
கரும்பாலேகால்நிறுத்தி அரும்பாலேபந்தலிட்டார்
பச்சோலைப்பந்தலது பாங்காயலங்கரித்தார்
வன்னிமரம்கமுகுமரம் வாசலெல்லாம்நாட்டினார்கள்
சோலைபலாமரமும் தெருவெல்லாம்நாட்டினார்கள்
வாழைமரங்களது வாசலெல்லாம்நாட்டினார்கள்
மாவிலைத்தோரணமு மகுடதோரணமுங்கட்டினார்கள்
எங்கெங்குஞ்சோலைகளு மெத்திசைக்குந்தோரணமும்

கண்ணாடிசல்லிகட்டி கவரியான்குச்சுவிட்டு
பஞ்சவர்ணக்கிளிகளைப் பந்தலிலேதூக்கிக்கட்டி
அன்னமும்மயிலினமும் அழகும்வரக்கட்டினார்கள்
சன்னலிலேபனிநீருஞ் சாடினாரெனத்திசையும்
நிலக்கோலமிட்டார்கள் நிலமெல்லாம்பூத்தெளித்தார்
அத்தர்புனுகுகளை அள்ளித்தெளித்தார்கள்
பட்டுரத்னப்பாய்போட்டார் பந்தலுக்குள்ளாக
சாரத்தலையணையுஞ் சகலாத்துதிண்டுகளும்
அந்தச்சமயத்தில் அனந்தங்கோடி ராசாக்கள்
வருகிறதுரைகளென்றால் மட்டுமிதங்களில்லை
வாகனங்கள்விட்டிறங்கி வந்தார்துரைகளெல்லாம்
சந்தனவடிவழகர் தருமருக்கேதெண்டனிட்டார்
பந்தலில்வந்தமர்ந்தார் பாங்குள்ளராசாக்கள்
அத்தண்டபெண்களுடனே வாறஞ்சிவிகைவிட்டு
அந்தப்புரத்திலே யனைவரும்போய்ச்சேர்ந்தார்கள்
சாஸ்திரபிராமணர்கள் சகலரும்வந்தமர்ந்தார்
செந்நெல்லைகீழ்ப்பரப்பிச் சேஷமணைபோட்டு
மணவரையைப்போட்டார்கள் மாப்பிள்ளையைக்குந்தவைத்தார்

அல்லியரசாணிக்கு அருச்சுனன் மாலையிடுதல்

மாப்பிள்ளையும்பெண்ணுமாக வந்தமர்ந்தார்பந்தலிலே
சேஷமணையிலே சீருடனேவந்தமர்ந்தார்
செந்நெல்லரிசிகொண்டு தெற்குநோக்கிப்பொங்கலிட்டார்
நாவிதன்வந்துநின்றான் நல்லமணப்பந்தலிலே
பாலால்முகந்துடைத்தார் பத்துவிரல்நகம்வாங்கி
பணிசெய்வோன்சங்கூத பார்த்தீபர்குடைகவிய
சங்கீதமேளங்கள் சபையில்முழங்கிநிற்க
வெற்றிச்சங்கூதவே விருதுமேளமடிபடவே
சீக்கைகழித்தார்கள் சீராயிருவருக்கும்
மூன்னூறுபிராமணப்பெண் மூன்றுநலங்குசெய்தார்
எழுபிராமணப்பெண் ணேழுநலங்குசெய்தார்
மஞ்சனச்சாலையிலே மஞ்சனீராட்டிவைத்தார்
ஸ்நானங்களாட்டினார் தாமமுடியார்க்கும்
நீலவிழியாட்கு நிலங்கிள்ளிக்காப்புமிட்டார்
ஈரத்துகில்களைந்து இழைசேர்ந்தபட்டுடுத்தி
நனைந்ததுகில்களைந்து நாகரீகப்பட்டுடுத்தி
மாப்பிள்ளையும்பெண்ணையுமா மண்டபத்தில்கூட்டிவைத்தார்
அலங்காரப்பண்ணலுற்றா ரழகாயிருவரையும்
எழில்விசயராசாவை எப்படியலங்கரிப்பார்
கோதிமுடித்தார்கள் கோபாலன் மைத்துனர்க்கு
கட்கொட்டைபோட்டார்க ளருமாலைக்கட்டினார்கள்

வண்டிருத்தலைப்பாகை மன்னனுக்குத்தான் தரித்தார்
முத்துக்கடுக்கனது முகமழகாய்காதிலிட்டு
முத்துக்கலிக்கத்துருய் முன்னெத்தியிலேசொருகி
லொடர்சிங்கத்துருவும் நடுத்தலையிலேசொருகி
ஒட்டுக்கடுக்கனது வலகம்விலைபெறுமே
பச்சைக்கல்முருகுகளைப் பதித்தார்களர்ச்சுனற்கு
வச்சிரக்கடுக்கனுடன் மாணிக்கக்கடுக்கனிட்டார்
கண்டசரங்களுடன் கனகவிதவாபரணம்
மோகனமாலையுடன் முத்துச்சரப்பளியும்
நூர்தாம்பிறைபோல அடுக்கடுக்காய்ப்பதக்கமும்
சிங்கமுகக்கடகம் சிரானபாசிபந்து
அரைஞாண்கயிறுகளு மைந்துவிரல்மோதிரமும்
கீட்டிவைக்குங்கால்களுக்கு நெரிஞ்சிப்பூச்சல்லடமாம்
மண்டியிடுங்கால்களுக்கு மாதளம்பூச்சல்லடமாம்
சந்திரகாந்திதட்டிகட்டித் தாமரைப்பூசுங்குவிட்டு
பூவிழைத்தஅங்கிதன்னைப் பூட்டியலங்கரித்து
பொன்னிழைத்தபட்டாடை போட்டார்கள்வல்லவாட்டு
சிவசிவாவென்றுசொல்லித் திருநீறுகாப்பணிந்து
சந்தனப்பொட்டுமிட்டார் தருமர்தம்பியருச்சுனற்கு
மல்லிகைமாலைதன்னை மார்பிலணிந்துகொண்டு
அருச்சுனனைச்சோடித்தா ராழகுபெறராஜரெல்லாம்
ஆருயிரப்பெண்க ளனைவோருஞ்சோடித்தார்
சப்பங்கிபெண்ணைக்கொண்டு தடவிமயிராற்றி
சீவிமயிராற்றிச் சிமிள்போலகொண்டையிட்டு
ஒவ்வொருபூவுக் கொவ்வொருபொன்னிதழாம்
கட்டிமுடித்தகொண்டை சாதின்கீழ்சோதிமின்ன
சுற்றிமுடித்தகொண்டைச் சூரியனைத்தோற்கடிக்கும்
ஆண்மயிலைப்பெண்மயிலை சடையில்சேர்த்தார்கள்
சந்திரனைசூரியனைச் சரியானபிறையணிந்து
பக்கத்திற்சேர்த்தார்கள் பல்லியாழ்வார்பிறையும்
பல்லிடுமெல்லிடு பக்கமயிர்கொலுசும்
அருகுகொப்புசொருகுவாளி அன்னகொப்புமணிந்தார்கள்
பச்சைககல்முருகுகளும் பதித்தார்களல்லியற்கு
மூக்குத்திபட்டிகை மேற்கத்திரிபாவிலியும்
நாகர்க்கரையது நடுக்கழுத்தில் பூஷணமும
ஒற்றைசரடுகளாம் ஒருபுறமாம்பொற்சரிகை
முத்துவடங்களாம் மோகனமாலைகளாம்
வட்டச்சரப்பளியாம் மார்நிறைந்ததாழ்வடமாம்
ஐந்துவிரலுக்கு மழுத்தியமோதிரமும்
பத்துவிரலுக்கு பதித்தமுத்துமோதிரமாம்

பாடகந்தண்டைகளாம் பருஞ்சிலம்புநாலாழி
காலாழிகல்லணையாம் பீலாழிபில்லணையாம்
அஷ்டாபரணமெல்லாம் அலங்காரம்பண்ணினூர்கள்
கோடித்தோமென்று சொல்லித்தெண்டனிட்டார்கள்
அருச்சுனரையல்லியரை யழைத்தார்கள்பந்தலிலே
மணவறையின்மேலாகவந்தாரிருவருமாய்
அரசாணிநாட்டினார்க ளம்மிதழுவிவைத்தார்
சாலுங்காரகமும் சட்டமுடன்வைத்தார்கள்
அம்மிவலமாக அரசாணிமுன்பாக
குத்துவிளக்குகளும் குடவிளக்குமுன்புவைத்தார்
பார்த்திபனர்ச்சுனர்முன் பாலியெதிராக
ஓமப்புகையிலே யுடனிருந்துவேதஞ்சொல்ல
ஆறுயிரம்பிராமணர்க ளங்கிருந்துவேதஞ்சொல்ல
சாப்பரிசிதான்வழங்கிச் சந்தனந்தரித்தார்கள்
பாவுங்கரு நாலு மஞ்சளுமெள்ளிதையும்
தாலியுங்கூறையும் தந்தாரேபாண்டியர்கள்
சாலுங்கழுவியே கன்னிகைதானமிட்டார்
தந்தேனுனக்கிந்தேன் தாரைபிடியுமென்றார்
மாவுங்கழுநாலும் மஞ்சளுடனரிசி
அந்தண்டபிராமணர்க ளஸ்தமிட்டமங்கிலியம்
பட்டணத்துராசாக்கள் மன்னர்களஸ்தமிட்டார்
ஆறுயிரம்பாண்டியர்க ளையமாரஸ்தமிட்டார்
மாயன்பெருமாளு மலைராமரஸ்தமிட்டார்
ஆகாரமென்றுசொல்லி யழுத்தமிகுமங்கிலியம்
சிவசிவாவென்றுசொல்லித்தேர்விசயன்கட்டலுற்றான்
மணத்திலெருனிய மன்னன்தரிக்கலுற்றான்
பிரமமுடிமூன்றுமுடி போட்டானேபுண்ணியனும்
தேவர்துந்துமிமுழங்கத் தேவர்பூமாரிபெய்தார்
சங்கீதமேளமது சபையில்முழங்கிவர
அஷ்டதேபேரிகைதான் அந்தரத்தானதிர
முப்பத்துமுக்கோடி முனிவர்கள்தேவரெல்லாம்
ஆகாயவீதியெல்லாம் அருச்சுனரைவாழ்த்தினரே
அருச்சுனர்க்குமல்லியர்க்கு மட்சதையெறிந்துவிட்டார்
வாழ்த்தியேபோனார்கள் வானவர்களனைவருந்தான்
அரசாணிசுற்றினார்கள் அம்மிமிதித்தார்கள்
அப்போதருச்சுனரு மல்லிபெருமாளும்
அருந்ததிபூசைபண்ணி வெள்ளிப்பொரியிறைத்தார்
கணையாழிமாற்றினார் கட்டழகரிருவருமாய்
மாலைதன்னைமாற்றி மகிழ்ந்தாரிருவருமாய்
அந்தண்டபோர்களும் அன்னியேசேலையிட்டார்

வந்திருந்தராஜாக்கள் வந்தவர்கள்மொய்யுமிட்டார்
சாப்பிரிகிதான்வழங்கிக் கங்கணமவிழ்த்தார்கள்
அனைவரையுந்தெண்டம்பண்ணி அரண்மனையினுட்புகுந்தார்
பாளிகைபாய்மேலே பாங்குடனேபோய்ச்சேர்ந்தார்
பாலும்பழங்களுண்டு பசியாறிவீற்றிருந்தார்
ஆஸ்தானப்பந்தலிலே யலங்காரபந்தலிலே
பொய்பாக்குவெற்றிலையு முடிமன்னராஜருக்கு
சந்தனபுட்பமுந் தாம்பூலம்வழங்கினரே
ஆயிரம்பிராமணர்க்கு மதிநிபரதேசிகட்கும்
பலதானங்கொடுத்தார்கள் பிராமணருள்ளவர்க்கு
மண்டலத்துராஜாக்கள் வந்திருந்ததுரைகளெல்லாம்
போசனசாலையிலே போய்புகுந்தாரெல்லோரும்
பந்திப்பாய்போட்டார்கள் பாங்குடனேவந்தமர்ந்தார்
வாழையிலைபோட்டு வரிசையுடன்நீர்தெளித்தார்
முப்பழமுஞ்சர்க்கரையும் முடிமன்னர்வைத்தார்கள்
புத்துருக்குநெய்வார்த்து போஜனமுண்ணுமென்றார்
அத்தளிகையுண்டபின்பு மறுதளிகைபின்னேவைத்தார்
மல்லிகைமுல்லைபோலே மாற்றுவெள்ளிநிறம்போலே
போசனங்கள்பாலித்துத் பொற்கறியும்வைத்தார்கள்
பத்துவிதக்கறியும் பதினெட்டுப்பச்சடியும்
எட்டுவிதக்கறியும் இயலானபோஜனமும்
பொன்போல்பருப்புவைத்து புத்துருக்குநெய்சொரிந்தார்
அத்தளிகையுண்டபின்பு மறுதளிகைவைத்தார்கள்
இனக்கோச்சல்தயிருமிட்டா ரெலுமிச்சங்காயும்வைத்தார்
போசனங்களுண்டபின்பு பொடியிட்டுக்கைதிமிறி
கைகால்கள்சுத்தம்பண்ணிக் கனிவாயுங்கொப்பளித்தார்
சித்திரப்பந்தலிலே வந்தார்துரைகளெல்லாம்
சுகந்ததாம்பூலங் கட்டோடேவழங்கினார்கள்
யானையலங்கரித்து அருச்சுனற்குக்கொண்டுவந்தார்
அத்தனமஞ்சஞ்சோடித்து அல்லியற்குக்கொண்டுவந்தார்
யானைமேலர்ச்சுனனும் மத்தளத்திலல்லியரும்
ஏறினார்குடையா யெடுத்தார்நெடுங்குடைகள்
சண்டாளைபறக்கவிட்டார் தனிபேரிகையடித்தார்கள்
யானையின்மேல்பேரிகையும் குதிரையின்மேல்டங்காவும்
ஒட்டகமேல்நகரத்துட னிசைமுழங்கவேதான்
சங்கீதமேளமது சபையில்முழங்கவேதான்
எக்காளஞ்சின்ன மெழில்பிறவுதிவா
பாஞ்சசன்னிய தேவதந்தய் பலவாத்தியமுழங்க
சாமரங்கள்சின்னப் பெக்காளம்ஊதிவா
பகல்வத்திமத்தாப்புப் பட்டப்பகல்போல்பிடித்தார்

புருஷவேடிபாணம் போதமுழங்கிறதே
ஆடாதகூத்தாகளும் அரும்பயலிசாடகரும்
கேளிக்கைதன்னுடனே கீர்த்திமன்னர்க்களரும்
காலகுறிதருதகோலம் கண்ருய்வருகிறர்கள்
தவ்வலிர்தெளிப்பார்கள் சாம்பிராணிபோடுவார்கள்
வானமுகநறுகளும் வாசலெல்லாம்கடடுவார்கள்
சிலக்கோலமிடுவார்கள் நிலமெல்லாம்பூக்கொளித்தார்
ஊர்கோலமாகவே புத்தமர்கள்வந்தார்கள்
ஆலமுடம்சுற்றினர்க வர்சகனத்துமல்லியற்றும்
திருஷ்டிகள்சுத்திவே தெருவிலேகொட்டுவார்கள்
வாகனத்திலவிட்டிறங்கி மண்டபத்திலேபோய்புகுந்தார்
பாலும்பழங்களுண்டு பயோதிலிற்றிருந்தார்
ஐந்தாநாள்சென்றபின்பு அத்தண்டாளர்களும்
அவரவர்மாளிகைக்கு அனைவோரும்போவோமென்று
தாமர்செல்வருலத் தானடந்தார்மாளிகைக்கு

பாண்டியரும் அல்லியரும் விடைபெற்று மதுரைக்குவந்தது.

ஆறுபிரவரையன்மார்தங்கள்முதல்
மூடுசிவிகையிலே மெல்லியளாவைத்துக்கொண்டு
காலாளுஞ்சேவகரும் கடுகப்பயணமானார்
தருமர்செல்வருளச் சந்தோஷமாயெழுந்து
யானைகளுஞ்சேனைகளும் பரிவர்களுமாக
மேளமுழங்கிவர முடிமன்னர்போனார்கள்
மதுராபுரிபட்டணத்தில் வந்தார்களெல்லவரும்
நான்குதெருக்கோலம்வந்து நாயகியுடபோய்ச்சேர்ந்தாள்
மண்டபத்துக்குள்ளாக வந்தமர்ந்தாரெல்லோரும்
அப்போது அல்லியரு மாதர்க்குறித்தானன்

அல்லியரசாணி பாலகனைப்பெற்றது.

ஓராந்தான்மாதமது ஒருதிங்கட்கிழமையிலே
இரண்டாந்தான்மாதமது இரண்டுதிங்கள்தானுச்சு
மூன்றாந்தான்மாதமது முத்துகொங்கைமுகங்கறுத்து
நான்காந்தான்மாதமது கல்மசங்கையாளுளே
ஐந்தாவதுமாதம் அதவயறுகனத்திடுமாம்
ஆறாந்தான்மாதத்திலே யங்கமெல்லாந்தங்கநிறம்
ஏழாந்தான்மாதத்திலே இசைந்தழுமந்தஞ்செய்தார்
எட்டாந்தான்மாதத்திலே இனிப்புந்தவிப்பானுள்
ஒன்பதாம்மாதத்திலே உடம்பெல்லாம்நோகுதென்பாள்
பத்தாந்தான்மாதத்திலே பாலகனைப்பெற்றெடுத்தாள்
பப்புருவாகனென்று பாண்டியர்கள்பெயருமிட்டார்
மாணிக்கத்தொட்டிலிலே வளருதிருவிசித்திரனும்
இந்தக்கதைதன்னை இன்பமாய்ப்பாலவைகளும்

மிக்கதையாமிக்கதையை விரும்பியபூவைகளும்
அன்புமிகக்கொண்டு அல்லிக்கதையைப்படிக்க
நன்பமிகத்தெரிந்து துரிதமுடன்படிக்க
சேசதையார்தான்வாங்கிக் கொள்ளமனங்களிக்க
பேதையர்தான்வாங்கிப் பெருங்களிப்பில்தான்குளிக்க
சொக்கராயகர்படிக்க சுத்தமாய்க்கதையை
அக்கரையாகவே அனைவோரும்படிப்பதற்கு
இக்கதையைப்பாவலரும் இசைந்துகேட்டவர்கள்
சரிமைகப்பதியதனைச் சேர்வார்கள்வையகத்தில்
நன்மையாய்க்கேட்டவர்கள் அனைவோருந்தான்வாழி
அருமையாய்க்கேட்ட பெரியோர்கள்தான்வாழி
பாருலவிக்கதையைப் படிப்பவர்கள்தான்வாழி
சீருடனல்லிகதை சிந்திப்போர்தான்வாழி
ஆதிசிவனருளால் அனைவோருந்தான்வாழி
மாயனருளாலே மண்டலங்கள்தான்வாழி
காயங்களுள்ளளவும் சுகிப்புடனேதான்வாழி
சொக்கருளாலே சுகமாகத்தான்வாழி
இக்கட்டுவாராமல் இசைந்துமிகவாழி
அங்கயற்கண்ணம்மை யருளாலேதான்வாழி
ஆல்போல்தழைத்து அருகுபோல்வேரோடி
மூங்கில்போல்சுற்றம் முசியாமல்தான்வாழி
தீங்கில்லாமாதர்கள் செழித்துமிகவாழி
ஊழிஊழிதோறு முலகங்கள்தான்வாழி
வாழிவாழியென்று வரமளித்தாரீஸ்வரனர்

வாழி-விருத்தம்.

மாதவத்தோர்கள்வாழ்க மற்றுமுள்ளதேவர்வாழ்க
வேதமும்வாழ்கவீர சைவத்தோர்தாமும்வாழ்க
ஆதலர்முனிவர்வாழ்க அந்தாரிஷிகள்வாழ்க
பூதலம்வாழ்கப்பூமி புவியுள்ளோர்வாழ்கதானே.

அல்லியரசாணிமாலை முற்றுப்பெற்றது.

மங்களம்-ஜெயமங்களம் நித்தியசுபமங்களம்.

பூமிபரிபாலனுக்கும் புகழ்வடிவேலனுக்கும்
சேமமிகுசீலனுக்கும் செல்வனனுகூலனுக்கும்-ஜெய

வில்லமர்பாண்டவர்க்கும் விண்ணவர்களாண்டவர்க்கும்
தொல்லுலகை யாண்டவர்க்கும் துய்யமுத்தாண்டவர்க்கும்-ஜெய

கற்புநிலைவிழியாட்கும் கனியனையமொழியாட்கும்
பொற்புறுசுழியாட்கும் பொருகயல்விழியாட்கும்-ஜெய

மன்னர்புகழ்கேசனுக்கும் வளங்கொள்மகாராஜனுக்கும்
பன்னரியகேசனிக்கும் பத்திவிசுவாசனுக்கும்-ஜெய

பாருலகிலல்லியற்கும் பன்னின்பொழிமெல்லியற்கும்
சீருலகிலல்லியலரும செருக்கள்விஜயருக்கும்-ஜெய

பாண்டியர்கள்யாவருக்கும் பரிமளசீலருக்கும்
ஆண்டியெனுந்தேவருக்கும் அவரடியார்யாவருக்கும்-ஜெய

மங்களம்-முற்றிற்று.